

# இரா. பத்மநாதன்

## நினைவுகளோடு


PR



# இரா. பத்மநாதன்

## நினைவுகளோடு...

45295



**Ra. PATHMANATHAN**

Ninaivugalodu

Layout & Cover Design by :
**Mithra Arts & Creations Pvt. Ltd.,**
32/9 (Old 375) Arcot Road Chennai 600 024 INDIA
Ph : (044) 2372 3182, 24735314
e-mail : mithra2001in@yahoo.co.in
mithra_2005@eth.net





அப்பா என்கின்ற சொல்
எங்களுக்கு மிக ஆழமான மகிழ்விக்கின்ற
உணர்வாகவே இருந்து வந்தது, எப்போதும்...

அப்பா எங்களுடன் இருந்த காலம் அவரின்
வாழ்நாளில் குறுகியதாகவே இருந்தது.
நாங்கள் அம்மாவுடன்
களுதாவளை என்னும்
கிராமத்திலும், அப்பா கொழும்பிலும்
வேலை மற்றும் சேவை என்று
ஊர் ஊராக சென்று கொண்டேயிருப்பார்.

வருடத்திற்கு ஒருமுறை அல்லது
இருமுறை வீட்டிற்கு வருவார் அதுவும்
பலதடவைகள் ஒலிப்பதிவுக்
கருவியுடன்
ஏதேனும் நிகழ்ச்சி வானொலியில்
ஒலிப்பரப்புவது
விடயமாக, அத்தோடு
அவர் வீட்டிற்கு வரும்
நேரம் இரவாகிவிடும்.

அப்போது நாங்கள் அப்பாவிடம் காத்திருந்த எதிர்பார்ப்புகளின், ஏக்கத்தில் கேட்போம் இரா. பத்மநாதன் என்பது நீங்கள் இரவில் வருவதாலா என்று? அப்பாவோ சிரித்துக்கொண்டு அணைத்து கொள்வார். அவரின் ஸ்பரிசம் எங்களுக்கு இணையில்லா ஆனந்த மூட்டும்.

என்றும் அப்பாவைப் பற்றிய மேன்மைகளை கூறிக்கொண்டே வருவார் எங்கள் அம்மா. மறுபிறப்பு என்று ஒன்று இருந்தால் இவருக்கே பிள்ளை களாக மீண்டும் பிறக்க வேண்டும் நாங்கள்.

அப்பா எங்களுக்கு மட்டும் சொந்தமில்லை அவரின் உறவுகளின் வட்டம் பெரியது என்பதும் நாங்கள் புரிந்துகொண்டது தாமதமாகத்தான்.


அப்பாவின் நண்பராக மட்டுமின்றி சகோதரனாகவும், மாமாவாகவும், தாத்தாவாகவும், தந்தை ஸ்தானத்திலும் உறவானவர்கள் எண்ணிலடங்கார். சொந்தநாடு மட்டுமின்றி தெற்காசியாவின் பல நாட்டைச் சேர்ந்தவர்களும் சொந்தம் கொண்டாடுகின்றார்கள்.

அப்பாவை பற்றிய நினைவுகளைப் பதிவாக்கும் இவ்வேளையில் குறிப் பிட்ட சிலரை மட்டுமே உள்ள கால அவகாசத்தில் அணுகமுடிந்தது. இன்னும் எத்தனையோ அப்பாவின் இனிய அன்புக்குரியோரின் நினைவுகள் இடம்பெற வேண்டும். காலத்தின் காரணமாக ஏக்கமாக தொடர்கிறது...

**மகள், மகன்கள்**



திமிலைத்துமிலன்



# பல்சுவைக் கலைஞன் பத்மநாதன்

திமிலைநகர்த் திருமாலின் ஆலயத்தைச்
செம்மையுறத் தரிசிக்க வெள்ளிதோறும்
அமிர்தமெனும் அழகியதாய் வருவதுண்டு
அவரினது ஒரேபுதல்வன் பத்மநாதன்
தமிழ்குலவும் மட்டுநகர்ப் புளியந்தீவில்
தந்தையினை இளம்வயதில் இழந்தோனாக
அமைதிமிகு மாணவனாய் அன்னையோடு
அவன்வருவான், நினைவின்றும் அழியவில்லை

இல்லத்தில் என்அன்னை யோடுபேசி
இருப்பதுண்டு, அவன்தாயார்; ஆனபோதும்
தள்ளிப்போய் அவன்நிற்பான் வீதியோரம்
சப்பாத்தைக் கற்களிலே தேய்த்தோனாக.
வெள்ளையுள மனதக்காட்டும் அவனின் கண்கள்
வெட்கத்தைக் கூடஅது வெளியிற் சொல்லும்;
பள்ளிக்குப் போகுமிளம் பையன் நானோ
பழகியதாய் எனதுமனப் பதிவிலில்லை.



பதினாலு வயதாகு முன்னர்நானோ
பாப்புனையும் முயற்சியிலே பங்கெடுத்தேன்
அதனாலே கல்லூரி ஆசான்மார்கள்
அடியேனைக் கேலிசெய்வார் அந்தநாளில்
எதனாலோ 'அண்ணா'வின் இயக்கக் கொள்கை
ஈர்த்ததனால் இராசதுரை யோடிணைந்து
இதமான பகுத்தறிவு இயக்கத் தொண்டில்
ஈடுபட்ட நினைவுண்டு பத்மநாதன்.

நாதனுக்கு இசையினிலும் நாட்டமுண்டு;
நளினமுறு நடனத்தில் நாட்டமுண்டு;
ஆதலினால் அக்காலக் கலைஞரோடு
அவன் நெருங்கிப் பழகியதில் அர்த்தமுண்டு.
சாதலதே நேர்ந்தாலும் தமிழரெல்லாம்
தலைநிமிரத் தமிழரசுக் கட்சித்தொண்டில்
காதலொடே ஈடுபட்ட பத்மநாதன்
கலங்காத துணிவுளம்நான் கண்டதுண்டு.

உண்டான விடுதலைக்காம் எழுச்சிப்போரில்
ஒருமயிற்கல் திருமலைமா நாடதற்குச்
சென்றஅறப் பவனியிலே பத்மநாதன்
செயற்பாட்டின் சிறப்பினைநாம், மறக்கலாமோ?
அன்றந்த இராசதுரை, பத்மநாதன்
அவர்களது கோரிக்கை யதனையேற்று
நின்று "திரு மலைச் சபதம்" காவியத்தை
நெஞ்சுருகிப் படைத்தளித்தேன், நினைவிலுண்டு.

நினைப்பதனை முடிப்பவன்தான் கருமவீரன்;
நிகரற்ற 'சங்கிலியன்' நாடகத்தை
இணைந்துநடித் திடத்துணிந்தார்; பாடல் எல்லாம்
இயற்றியளித் தடுமாறு என்னைக் கேட்டார்
புனைந்தளித்தேன்; நகைச்சுவைப்பாத் திரத்தையேற்று
பூரித்துச் சிரித்துவிழ நடித்துக் காட்டி
அனைத்தினிலும் வல்லதனிக் கலைஞன்என்ற
அழியாத புகழ்பூத்தோன் பத்மநாதன்







பத்மமது தாமரைப்பூ, நாதன் என்றால்
பணியுமொரு உயர்தலைவன் - பிரமனாவான்
உத்தமனாம் இவன்கூடக் கலைப்படைப்பில்
உயர்ந்திட்ட பிரமனென உணர்தல்வேண்டும்
எத்தனையை இவன் படைத்தான்! நாடகங்கள்,
எழுத்தாக்கம் ஏராளம், இவற்றினோடு
பத்திரிகை ஆக்கங்கள், வானொலிக்காம்
படைப்புக்கள் என்றுபல, பன்னூறன்றோ

அன்றொருநாள் மாணவனாய் அவனைக் கண்டேன்
அதன்பின்பு எழுத்துலகில் நண்பனானான்
வென்றெடுக்கும் விடுதலையில் வீரனாக
வெவ்வேறு கலைகளிலும் குரிசிலாக
அன்றிவெகு பத்திரிகை ஆசான்ஆக
அருமைமிகு வானொலியின் கலைஞனாக
இன்றுலகை வென்றுவிட்ட தேவனாக
இவைதவிர வேறென்ன இனிநான் காண்பேன்!

"மூன்றாலங் கண்டடியா"னாகக் கண்டேன்.
முது"ஆல யடிச்சோலை யானா"யானேன்
ஆன்றோர்கால் உதவிபுரி யாளாய்ச் செட்டி
யாருடனே உலகவளம் வந்தளந்தான்.
சான்றினுடன் வானொலிக்காயக் கிராமியத்தை
சாற்றென்றான் "வயலடியின் வழக்கு"ச் சொன்னேன்
கோன்மகனாய்ப் பிறப்பெடுத்துக் குலவுராச
குமாரனென இலக்கியங்கள் கொண்டுதந்தான்.

தந்தவனை முதிர்ந்தகனியாகக் கண்டேன்
தளர்ந்தநிலை, ஆனாலும் தழுவிக் கொண்டான்.
பந்தமொடு உளப்பாசம் பகிர்ந்து கொண்டோம்.
பன்னாள்முன் சுதந்திரனில் படைப்பாய்வந்த
சிந்தையள்ளும் சிறுகதைகள், கவிதை பற்றிச்
சிறுபொழுது இரைமீட்டோம்; அதன்பின் என்ன
விந்தையடா; அடா இறைவா, பத்மநாதன்
மீண்டுமொரு முறைதழுவ விதிவைத் தாயா?





வைத்துவிட்டுப் போவதென்ன? எச்சம்தானே!
மனிதகுலம் தழைப்பததன் வழியிலன்றோ
கைத்தலத்து அவன்வைத்துச் சென்றவித்தைக்
கலைச்சொத்தாய் நம்கொண்டு கவின்படைப்போம்
அத்தினத்தில் அவனொடுநான் விருதுபெற்றேன்
அளித்தவர்கள் இந்துகலா சாரத்தார்கள்
எத்தினத்தில் இனிக்காண்பேன்? கவலையில்லை
இனிவாழ்வான் பல்கலைஞன் எம்முளத்தே!

# என் இனிய நண்பன் பத்மன்



இரா. பத்மநாதன் என்னுடன் கொண்ட அன்பு நட்பு அறுபது ஆண்டுகளுக்கு மேலானது.

கண்ணகி நாடகத்தில் நான் கண்ணகியாக நடித்தபோது அந்நாடக ஒத்திகையைப் பார்க்க வந்திருந்த திரு. பத்மநாதனை மாதவியாக நடிக்க வைத்தவர். நாடக இயக்குநர். இவர் மதுரையைச் சேர்ந்தவர்.

கண்ணகியும் - மாதவியும் சிலப்பதிகாரத்தில் வடதுருவம் தென்துருவமாகவும் இருப்பவர்கள். நானும் பத்மனும் இணைபிரியா நண்பர்களாக இருந்தோம்.

சுயமரியாதை இயக்கத்தில் பத்மனை சேர்த்தேன். அவருக்கு நான் முதலில் கொடுத்தது அறிஞர் அண்ணாவின் "கம்பரசம்" "வீட்டுக்கோர் வாசிகசாலை" என்ற நூல்களாகும். தமிழரசுக் கட்சியை மட்டக்களப்பில் நான் அறிமுகம் செய்து பிரசாரத்தில் ஈடுபட்டபோது என்னோடு தோளோடு தோள் சேர்ந்து உழைத்தவர்.

தமிழரசுக்கட்சி நிதிக்காக சங்கிலியன் நாடகம் எழுதி சங்கிலிய னாக நடித்தேன். அந்நாடகத்திலும் பத்மன் நடித்தார்.

நடித்தது மட்டுமல்ல அந்த நாடகத்தில் என்னை முற்றாக ஒழித்துக்கட்ட இருந்த சதியை முறியடித்து என்னைக் காப்பாற்றினார். கலாநிதி இராஜதுரை என்னும் மலரில் அவர் எழுதிய கட்டுரையில் பத்மன் அச்சதியை எழுதியுள்ளார். சங்கிலியனைச் சுடுவதற்கு வைத்திருந்த துவக்கை பத்மன் திறந்து பார்த்திருக்கின்றார். வெற்றுத் தோட்டா வைப்பதற்குப் பதிலாக நிஜதோட்டாவை யாரோ வைத்திருக் கிறார்கள். தெய்வாதீனமாக துவக்கைப் பார்த்த பத்மன் தோட்டாவைக் கழற்றியிருக்கிறார். சுடும் கட்டத்தில் வெளியில் பட்டாசு வெடிக்கச் செய்திருக்கின்றார். என்னுயிர் காத்த உத்தம நண்பன் பத்மன்.

"சூடுசாம்பலாச்சி போடியாரே" என்ற நாடகத்தை மாஸ்ரர் சிவலிங்கத்துடன் சேர்ந்து நடித்து கட்சி வளர்வதற்கு செயல்பட்டவர். இந்தியாவில் இருவரும் பல மைல் தூரம் பயணம் செய்து கலைப்பணி செய்த காலங்கள் மறக்கமுடியாது. பத்மன் பழகுவதற்கு இனிமை யானவர். என்மீது உயிரையே வைத்திருந்தவர். நானும் அப்படியே அவர் மீது அன்பைச் சொரிந்திருந்தேன்.

பத்மன் சிறந்த நடிகர், நாடக ஆசிரியர், எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர், இலங்கை வானொலியில் அவர் நிகழ்த்திய நிகழ்ச்சிகள் அற்புதமானவை. மறக்கக்கூடியவையும் அல்ல. அவர் மறைவு என்னைப் பெரிதும் பாதித்தது, மறக்கக்கூடிய தல்ல. இருவரும் கொண்டிருந்த அன்பு ஆழமானது.





அவர் மறைந்தபோது நான் இலங்கையிலிருந்து அவருக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செய்ய வாய்ப்புக்கிட்டியது எங்கள் இருவரின் அன்பின் ஆழத்தை காட்டுவதாக அமைந்தது.

அவர் பிரிவினால் துயருறும் அவரது குடும்ப அங்கத்தவர்களுக்கு ஆறுதல் கூறுகின்றேன். என் இனிய நண்பனின் ஆத்மா பகவானின் பாதக் கமலங்களில் தஞ்சமடைய பிரார்த்திக்கின்றேன்.

என்றும் மறக்க முடியாத
அன்புடன்

**செல்லையா இராஜதுரை**

முன்னாள் பிரதேச அபிவிருத்தி, இந்து சமய விவகார, தமிழ்மொழி
அமுலாக்கல் அமைச்சர், மலேசியாவுக்கான
இலங்கைத் தூதுவர், மட்டக்களப்பு
தொகுதியின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர்.

# பிரதேச வேறுபாடின்றி
# ஈழத்தமிழரின் ஒருமைப்பாடு பேணிய பெருமைக்குரியவர்



ஈழத்தமிழ்த்தேசிய இனத்தின் மிகப்பெரிய சாபக்கேடாக விளங்குவது பிரதேச வேறுபாடாகும்.

சாதிவேறுபாடு, மதவேறுபாடு, பொருளாதார வேறுபாடு முதலிய வேறுபாடுகளும் ஈழத்தமிழரிடையே நிரம்ப இருக்கின்றனவென்றாலும் அவற்றிலும் மிகையாக இந்தப் பிரதேச வேறுபாடுகள் தலைதூக்கி நின்று, ஈழத்தமிழினத்தைத் தலை நிமிர விடாமல் செய்து கொண்டிருக்கின்றன. இலங்கை சுதந்திரம் பெறுகின்ற காலத்திலும், சுதந்திரம் வந்த ஆரம்ப காலத்திலும், அந்நிலையே இருந்தது. அதன் எதிரொலியாக -

சாதிவேறுபாட்டை ஒதுக்குபவர்கள் கூட, சமய வேறுபாட்டை வெறுப்பவர்கள் கூட, பொருளாதார வேறுபாட்டைப் பொருட்படுத்தாதவர்கள் கூட இந்தப் பிரதேச வேறுபாட்டுக்கு ஆளாகி, அதனால் தமிழினம் பிளவுபட்டு நிற்பதை, இன்றைக்குத் தாயகத் தமிழரிடத்திலும், புலம்பெயர்ந்த தமிழரிடத்திலும் கண்கூடாகக் காணுகின்றோம்.

புற்றுநோயைப் போலத் தமிழின ஒற்றுமையை இற்று விழச் செய்யும் இந்தக் குணம் சற்றும் இல்லாதவர்களாக நான் கண்ட தமிழர்களில் இரா. பத்மநாதன் ஒருவர்.

அவர் விபுலானந்த அடிகளைத் தமிழ்கூறு நல்லுகத்திற்கு அளித்த மட்டக்களப்பைச் சேர்ந்தவர். விபுலானந்த அடிகளைப் போலவே தமிழ்மீதும், தமிழிசை மீதும், தமிழ் இலக்கியங்களின் மீதும் ஆராக் காதல் கொண்டு ஏராளமான சாதனைகளைப் படைத்தவர்.

இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவையிலே ஈடுபட்டு, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் முத்திரை பொறித்த வித்தகர் அவராவார். அதிலும் குழந்தை மனம் கொண்டதாலோ என்னவோ, குழந்தை இலக்கியத்தில் அதிக ஈடுபாடு கொண்டு, சிறப்பான சிறுவர் நிகழ்ச்சிகளைத் தயாரித்தளித்து "வானொலி மாமா" என்று இலங்கைத் தமிழ் மக்களாலும், இந்தியத் தமிழ் மக்களாலும் வாய்குளிர அழைக்கப்பட்ட வான் புகழைப் பெற்றவர்.

கிழக்கில் தமிழ் மக்களிடையே உழைத்ததன் காரணமாகத் தமிழரசு இயக்கக் காலத்திலிருந்து தந்தை செல்வாவுடன் நெருக்கமாக இருந்த, அவருடைய நேசத்தைப் பெற்ற பாசத்திற்குரியவர்களில் அவரும் ஒருவர். செல்வா சகாப்தத்தைச் சேர்ந்த டாக்டர் இ.மு.வி. நாகநாதன், கு. வன்னியசிங்கம், மு. இராசமாணிக்கம், இராசவரோதயம் முதலிய அத்தனை தலைவர்களோடும் நேரிடையாகப் பழகும் வாய்ப்பினைப் பெற்றிருந்தவர். தமிழீழத் தேசிய எழுச்சி என்பது அந்த சகாப்தத்தின் கொடை என்பதை யாரும் மறுக்க முடியாதே.

சனநாயகப்பற்று, சாத்வீகநெறி, சகிப்புத்தன்மை இவை அந்த சகாப்தம் தமிழர் களிடையே வளர்த்த பண்புகளாகும். அந்தப் பண்புகள் வானொலி மாமா வாழ்க்கை முழுதும் பரிணமித்தன. மேலதிகமாக நகைச்சுவையுணர்வுடன் யாருடனும் நட்புபாராட்டும்

பண்பை அவர் கொண்டிருந்தார். எத்தனை இறுக்கமான சூழ்நிலையிலும் அவர் அங்கே இருந்தார் என்றால், எவரையும் சிரிக்கவைத்து விடுவார். சூடு தணிய சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்தி விடுவார்.

திரு. பத்மநாதன் அவர்களுடைய நகைச்சுவைக்கென்றே இலங்கையில் தனி வரலாறு உண்டு. உலகப் புகழ்பெற்ற லாரன்-ஹார்டி, சார்லி-சாப்ளின் போன்று, பத்மநாதனும், மாஸ்டர் சிவலிங்கமும் சேர்ந்து அளித்த நகைச்சுவை விருந்துகள் பலவாகும். அவை இலங்கைத் தமிழர் அரசியலில் அவ்வப் போது ஏற்பட்ட சூட்டைத் தணித்து, சிரிப்பு மழையால் எல்லாருடைய இதயங்களையும் குளிரவைத்தன.

'சுதந்திரன்' ஏடு தந்தை செல்வா அவர்களால் தொடங்கப்பட்டது என்பதும், இலங்கை வாழ் தமிழ் மக்களையெல்லாம் சாதி - மத - பிரதேச - பொருளாதார வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு ஒருங்கிணைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு அது தோற்றுவிக்கப்பட்டதால், அதன் முதல் ஆசிரியராக மலையகத் தமிழினத்தின் 'அரசியல் ஆசான்' என்று கருதப்படும் கோ. நடேசையர் அவர்களே பொறுப்பேற்றிருந்தார் என்பதும், அதன் முதல் ஆசிரியத் தலையங்கமே தமிழரிடை உள்ள பிரதேச வேறுபாட்டைத் தகர்ப்பதாகவே இருந்ததென்பதும், அவரைத் தொடர்ந்து, ஆசிரியர் பொறுப்பில் கிழக்கு மாகாணத்தவர்களே அதிகம் இருந்தனர் என்பதும் இங்கு நினைத்துப் பார்க்கத்தக்கது.

அம்முறையில் திரு. பத்மநாதன் அவர்களும் தந்தையவர்கள் காலத்தில் இரு கட்டங்களில் 'சுதந்திரன்' ஏட்டில் பணியாற்றியதோடமையால், அகதிகளாக நாங்கள் இந்தியாவுக்கு வந்தபோதும் சுதந்திரனின் பணி தமிழர்கள் எங்கிருந்தாலும் அவர்களிடையே தொடரவேண்டும் என்கிற முறையில் இந்தியாவிலிருந்து அதனை 'ஈழ சுதந்திரன்' என்ற பெயரில் வெளிக்கொண்டுவரவும் எமக்குப் பேருதவியாக இருந்தார். அம்முறையில்

18 ஆண்டுகளாக இந்தியாவிலிருந்து தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் ஈழசுதந்திரனுக்கு ஆரம்பத்தில் அவர்தான் ஆசிரியராக இருந்து அது நிலைபெறுவதற்குத் துணை புரிந்தார்.

உள்ளபடி சொல்லவேண்டுமென்றால் 1983ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த இனக்கலவரம் என்று மற்றவர்களால் வர்ணிக்கப்படும் சிறீலங்கா அரசாங்கமே திட்டமிட்டு நடத்திய வரலாறு காணாத தமிழினப் படுகொலையின் எதிரொலியாகவும், ஈழப் போராட்டத்தின் விளைவாகவும் விவரமறிந்த ஏராள மானவர்கள் புலப்பெயர்வு என்கிற பெயரில் தாங்கள் எந்த எந்த நாட்டுக்குப் போகவிரும்பினார்களோ, அந்தந்த நாடுகளுக்குச் சென்று அடைக்கலம் புகுந்தார்கள்.

"திரும்பவும் ஈழத்திற்கு மீளவேண்டும். அங்கு தாயகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்" என்று விரும்பியவர்கள் அங்கு உயிர் உடைமைகளுக்குப் பாதுகாப்பில்லை; உத்தரவாதமில்லை என்ற ஒன்றுக்காகவே அந்த மண்ணைவிட்டு வெளியேறிவர்கள் எல்லாம் இந்தியாவிலேயே தஞ்சம் புகுந்தனர்.

ஏனென்றால், இந்தியாவிலிருந்து ஈழத்து நிலைமைகளை அவதானிப்பது சுலபம். அங்கே இனச்சிக்கல் தீர்வதற்கு அழுத்தம் கொடுப்பதும் சுலபம். அமைதி திரும்பியதும் சொந்த மண்ணுக்குப் போய் சுயவாழ்க்கையைத் தொடங்குவதும் சுலபம் என்பதனாலேயே அவர்கள் இந்தியாவுக்குப் புலம்பெயர்ந்தனர். திரு. பத்மநாதனும் இந்தியாவுக்கு வந்தார்.

அதேவேளை இந்தியாவில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்த ஈழத்தமிழர்களில் பெரும்பாலானோர் சாதாரணமானவர்கள்; சாமான்ய மக்கள். எனவே அகதிவாழ்க்கை காரணமாக அவர்களிடையில் பண்பாட்டுச் சிதைவு, மனச்சிதைவு ஏற்பட்டு விடாமல் மறுவாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுவது இன்றியமையாததாக இருந்தது. இந்தப்

பணிகளை மேற்கொள்வதற்காகவே எம்மால் ஆரம்பிக்கப்பட்டதுதான் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகம் (OfERR) ஆகும். அதில் எம்மோடு துணையாக இருந்தவர்களில் திரு. பத்மநாதனும் ஒருவர்.

இந்தியாவில் பல்வேறு அதிகாரிகள், அரசியல் கட்சிகள், தலைவர்கள், எழுத்தாளர்கள், மாந்தநேய விரும்பிகள், இலக்கியவாதிகள் முதலானோரைச் சந்தித்து ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் நற்பணிகளுக்கு ஆதரவு திரட்டிட உதவியாக இருந்த மட்டக்களப்பு மாமணிகளில் ஈழத்து ரத்தினமும், இரா. பத்மநாதனும் எம்மால் மறக்க முடியாதவர்களாவர். அதில் ஈழத்து ரத்தினம் ஒரு நிலவாக இருந்தார் என்றால் பத்மநாதன் பகலாகவே பரிணமித்தார்.

அந்தப் பணிகளின் பெறுபேறாக அகதிச் சமுதாயத்தின் மத்தியிலிருந்தும் இன்று மருத்துவர்கள், பொறியாளர்கள் மற்றும் பல்துறை பட்டதாரிகள் தோன்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆம்; இந்தியாவிலிருந்து தோட்டத் தொழிலாளர்களாக இலங்கைக்கு வந்த மக்கள் மத்தியிலிருந்து ஏறத்தாழ 200 ஆண்டு காலத்தில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே பட்டதாரிகளாக ஆகிட முடிந்திருக்க, இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாக ஓடி வந்த மக்கள் மத்தியிலிருந்து 20 ஆண்டு காலத்தில் ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் உருவாகியிருக்கின்றார்கள் என்றால், அதன் பின்னால் எவ்வளவு திட்டமிட்ட முயற்சியும் உழைப்பும் அடங்கியிருக்கும் என்பதை அவதானித்துக் கொள்ளலாம். அந்த உழைப்பில் பங்குகொண்டவர்களில் திரு. பத்மநாதன் ஒருவர் என்பதைப் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

அந்தப் பெருமைக்குரிய திரு. பத்மநாதன் அவர்கள் தன்னை மட்டுமின்றித் தன் குடும்பத்தையும் அகதிகள் மறுவாழ்வுப் பணியில் ஈடுபடச் செய்தார் என்பதை மறக்க முடியாது.

இன்று அவருடைய மூத்த மகன் காண்டீபன் அகதிப் பணியில் சிறந்து விளங்கு வதுடன், கணக்கு, கணனி மற்றும் மின்னணுத் தொழில் நுட்பத்தில் சிறந்து நின்று, ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக்கழகத்திற்குப் பேருதவியாக விளங்குவதைக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

அத்துடன் தனக்குள்ள பல்திறன் பட்டறிவு கொண்டு இந்தியாவிலிருந்து இன்னொரு நாட்டுக்குப் புலம் பெயராமல், அதற்கான வாய்ப்புகள் பல வந்தும் அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல், ஈழத்திற்கே திரும்பி இறுதி மூச்சு உள்ளவரை அந்த மண்ணின் மைந்த னாய், அந்த மக்களுக்கே பாடுபட்ட அவருடைய மகத்தான தொண்டு மதிப்பிடற்கரிய பெருமை கொண்டதாகும்.

இப்படி வாழ்ந்து காட்டும் பெருமை சிலருக்கே உண்டு. அந்தப் பெருமையின் ஊற்றாக இருக்கும் இரா. பத்மநாதன் அவர்களுடைய நினைவு என்றென்றும் தமிழ் மக்கள் மத்தியில் - வரலாற்றில் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

சா.செ. சந்திரகாசன்
(தலைவர், ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழகம்)



**இரா. பத்மநாதன்** அவர்கள் இன்று நம்மிடையே இல்லை. ஆனால் என்றென்றும் தமிழர் வரலாற்றில் அவர் இருப்பார் என்பது மெய். இரா பத்மநாதன் அவர்களைப் பல்துறை இயக்கமாகப் பார்க்கிறேன்.

முத்தமிழான இயல் இசை நாடகம் என்னும் மூன்றிலும் அவர் முதிர்ச்சி பெற்றிருந் தார். இதழியலில் அவருக்கு நீண்ட கால ஈடுபாடு வானொலிக் கலைஞராய் மக்கள் நெஞ்சங்களில் நிலைத்த வாழ்விடம் பெற்றார்.

மூட நம்பிக்கையில் தோய்ந்து கிடந்த மட்டக்களப்பில் சீர்திருத்தக் கருத்துக்களை விதைத்த முன்னோடிகளில் ஒருவர். உயர்ந்த நகைச்சுவைக் கருத்துக்களால் தமிழ் மக்களுக்கு ஒரு காலத்தில் உணர்வூட்டிய சிரிப்பின் செல்வர்.

தமிழீழத்தின் அறப் போராட்ட காலத்தில் தன்னை முற்று முழுதாக மறந்து பணியாற்றிய தமிழரசுத் தொண்டன். அமைப்புப்பணி கருத்துப் பரப்புரை மக்கள் தொடர்பு ஆகியவற்றில் தனித்திறமை காட்டிய அரும்பணியாளர். இரா பத்மநாதன் அவர்கள் தமிழீழ மண்வாழ வாழ்ந்த இலட்சிய வீரர்.



# அழியா நினைவு அவர்

மாணவனாக இருந்த காலத்தில் நான் எழுதி அவரோடும் மாஸ்டர் சிவலிங்கம் அவர்களோடும் இணைந்து மேடை ஏற்றிய சூடு சாம்பலாச்சு போடியாரே என்னும் அரசியல் நாடகம் 1956 - 57 காலகட்டத்தில் ஐம்பதுக்கும் அதிகமான மேடைகளில் அரங்கேறியதையும் மட்டக்களப்பின் சிற்றூர்களெல்லாம் தமிழீழ விடுதலை உணர்வை விதைத்து இந்நாடகம் மாபெரும் எழுச்சியை ஏற்படுத்தியதையும் குறிப்பிட வேண்டும்.

தந்தை செல்வா அவர்களின் நம்பிக்கைக்குரிய தொண்டனாக ஓர் இளந் தலைவனாக அவர் திகழ்ந்தார். 1959இல் மேற்படிப்பு கருதி தமிழ்நாட்டுக்கு நான் வந்தபோது எழும்பூர் தொடர்வண்டி நிலையத்தில் என்னை வரவேற்க ஆவலோடு காத்திருந்தவர் இரா பத்மநாதன். அவரே தமிழ்நாட்டில் பலரையும் எனக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

தமிழ்நாட்டில் இரா பத்மநாதன் அவர்கள் தங்கியிருக்க நேர்ந்தது ஒரு தனிக்கதை. வன்னியசிங்கம் அவர்கள் தமிழீழ விடுதலை அறப்போராட்ட காலத்தில் வல்லமை மிக்க தலைவராய் விளங்கியவர்.

கூட்டாட்சிக் கொள்கையை வெளியே சொல்லிக் கொண்டிருந்தாலும் தமிழீழம் தனியரசு கொண்டு திகழவேண்டும் என்பதே அவர் ஆழநெஞ்சின் குறிக்கோளாக இருந்தது. தமிழீழ மண்ணின் விடுதலைக்கு அந்த மண்ணைச் சேர்ந்த ஒருவர் தமிழ்நாட்டில் தங்கி யிருந்து முழு நேரப் பணி ஆற்ற வேண்டும் என்று வன்னியசிங்கம் அவர்கள் கருதினார். இரா பத்மநாதன் அவர்களையே இதற்குத் தகுதி உடையவராக அவர் கண்டார். தெரிவு செய்தார். தமிழீழத்தின் முதல் தூதராக தமிழ்நாட்டில் தங்கி பணியாற்றியவர் இரா. பத்மநாதன் அவர்களே.

தன்னலம் சிறிதும் இன்றி தனக்கென ஒரு வளையம் உருவாக்காமல் அடுத்தவர் நிழலுக்காகவே தழைத்தவர் இரா பத்மநாதன். சிந்தித் தெறித்த மணிகள் போல் அவர் ஆற்றிய பணிகள் இங்கும் அங்குமாய் சிதறிக் கிடக்கின்றன.

அவர் வாழ்க்கை வரலாறு நூல்வடிவில் அமைய வேண்டும்.

**காசி ஆனந்தன்**



# முத்தமிழ் உபாசகர்

மட்டக்களப்பு மண்ணின் மக்களையும், அதன் தேன் சுவைத் தமிழையும், அதன் மரபுசார் கலாசார விழுமியங்களையும் பக்திப் பரவசத்துடன் நேசித்து, அவற்றின் முன்னெடுப்புகளுக்காக வாழ்ந்த இரா. பத்மநாதன் பற்றிய சில உண்மைகளைப் பதிவு செய்யும் வேளை இப்போது எனக்கு விடிந்துள்ளது. ஈழத்து இலக்கிய வரலாறு எழுதியோரும், பின்னர் மட்டக்களப்பு தமிழ் எழுச்சி பற்றிச் சிலாகித்தோரும் எழுதியோரும் அநியாயமாக மறந்த ஒரு பரமார்த்த தமிழ் உபாசகராகவே என் நெஞ்சில் அவர் வாழ்கின்றார். இந்த உணர்வு மகா நாணயமானது; சங்கையானது.

ஐம்பதுகளின் ஆரம்பத்தில் உறங்கிக் கிடந்த மட்டக்களப்புத் தமிழகத்தில் பகுத்தறிவுப் பிரசாரத்தைத் துணிவுடன் முன் வைத்தவர்களுள் அவர் ஒரு முன்னோடி. பகுத்தறிவுப் பிரசாரம் செய்ததற்காக அவர் வாழ்க்கையில் எதிர்நோக்கிய எதிர்ப்புகளும் இழப்புகளும் ஏராளம். இருப்பினும், ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அவர் மட்டக்களப்பு மண்ணின் உபாசனையிலும் ஊழியத்திலும் தளராத ஏக சிந்தையராக வாழ்ந்தார்.



பத்மநாதனுடனான என் ஆரம்ப உறவுகள் சுமுகமாக இருந்ததில்லை. எதிரெதிர் முகாங்களிலே, அவர் தமிழரசுக் கட்சிப் பிரசாரராகவும், நான் கம்யூனிஸ்ட் பிரீதியனாகவும் வாழ்ந்தமை இதற்குக் காரணம். பின்னர், அவர் பத்திரிகையாளனாக வீரகேசரி அதிபர் செட்டியாருடன் மேற்கொண்ட ஊர்ச்செலவுகளின் ஆவணங்களை வாசித்தபொழுது அவருடைய எழுத்தாற்றல் என்னைக் கவர்ந்தது. தினகரனின் மூன்றாலம் கன்றடியான் (என்று நினைவு) புனைபெயரிலே ஒரு கட்டுரைத்தொடர் வந்தது. அதனை பத்மநாதன் எழுதுகிறார் என அறிந்து மலைத்தேன். தன் பகுத்தறிவுப் பார்வையைத் திணிக்காது, மட்டக்களப்பு மண்ணின் மாந்திரீக நம்பிக்கைகளை ரஸானுபவத்துடன் எழுதினார். அத்தகைய கலை அணுகுமுறை தமிழுக்கு முற்றிலும் புதுசு. அதன் பதிவுகள் தேவை.

மட்டக்களப்புத் தமிழிலே நான் மாந்திய சிலிர்ப்பின் கலைப் படைப்பாக **மட்டக்களப்பு மாப்பிள்ளை** என்னும் நாடகம் இலங்கை வானொலியில் தொடராக ஒலிபரப்பாயிற்று. தயாரிப்பாளர் சானா. இருப்பினும், மட்டக்களப்புத் தமிழின் உயிர்ப்பினை வீறுடன் இழைக்க பத்மநாதன் உபகாரியாய் உதவினார். அதிலிருந்து, கொள்கை வேறுபாடுகளுக்கு அப்பாற்பட கலை-இலக்கிய உபாசனை இருவரையும் பிணைத்தது.



அவருக்கு இசை தெரியும். நடனம் கற்றவர். நடிகர். பல்வகைத்தான பாத்திரங்களிலும் லாவகமாகப் புகுந்து கொள்வார். அவர் எழுத்தின் பார்வையும் வீச்சும் பல்வகைத்து, உண்மையில் அவர் முத்தமிழ் வித்தகராகவே வாழ்ந்தார். விபுலாநந்தரின் வித்தகம் அறிவுஜீவிகளையும் தமிழாசன்களையும் எட்டியது. ஆனால், பத்மநாதன் மட்டக்களப்புக் கிராமங்களிலே நிலைத்திருந்த முத்தமிழ்த் திறனைத் துலங்கச் செய்தார். அவர் பணிக்கு இவர் முழுமம் தேடினார்.

இலங்கை வானொலியில் என் உச்சப் படைப்பாக அமைந்தது உரைச் சித்திரங்கள். இவ்வுரைச் சித்திரங்கள் மிக உந்நதக் கலைப் படைப்பு என்று அக்காலத்தில் வானொலிச் சுவைஞர்கள் ஒருமுகமாகப் புகழ்ந்தார்கள். இசை, நாடக நறுக்குகள், ஒலிக் குறிப்புகள், அபூர்வமான தகவல்கள் ஆகியன செறிந்தனவாக, உரைச்சித்திரம் என்கிற இலக்கிய வகைக்கு இலக்கணமாக அமையுமாறு பிரதிகளை அமைத்தேன். இதனைச் சாதிப்பதற்குப் பத்மநாதனின் பட்டறிவு ஆலோசனைகள் பயனுள்ளனவாக அமைந்தன.



பத்மநாதனுடைய இன்னொரு சிறப்பையும் குறிப்பிட்டே யாக வேண்டும். தன்னை நேசித்ததிலும் பார்க்க, சமூக அங்கீகாரம் பெற அமைத்துக் கொள்ளும் சொந்த வாழ்க்கையிலும். பார்க்க, அவர் உள்வாங்கிக் கொண்ட மட்டக்களப்பு கலை நேசிப்புகளை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல வாழ்ந்தார். இதனாலும் அவர் உரிய பெருமையும் புகழையும் அடையத் தவறினார். இலங்கை வானொலி வரலாற்றில் அதன் சகல துறைகளிலும் தமது ஆளுமையைப் பதித்தவர் இரா. பத்மநாதன். மட்டக்களப்பு மண்ணின் மைந்தருள் பத்திரிகை, வானொலி, மற்றும் பொதுஜன ஊடகங்கள் என அனைத்தின் மூலமும் பிறந்த மண்ணைச் சிறப்பித்த தலைமைத் தமிழ் ஊழியனாகவே பத்மநாதன் என் நெஞ்சில் வாழ்கிறார். இந்த உண்மைகளை இனி உருவாகும் வரலாற்றில் உரத்துப் பேசுதலே நாம் அவருக்குச் செய்யும் மெய்யான அஞ்சலி.

**– எஸ்.பொ**



# பல்கலைக் கலைஞன் பத்மநாதன்

அமரர் இரா. பத்மநாதன் அவர்கள் பல துறைகளிலே - பல கலைகளிலே சிறப்புற்று விளங்கியவர். எழுத்தாளராக, வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளராக, நடிகராக, நாடக ஆசிரியராக, கவிஞராக, பத்திரிகையாளராக, பேச்சாளராக, உதவி டைரக்டராக பல துறைகளிலே சாதனை படைத்தவர் அவர்.

1959ம் ஆண்டு நான் தமிழ்நாட்டிலே ஓவியக்கலை பயின்ற காலத்திலே, அன்பர் பத்மநாதன் தமிழகத்தில் பத்மா பிலிம்ஸ் என்ற சினிமா நிறுவனத்தில் உதவி டைரக்டராகப் பணிபுரிந்தார். அவரும் நானும் சென்னை தேனாம்பேட்டையிலே ஒரு வீட்டில் தங்கியிருந்தோம்.

ஒருநாள் அவர் பத்திரிகை ஒன்றுடன் வேகமாக வந்தார். அவர் முகத்தில் கவலை நிழலாடியது.

“என்ன நடந்தது? ஏன் சோகமாகக் காட்சியளிக்கிறீர்கள்?” என்று கேட்டேன்.

“மாஸ்டர்! இந்தச் செய்தியைப் பார்த்தீர்களா...? சர்வ தேசக் கலை விழா ஒன்று சென்னையில் நடைபெறவுள்ளது. அதில் 26 நாடுகள் கலந்துகொள்ள உள்ளன. அவற்றுள் இலங்கையும் ஒன்று. இலங்கையின் கண்டிய நடனந்தான் இடம் பெற உள்ளதாம். தமிழ் நிகழ்ச்சிக்கு இடம் கொடுக்கப்படவில்லை.



இதைச் சும்மா விடக் கூடாது... எப்படியாவது தமிழ் நிகழ்ச்சியையும் இடம்பெறச் செய்யவேண்டும்" என்று உணர்ச்சி ததும்பக் கூறினார் தமிழ்ப்பற்று மிக்க திரு பத்மநாதன்.

"சரி, சரி... அதற்கு நாம் என்ன செய்வது? சர்வதேச விழாவில் இலங்கையின் சார்பில் தமிழ் நிகழ்ச்சியைச் சேர்ப்பதற்கு நம்மால் முடியுமா?" என்று கேட்டேன்.

"ஏன் முடியாது? முயற்சி செய்தால் முடியாத காரியம் உண்டா? நான் நாளைக்கு வேலைக்குச் செல்லாமல் லீவு போட்டுவிட்டு, இந்தச் சர்வதேச விழா ஏற்பாட்டாளர்களைச் சந்தித்து எப்படியாவது இலங்கை சார்பில் தமிழ் நிகழ்ச்சி ஒன்றும் இடம்பெறச் செய்தே தீருவேன்" என்று சூளுரைத்தார்.

அன்று இரவு அவருக்குத் தூக்கமே வரவில்லை. அடிக்கடி அந்தச் சம்பவம் பற்றியே பேசிக் கொண்டிருந்தார். அடுத்தநாள் அதிகாலை விழாக்குழுவினரைச் சந்திக்கப் புறப்பட்டுச் சென்றார்.

அன்று மாலையாகியும் அவர் வீடு வந்து சேரவில்லை. எனக்குக் கவலை. இரவு ஒன்பது மணிக்கு உற்சாகத்துடன் வீடு வந்து சேர்ந்தார். அப்போதுதான் எனக்கு நிம்மதியாக மூச்சு வந்தது.

"மாஸ்டர்! வெற்றி, வெற்றி இலங்கைத் தமிழர்களுக்கு வெற்றி. விழா நிர்வாகிகளுடன் நீண்ட நேரம் வாதாடி, இலங் கைக் கலை நிகழ்ச்சிகளாக சிங்களத்தில் கண்டிய நடனமும் தமிழில் பலகுரல் நிகழ்ச்சியும் நாட்டுப் பாடல்களும் இடம்பெறச் செய்துள்ளேன்" உற்சாகத்துடன் விளக்கினார்.

"மாஸ்டர்! நீங்களும் நானுந்தான் அந்த நிகழ்ச்சியைச் செய்யவேண்டும். நிகழ்ச்சி நிரலில் நம் பெயர்களை இடம் பெறச் செய்து விட்டனர்.

"நீங்கள் அண்ணாத்துரை, கருணாநிதி, காமராஜர், சிவாஜி கணேசன் ஆகியோரைப் போல குரலை மாற்றிப் பேசுங் கள். நான் கோழிச் சேவல், நாய், பூனை ஆகியவை போன்று ஒலிகள் எழுப்புவேன். பின்னர் இருவரும் சேர்ந்து மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள் சிலவற்றைப் பாடுவோம். நமக்கு 10 நிமிடம் தரப்பட்டுள்ளது...." என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினார் திரு. பத்ம நாதன். நான் உற்சாகத்துடன் ஏற்றுக் கொண்டேன்.

சென்னையில் பிரபல ஹோட்டல் ஒன்றின் கலை அரங்கில் இடம்பெற்ற சர்வதேசக் கலைவிழாவில் எங்கள் புதுமையான நிகழ்ச்சி பலரதும் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றது. ரசிகர்கள் நீண்டநேரம் கரகோஷம் செய்து தங்கள் பாராட்டுக் களைத் தெரிவித்தனர். பலர் கைகுலுக்கி எங்களைப் பாராட்டினர்.






அடுத்தநாள் தமிழகப் பத்திரிகைகள் பல எங்கள் நிகழ்ச்சியைப் பாராட்டிச் செய்தி வெளியிட்டிருந்தன. இலங்கைப் பத்திரிகைகளும் பாராட்டின. நம்நாட்டில் அக்காலத்தில் புகழ் பெற்று விளங்கிய சுதந்திரன் வார ஏடு, "ஈழத்தமிழர்களுக்கு புகழ்சேர்த்த இலங்கை இளைஞர்கள் இருவர்" என்ற தலைப்பில் முதல் பக்கத்தில் பாராட்டு வெளியிட்டிருந்தது. இந்தப் பாராட்டுக்கள் கிடைப்பதற்கு மூலகாரணமாக விளங்கியவர் அமரர் பத்மநாதன்.

தமிழகத்தில் நான் ஓவியக்கலை பயின்று கொண்டிருந்த காலத்திலே வில்லுப்பாட்டுக் கலையில் மிக ஈடுபாடு கொண்டிருந்தேன். வில்லுப்பாட்டு நிகழ்ச்சி எங்கு நடைபெற்றாலும் தவறாது சென்று பார்வையிட்டு வந்தேன்.

இதை அவதானித்த அன்பர் பத்மநாதன், "மாஸ்டர்! உங்களுக்கு வில்லுப்பாட்டுக் கலையில் உள்ள ஈடுபாட்டைப் பாராட்டுகிறேன். முறையாக வில்லுப்பாட்டுக் கலையைப் பயின்று கொண்டு சென்று மட்டக்களப்பில் வில்லிசையை மேடையேற்றி, அங்கு இக்கலையை அறிமுகம் செய்ய வேண்டும்" என்று கூறினார் அன்பர் பத்மநாதன். அங்கு வந்திருந்த கவிஞர் காசி ஆனந்தன் அதனை ஆமோதித்தார்.



அன்பர் பத்மநாதன் சென்னையில் புகழ்பெற்ற வில்லிசைக் கலைஞரிடமும் என்னை அறிமுகம் செய்து வைத்ததுடன், பயிற்சி பெறவும் வழி செய்தார்.

அதன் பயனாக 1960ம் ஆண்டு மட்டக்களப்பில் கல்லடி-உப்போடை ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய வருடாந்த விழாவில் "நமக்கு மேலே ஒருவனடா" என்ற வில்லுப்பாட்டு நடைபெற்றது. அதையடுத்து நாட்டின் பல பாகங்களிலும் 125 வில்லுப்பாட்டுக்களை மேடையேற்றினோம். பல நிகழ்ச்சிகளில் அன்பர் பத்மநாதனும் பங்குபற்றினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

(அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறேன்.)

- மாஸ்டர் **சிவலிங்கம்**



# இனியவர் இவர் போல் இன் எவர்

செய்தி கேட்டேன்.

உடைந்தேன்.

ஒரு 'பாரிசம்' இழந்தேன்.

இரா. பத்மநாதன்!

நேற்றுவரை என்னுடன் இருந்தவர்.

இறுதிவரை என்னுடனேயே இருப்பார் என்று நம்பினேன்.

பொய்த்துப் போனேன்.

நினைவுகூர ஒன்றா இரண்டா?

சுகவீனம் என்று கேள்விப்பட்டு ஒரு நாள் மடிப்பாக்கம் போயிருந்தேன். என்னுடன் 'இளம்பிறை' ரஹ்மானும் வந்திருந்தார்.

மகன் காண்டீபனோடும், மருமகள் பானுவோடும் தங்கியிருந்தார். அகமும், முகமும் மலர வரவேற்றார்.

"மைத்தான்! எப்படியிருக்கிறாய்?" என்று என்னை நலம் விசாரித்தார் ('மச்சான்' என்பதை அப்படி 'மைத்தான்' என்று வாய் நிறைய அழைப்பது அவர் வழக்கம்) அதேபோல் நானும்



அவரை வாய்க்கு வந்தபடி 'மாப்ளே', 'பத்மாக்கண்ணு!' 'பண்டிக் குட்டி' என்றெல்லாம் சகட்டுமேனிக்கு அழைப்பேன். ஆமாம் ஒரு கட்டுக்குள் அடங்காத மனிதர் அவர்!

"மாப்பிள்ளை சாரே! நான் நல்லாய்த்தான் இருக்கிறேன். உங்கள் பாடுபறப்பு எப்படிக் கண்ணா?"

அவருக்கே உரிய பகிடி உணர்வோடு, "எல்லா நோய் நொடியோடும் நல்லாயிருக்கிறேன்" என்றார்.

கொஞ்சம் தனக நினைத்தேன். "நோய் சரி. அதென்ன நொடி?" "அடே வழிசல்! நீயும் வடிவேல் - பார்த்திபன் ரேஞ்சுக்கு வந்து விட்டாயா?" என்றவர் தொடர்ந்தார். "நோய் என்றா நோய்தான். 'நொடி' என்றால்... 'நொடி' என்றால்.... அது நோய்க்கு ஒரு போனஸ்!"

சூழல் கலகலப்பானது.

தொடர்ந்தேன். "நோயும் சரி, நொடியும் சரி, உங்களை ஒன்றும் செய்யமுடியாது. ஏனென்றால் நீங்கள் 'மூலநட்சத்திர'க் காரர். மூலத்துக்கு ஆயுள் கெட்டியென்பார்கள். அப்படி ஏதும் இசகுபிசகாக நேர்ந்தால் எனக்குப் பிறகு தான் நீங்கள்!" தன் தொந்தி வயிறு குலுங்கச் சிரித்துவிட்டுச் சொன்னார். "அதெல்லாம் மூடநம்பிக்கை மாப்பிள்ளே!"

ஈற்றில் என்ன நடந்தது? என் மூடநம்பிக்கை தோற்றது. அவர், பகுத்தறிவு வென்றது!

அவரது 'பிரமாண்டம்' சொல்லில் அடங்காது. இயல், இசை, நாடகத்தின் திரிவேணிசங்கம் அவர். தொட்ட துறைகளிலெல்லாம் துலங்கினார். பாடகராக, நாடகராக, பத்திரிகையாளராக, சினிமா நடிகராக, படைப்பாளியாக என்று 'பன்முகங்கள்' அவருக்கு!

நாட்டுக் கூடத்தில் அவர் போட்ட போடியார் வேஷம் இன்றும் பேசப்படுகின்றது. மட்டுநகர் முதல்வர் செ. இராசதுரையும் அவரும் சேர்ந்து நடித்த 'கண்ணகி' நாடகத்தில், 'மாதவி' பாத்திரம் ஏற்று அவர் ஆடிய பரதம் இன்றும் நெஞ்சில் நிற்கின்றது! நடிப்பில்தான் இப்படியென்றால் பாட்டில்? ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதரின் பாடல்களை, அவர் பாடி நாம் கேட்கவேண்டும். 'வதனமே சந்ர பிம்பமோ', 'ஞானக் கண் ஒன்று', 'மன்மத லீலையை' முதலிய பாகவதரின் பாடல்களை சுருதி சுத்தமாக அவர் பாடுவதைக் கேட்டுக் கொண்டேயிருக்கலாம்.

எழுத்துத் துறையிலும் அவர் பேனா பல சாதனைகளைச் செய்தது அரசியல், ஆத்மீகம், கலை விமர்சனம் என்று அவர் தொடாத துறையே இல்லை.



‘வீரகேசரி’ செட்டியாரோடு ஜப்பான் முதலிய நாடுகளுக்குச் சென்ற அவர், அதன் அனுபவங்களை சுவையோடும், ரஸனையோடும் வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டது அற்புதமானதொரு பயண இலக்கியமாகும்!

சமீபத்தில் அவர் எழுதி வெளியிட்ட ‘கோதண்டம் ஏந்திய கோமகன்’ என்ற இராம காதை, காலங்கடந்தும் பேசப்படும்!

சுபாவத்தில் அவர் ஒரு குழந்தை. மனதில் பட்டதை ஒளிவு மறைவின்றிச் சொல்லி விடுவார். அவர்வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். சிறந்த ரஸனையாளர், ரசிகர், அனைத்துக்கும் மேலாய் ஒப்பற்ற நகைச்சுவையாளர்.

சமீபத்தில் நானும், லீலாவும் வெளிநாட்டுப் பயணத்தை முடித்துவிட்டு அவரைச் சந்தித்தோம்.

“அம்மா சதிலீலாவதி (‘லீலாவதி’ என்ற என் மனைவி பெயரை அவர் அப்படித்தான் அழைப்பது வழக்கம்) பல நாடுகளுக்குச் சென்று வந்தீர்கள். அங்கெல்லாம் என் மைத்தான் ஏதாவது ‘குழப்படி’ பண்ணினானா?”

“எல்லாம் அவரையே கேளுங்கள்” என்று சொல்லிவிட்டு ‘தேத்தண்ணி’ போடச் சென்றுவிட்டாள் சதிலீலாவதி.

அப்புறம் என்ன மணிக்கணக்கில் பயண அனுபவம் 'கந்து கிளைய'ப்பட்டது!


"மைத்தான்! எப்படி இருந்ததடா உன் பயணம்?" உற்சாக மானேன். சொல்லலுற்றேன். ஒவ்வொன்றாய். அமெரிக்காவில் 'வெள்ளை மாளிகை' சொன்னேன்.

கனடாவில் 'நயாகரா' சொன்னேன், லண்டனில் 'பக்கிங்காம் அரண்மனை' சொன்னேன், பிரான்சில் 'ஈபிள் டவர்' சொன்னேன், நோர்வே - சுவீடன், டென்மார்க், நெதர்லாந்து தட்பவெப்பம் சொன்னேன், ஜேர்மனியில் கிழக்கு - மேற்கு உடைந்த சுவர் சொன்னேன், துபாய், அபுதாபியில் பாலைவனம், பேரிச்சை சொன்னேன். இன்னும்..."

"யோவ்! நிறுத்தையா! உன்னிடம் நானென்ன பூகோள வரலாற்றுப் படமா கேட்டேன்? நான் கேட்டது அது இல்லை மடையா 'அது!'"

"அது என்றால் எது? சாப்பாடா?"

முண்டம் முண்டம்! நான்கேட்டது அதெல்லாம் இல்லையடா. 'அது'டா 'அது!'





குரலில் குறும்பும், குகும்பும் கொப்பளித்தன.

புரிந்து கொண்டது. "ஓகோ! நீங்க 'அப்படி' வருகின்றீர்களா? சொல்லறேன்.

அந்தந்த நாடுகளில் நான் 'பவனி' வந்த 'கேளிக்கை உலகம்' சொன்னேன், சிருங்கார ரஸம் சொன்னேன். எல்லாம் கேட்டுவிட்டுக் கடைசியாக ஒன்று சொன்னார்.

"மைத்தான்! நீ கொடுத்து வைத்தவன்டா!"

எப்படியெப்படியெல்லாமோ என்னை வசியம் பண்ணிய அந்தச் 'சண்டாள நண்பன்' இன்று என்னிடம் இல்லை.

என் பத்மாக் கண்ணா! உன்னை மறக்க முடியாமல் சிதில மாகின்றேன். உன்னை 'மறந்துபோக' ஏதாவது ஒரு 'மருந்து மாயம்' உண்டா? சொல்லடா என் மந்திரமூர்த்தி!

**– நவம்**



# பத்தண்ணின்

மட்டுநகர், அர்ச். மைக்கேல் கல்லூரியில் நான் படித்துக் கொண்டிருந்த காலம். இசை, இலக்கியம், சினிமா, ஓவியம் எனப் பலதரப்பட்ட கலை ஊடகங்களில் மிகுந்த ஆர்வத்துடன் நான் ஈடுபடத் தொடங்கியிருந்த நேரம்.

இன்னும் சொல்லப் போனால் இலக்கியம் சினிமா ஆகிய இரண்டு ஊடகங்களைப் பற்றிய ஒரு வெறியோடு நான் வாழ்ந்து கொண்டிருந்த காலம்.

என்னைப் போலவே, இந்த இரண்டு ஊடகங்களையும் தீவிரமாக நேசித்த காசி ஆனந்தன், மாலா, மாஸ்டர் சிவலிங்கம் ஆகிய என் வயது நண்பர்கள். இதில் காசி ஆனந்தனும் நானும் பால்ய நண்பர்கள் - பள்ளிக்கூடம் இல்லாத சனி ஞாயிறு களிலும் மற்றும், விடுமுறை நாட்களிலும் நாங்கள் நால்வரும் கூடிப்பேசி அளவளாவதற்கென்றே அமைந்த அஜந்தா ஸ்டுடி யோவின் பின் கட்டு; அதைத் தனது இருப்பிடமாகவும் பணியிட மாகவும் உபயோகித்து வந்த நாங்கள் மரியாதையுடன் "கலைஞர்" என்று அழைத்த விளம்பர ஓவியர் குமார்.

பாலுமகேந்திரா



பள்ளிக்கூடம் இல்லையென்றால், மழையோ, புயலோ, சாயந்தரம் மூன்று மணிக்கெல்லாம் அஜந்தா ஸ்டுடியோ பின் ஹாலில், குமார் அண்ணன் தலைமையில் எங்கள் அரட்டை அரங்கம் ஆரம்பிக்கும். டீ, காப்பி, வடை வகையறா எல்லாம் குமார் அண்ணனே பார்த்துக் கொள்வார்.

இந்தப் ‘பைத்தியக்காரக்’ கூட்டணியில் அவ்வப்போது கலந்துகொள்ளும், இதே அலைவரிசையில் இருந்த எங்கள் பத்தண்ணன். இரா. பத்மநாதனை நாங்கள் இப்படித்தான் அழைத்தோம்.

எஸ்.எஸ்.சி. முடித்து, நான் மட்டக்களப்பை விட்டு, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குப் படிக்கப் போனதோடு இந்தப் பாசம் மிக்க கூட்டணியிலிருந்து நான் விடுபட்டேன். வட்டுக் கோட்டையிலிருந்து கொழும்பு, பின் கொழும்பிலிருந்து இந்தியா. தமிழ் மொழி மீதும், இலக்கியத்தின் மீதும் எனக்கு இருந்த வெறிகொண்ட பற்றுதலை மதித்து, என்னுள் தகித்துக் கொண்டிருந்த, தணலை ஊதி ஊதிப் பெரு நெருப்பாகப்பற்றி எரிய வைத்தவர்களுள் பத்தண்ணன் முக்கியமானவர்.

கொழும்பில் நான் வேலை பார்த்துக் கொண்டிருந்த காலத்தில் அவர் ‘சுதந்திரன்’ பத்திரிகையில் இருந்தார்.

அப்பொழுதுதான் அருள்மொழி, சச்சி, வாரித்தம்பி, சபாநாயகம் மற்றும் நான் ஆகிய ஐவரும் சேர்ந்து "தேனருவி" என்ற இலக்கியச் சிற்றிதழை ஆரம்பித்தோம். "தேனருவி" சுதந்திரன் பத்திரிகை அச்சகத்திலேயே அச்சானது. அப்பொழுதும் பத்தண்ணன் எங்களுக்கு உறுதுணையாக இருந்து பல உதவிகளைச் செய்து வந்தார்.

பின் இந்தியாவில் நான் குடியேறி, இங்கு சினிமா செய்யும் பொழுது அவர் இங்கிருந்த ஈழத்து அகதிகள் ஒருங்கிணைப்பு அலுவலகமான OfERRல் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

பலகாரணங்களை முன்னிட்டு இங்கு - சென்னையில் அவரை என்னால் அடிக்கடி சந்திக்க முடியவில்லை. பின், மெல்ல மெல்ல, அவரவர் இலக்குகளை நோக்கி அவரவர் பயணிக்க - எங்கள் பாதைகள் பிரிந்து விலகலாயின. எங்கள் பத்தண்ணன் காலமான செய்தி என்னை உலுக்கியது. பழைய நினைவுகள் மீண்டும் பசுமையாக....

அவர் சென்னையில் வசித்த காலத்தில் அவரை அடிக்கடி சந்திக்காமல் விட்டது மனசில் உறுத்தலாக... குற்ற உணர்வாக...



புன்னகை மன்னன்

# பத்மநாதன் மாமா



1983ஆம் ஆண்டு இனக்கலவரத்திற்குப் பிறகு புகலிடம் தேடி தமிழக மண்ணிற்கு வந்த ஆயிரமாயிரம் ஈழத் தமிழ்க் குடும்பங்களில் சில நூறு குடும்பங்கள் ஏதோவொரு வகையில் எனக்கு அறிமுகமாயின. போராளிக் குழுக்களைச் சேர்ந்த வர்கள், சேராதவர்கள், அகதி முகாமிலிருந்த வர்கள், அவற்றுக்கு வெளியே வாழும் வாய்ப்புப் பெற்றவர்கள், ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லத் தமிழகத்தை உந்து பலகையாகப் பயன்படுத்திய வர்கள் எனப் பலவகையினர்.

முப்பத்தாறு அடுக்ககங்களைக் கொண்ட ஒரு குடியிருப்புக் கட்டிடத்தில் வாழ்ந்து வந்தேன் நான். எல்லாரும் கீழ் - நடுத்தர வகுப்புக் குடும் பத்தினர். ஈழத் தமிழர்கள் என்றாலே போராளிக்

குழுவினர்தான் எனச் சிறிது அச்சம் கொண்டிருந்தவர்கள். எனினும் மெல்ல மெல்ல சில ஈழத் தமிழ்க் குடும்பங்கள் மட்டுமின்றி, போராளிக் குழுக்களில் ஏற்பட்ட பிளவுகளால் சோர்வுற்றோ அல்லது அச்சுறுத்தலுக்குள்ளாகியோ, போராளிக் குழுக்களில் வலுக்கட்டாய மாகச் சேர்க்கப்படும் ஆபத்திலிருந்து தப்பிக்கவோ இந்தக் குடியி ருப்பை நாடி வந்தவர்களும் இங்கு வாழ்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதில் எனக்கு முக்கியப் பங்கு இருந்தது.




1977 முதற்கொண்டே ஈழத் தமிழர் பிரச்சினையில் எனக்கு ஆர்வமும் அக்கறையும் இருந்து வந்ததுதான் அதற்குக் காரணம். ஏறத்தாழ எல்லாப் போராளிக் குழுக்களைச் சேர்ந்தவர்களும் என் வீட்டிற்கு வருவது வழக்கம். புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த புலேந்திரன், குமரப்பா, ரஹீம், சிறி, நித்தியானந்தம், நிர்மலா எனப் பலருக்கும் எங்கள் இல்லம் விருந்தோம்பியிருக்கிறது. சில சமயங்களில் ஒன்றுகொன்று கடும்பகை கொண்டிருந்த குழுக்களைச் சேர்ந்தவர்கள் அடுத்தடுத்து வந்தவிட்டால் ஒரு குழுவைச் சேர்ந்தவரைப் படுக்கை அறையில் வைத்து பூட்டிவிட்டு மற்ற குழுவைச் சேர்ந்தவரை வரவேற்பு அறையில் அமர்த்திப் பேசி வழியனுப்புவதுமான நிகழ்ச்சிகள் பல முறை ஏற்பட்டிருக்கின்றன.


இயக்கத்திலிருந்து வெளியேறித் தப்ப முயன்ற ஒரு சில இளைஞர்களுக்கும் என் வீடு அடைக்கலம் கொடுத்திருக்கிறது.

அப்படிப்பட்ட ஒரு இளைஞரை டெலோ இயக்கத்தினர் கடத்திக் கொண்டுபோன சமயத்தில் மத்திய அரசாங்கத்திற்கு மிகவும் வேண்டியவராக இருந்த ஒரு பத்திரிகையாளரின் துணை கொண்டு அவரைக் காப்பாற்றினேன். புலம் பெயர்ந்து வந்தவர்களிடையே திருமணங்கள், திருமண முறிவுகள், காதல்கள், காதல் தோல்விகள் எனப் பலவற்றுக்கு எனது வீடு ஒரு சாட்சியமாக இருந்திருக்கிறது.

ஒரே குடும்பத்தில் இரண்டு திருமணங்களை நானும் எனது துணைவியாரும் முன்னின்று நடத்தியிருக்கிறோம். அந்த வீட்டு மருமகன் ஜீவகன் தனது துணைவி பாபியுடனும் இரு மகன்களுடனும் இலண்டனில் வசிக்கிறார். பிபிசி வானொலியில் பணியாற்றுகிறார். அந்தவீட்டு மூத்த மகன் கணேசமூர்த்தி நடிகர் கமலஹாசனின் அத்தை மகள் ராஜியைக் காதல் திருமணம் செய்துகொண்டு அழகான மூன்று பிள்ளைகளுடன் கொழும்பிலிருக்கிறார்.

இவற்றையெல்லாம் புன்முறுவலோடு பார்த்து இரசித்துக் கொண்டிருந்தவர் எனது அண்டை வீட்டில் குடியிருந்த கணேசமூர்த்தி குடும்பத்திற்கு நெருக்கமான நண்பராக இருந்த ஒரு முதியவர். மூர்த்தி குடும்பத்தினர் இந்திய வம்சாவழித் தமிழர்கள். கொழும்பில் நடந்த இனக்கலவரம் அவர்களைச் சென்னைக்குத் துரத்தியடித்தி ருந்தது. அந்த முதியவரோ எந்த இயக்கத்தையும் சாராதவர். மட்டக் களப்புக்காரர். கொழும்பில் இலங்கை வானொலியில் சிறுவருக்கான நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கியவர்.





பத்திரிகைத் துறையில் பழுத்த அனுபவம் வாய்ந்தவர். கொழும்பில் இருந்த நாட்களிலேயே அவருக்கு இந்தக் குடும்பத்துடன் நெருக்கமான பழக்கம் ஏற்பட்டிருந்தது. சிங்கள இனவாதத்தால் பாதிக்கப்பட்ட தமிழர் என்னும் முறையில் இனக்கலவரத்தை சிறிலங்கா அரசு எப்படித் தூண்டிவிட்டது என்பதை பிபிசி வானொலிக்கு இவர் சொல்ல அந்தக் கணத்திலிருந்தே அவர் அந்த அரசால் தேடப்பட்டு வந்தவர்களில் ஒருவராகிவிட்டார்.

அவருடைய குடும்பம் சிதறுண்டு போயிற்று. மனைவி மக்கள் சிறிலங்காவில். அவர் மட்டும் சென்னையில். தொலைபேசித் தொடர்பு கூடக் கிடையாது. வருமானம் ஏதும் இல்லை. இயக்கங்களின் ஆதரவில்லை. அந்தக் கொழும்புக் குடும்பம் மட்டுமே அவரது அடிப்படைத் தேவைகளைக் கவனித்து வந்தது. அவர் கொண்டு வந்த ஒரே சொத்து ஒரு விலையுயர்ந்த காமிரா. சென்னை பேருந்தொன்றில் ஏதோ நினைவில் மூழ்கியவாறு பயணம் செய்த ஒரு மாலைப் பொழுதில் அவரது தோள் பையில் யாரோ பிளேட் போட்டுக் காமிராவைக் களவாடிவிட்டனர்.

ஆனால் இவற்றையெல்லாம் மூடி மறைக்கும் ஒரு முகமூடி போல அவர் முகத்தில் என்றும் ஒட்டிக் கொண்டிருக்கும் புன்முறுவல். அவரது பேச்சில் எப்போதும் கேலியும் கிண்டலும்தான். ஒழுக்க சீலர். மதுவின் வாடை கூட அவரிடம் நெருங்கியதில்லை.



ஆனால் குடி போதையில் மூழ்கியவர் போல் நடித்துக் காட்டுவார். என்.எஸ். கிருஷ்ணன் போல, எம்.ஜி.ஆர். போல நடித்துக் காட்டுவார். பத்மனாப மாமா என எங்கள் அனைவராலும் அழைக்கப்பட்ட அவரைக் காலை, மாலை என எப்போதும் பார்த்துப் பேசாவிட்டால் எனக்குத் தூக்கம் வராது.

எப்பாடுபட்டோ தனது மூத்த மகன் காண்டீபனைத் தமிழகத்திற்கு வரவழைத்துவிட்டார். மகனைப் படிக்க வைக்க ஒரு தொண்டு நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தார். தன் கஷ்டங்களை யாருக்கும் சொல்லமாட்டார். மானஸ்தர். நான்காண்டுகள் எங்கள் நட்பு வளர்ந்தது.


1987 தொடக்கத்தில் சிறிலங்கா செல்வதற்கான ஒரு வாய்ப்பு எனக்குக் கிட்டியபோது, கொழும்பிலுள்ள இரண்டு நண்பர் களுக்குக் கடிதம் எழுதித் தந்தார். அவர்களிடம் சிறிது நிதி உதவி கேட்டிருப்பதாகவும் அவர்களைச் சந்தித்து அக்கடிதங்களைக் கொடுக்கும்படியும் கூறினார்.

ஒருவர் ஒரு முக்கிய தமிழ்நாளேட்டின் ஆசிரியர். மற்றொருவர் ஜெயவர்தனவின் யுஎன்பி அரசாங்கத்திலிருந்த இருந்த அமைச்சர். மட்டக்களப்பு நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சு. இராசதுரை. இயக்கங்களைச் சேர்ந்தவர்களால் தமிழ்த் துரோகி என அழைக்கப்பட்டு வந்தார்.

"இவரிடமா என்னைப் போகச் சொல்கிறீர்கள். இந்த தமிழ்த் துரோகியை எனக்கும் தெரியும்" என்று கிண்டலடித்தேன். "எப்படித் தெரியும்?" என வினவினார் மாமா. "தெரியுமாவது, எங்கள் குடும் பத்தின் விருந்தினராகக் கூட ஒருமுறை வந்து போயிருக்கிறார்" என்றேன். எங்கள் குடும்பம் முழுவதும் உதகமண்டலத்தில் இருந்த காலத்தில், 1961இல் கவிஞர் கண்ணதாசனுடன் அங்கு வந்து எங்கள் வீட்டில் ஒரு நாள் தங்கியிருந்தார் என்பதையும் அவரது மகளுக்குப் பூ என்று பெயர் வைத்திருப்பதாக அவர் என்னிடம் சொன்னதையும் கூறினேன்.

"அப்படியா. அந்த தமிழ் துரோகி"யோடு சேர்ந்து மட்டக் களப்பைச் சேர்ந்த இன்னொரு "தமிழ் துரோகியும்" உதகைக்கு வந்திருப்பானே" என்றார் மாமா. எங்கள் வீட்டிற்குக் கண்ணதாசன் வந்திருந்தது மறக்கமுடியாத நிகழ்ச்சியாதாலால் அது தொடர்பான ஒவ்வொரு விஷயமும் என் நெஞ்சில் பசுமையாக இருந்தன. "ஆமாம், இன்னொருவரும் வந்திருந்தார். கலகலப்பாகப் பேசினார்.

ஆனால் அவர் பெயர் நினைவில் இல்லை" என்றேன். "அந்த மற்றொரு தமிழ் துரோகி நான் தான் ஐயா என்றார் மாமா. எனக்கு வியப்புத் தாங்க முடியவில்லை. வாழ்க்கை என்னென்ன அதிசயமான கோலங்களைப் போட்டுவிட்டுச் செல்கிறது. மாமாவுக்கு நினை வாற்றல் அதிகம்.




கவிஞர் கண்ணதாசன், சு. இராசதுரை, அன்றைய கோவை மாவட்ட தி.மு.க செயலாளர் உடுமலை நாராயணன், உதகையிலிருந்த தி.மு.க தலைவர்கள் ஆகியோருடன் எங்கள் குடும்ப உறுப்பினர்கள் ஒரு குழுப் புகைப்படம் எடுத்துக் கொண்டது தனது நினைவில் இருப்பதாகவும் கூறினார்.

உண்மையில் அந்தப் புகைப்படத்தின் ஒரு பிரதி சட்டம் போடப்பட்டு எனது இளைய சகோதரர் வீட்டுச் சுவரொன்றைப் பல ஆண்டுகளாகவே அலங்கரித்து வந்தது. அன்றிரவே கோவைக்குப் புறப்பட்டுச் சென்று என் தம்பியின் வீட்டிலிருந்த அந்தப் புகைப்படப் பிரதியை எடுத்துக் கொண்டு மூன்றாம் நாள் காலை சென்னை வந்து சேர்ந்தேன். பூரித்துப் போன பத்மனாப மாமா அதைக் கண்டதும் ஒரு குழந்தையைப் போலத் துள்ளிக் குதித்தார்.

சென்னையிலுள்ள பிரபல புகைப்பட ஸ்டுடியோவான ஜி.கே.வேல் அண்ட் சன்ஸுக்குச் சென்று அதில் மூன்று பிரதிகள் எடுக்க ஏற்பாடு செய்தார். அவருக்கு ஒன்று, எனக்கு ஒன்று, என் மூலம் சு. இராசதுரைக்கு அனுப்ப மற்றொன்று.

எனது சிறிலங்காப் பயணத்தின் கடைசி நாளில் தான் சு. இராசதுரை அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். நான் கொடுத்த புகைப்படத்தைக் கண்டு அளவற்ற மகிழ்ச்சி தெரிவித்தார். தனது உதகைப் பயணம், கவிஞர் கண்ணதாசனுடன் அவருக்கு இருந்த நட்பு, உதகையில் எங்கள் வீடு இருந்த இடம் நுவரெலியாவை நினைவுபடுத்தியதாக அவருக்கு அன்று ஏற்பட்ட உணர்வு ஆகிய வற்றையெல்லாம் மிகுந்த உற்சாகத்துடன் கூறியதுடன் தனது விருந்தாளியாக இரண்டு மூன்று நாட்களாவது தங்கிச் செல்ல வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

என்னதான் அரசியல் வேறுபாடுகள் இருப்பினும் அவரது பண்பட்ட பேச்சும் மென்மையுணர்வும் என்னை மிகவும் வசீகரித்தன. அவரது விருந்தோம்பலுக்கு நன்றி கூறிவிட்டுப் புறப்பட்டேன். அவரும் சரி, பத்மனாப மாமாவின் விருப்பப்படி நான் சந்தித்த பத்திரிகை ஆசிரியரும் சரி மாமாவுக்கு உதவிகள் வழங்குவது குறித்து ஏதும் பேசவில்லை. அப்படி ஏதேனும் உதவிகள் பின்னாளில் வந்து சேர்ந்ததா தெரியவில்லை.



ஒரு தொண்டு நிறுவனத்தில் செய்து வந்த பணிகளுக்காகக் கிடைத்த சொற்ப வருவாயைக் கொண்டு வாழ்க்கையை ஓட்டி வந்த மாமா, தனது மகன் காண்டீபனை சிரமப்பட்டுப் படிக்க வைத்தார். எங்கள் குடியிருப்பில் வசித்து வந்த அவரது கொழும்பு நண்பர் மூர்த்தி குடும்பம், மட்டக்களப்பிலிருந்து வந்திருந்த இளங்கோ என்பாரின் குடும்பம், தற்போது பாரிஸில் வசித்து வருபவரும் ப்ளொட் இயக்கத்தின் முன்னணிச் செயலவர்களிலொருவராக இருந்தவருமான எழுத்தாளர் அசோக் (யோகன் கன்னமுத்து) முதலியோர் மாமாவுடன் வாழ்ந்து வந்தனர்.

ப்ளொட் இயக்கத்திலிருந்த சந்ததியார் என்னும் அற்புதமான தோழரை இயக்கத் தலைவர் உமா மகேஸ்வரன் கொன்று விட்டதாகக் கிடைத்த செய்தியின் காரணமாக தலைமைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த அசோக்கும்கூட துப்பாக்கியால் சுடப்பட்டு நீண்ட நாட்கள் தமிழகத்தில் சிகிச்சை பெற்று வந்தார்.

எந்தவொரு இயக்கத்தோடும் சம்பந்தப்படாதிருந்த மாமா 1990களின் ஆரம்பத்தில் சிறிலங்காவுக்குத் திரும்பிச் சென்றார். மீண்டும் பத்திரிகைத் தொழில் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியபோதிலும், அவர் பணியாற்றிய நாளேடு விடுதலைப் புலிகளைக் கடுமையாக எதிர்த்து பிரச்சாரம் செய்து வந்தமை அவருக்கு தர்மசங்கடம் ஏற்படுத்தியது. ஈழ அரசியலின் எந்தப் போக்கிலும் மாட்டிக் கொள்ளாமல் எஞ்சிய நாட்களை அமைதியாகக் கழிக்கவும் ஆன்மீக நூல்களை எழுதவும்





விருப்பம் கொண்டிருந்தார். அவப்பேறுகள் அவரைத் துரத்திக் கொண்டேயிருந்தன. அவர் சிறிலங்கா சென்றுவிட்டார். அவரது துணைவியாரோ உடல் நலம் குன்றி சென்னையில் காண்டீபன் வீட்டிற்கு வந்து மருத்துவ சிகிச்சை பெற்று வந்தார். அவர் காலமான போதுதான் தமிழகத்தில் மீண்டும் மாமாவைச் சந்திக்க நேர்ந்தது.

பல ஆண்டுகள் உருண்டோடி விட்டன. எனது உடல் நிலையிலும் பெரும் சரிவு ஏற்பட்டு சென்னை நகர வாழ்க்கையைத் துறக்க வேண்டியதாயிற்று. கடந்த சில ஆண்டுகளாக என்னை வாட்டி வதைக்கும் மன அழுத்தங்கள் என் வாழ்க்கையை அர்த்தமிக்கதாகச் செய்த சிறிலங்கா நண்பர்களையெல்லாம் ஒரு முறை பார்த்து வர வேண்டும் எனத் தூண்டிக்கொண்டேயிருந்தன.

நண்பரொருவரின் உதவியால் அந்த ஆசை நிறைவேறியது. கொழும்பிலுள்ள கணேசமூர்த்தி குடும்பத்தார் இராஜ மரியாதையுடன் வரவேற்று அத்தீவில் நான் பார்க்க விரும்பிய இடங்களுக்கெல்லாம் பயணம் செய்வதற்கான செலவுகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டனர். முதலில் மட்டக்களப்பு சென்று நண்பர்கள் மௌனகுரு - சித்ரா இணையரின் விருந்தாளியாக இருந்த நான் அருகில் உள்ள கிராமத்தில் தன் கடைசி நாட்களைச் செலவிட்டுக் கொண்டிருந்த பத்மனாப மாமாவைச் சந்திக்கச் சென்றேன். அவருடன் கூடவே பிறந்த புன்னகை அந்தத் தள்ளாமையையும் மீறி ஒளிர்ந்து கொண்டிருந்தது. என்னைக் கட்டித் தழுவியபடி, "மீண்டும் உங்களை நேரில்



பார்க்க நேர்ந்தது எனது ஜென்ம சாபல்யம்" என்றார். குழந்தையைப் போலத் தேம்பித் தேம்பி அழுதார். அதுதான் அவருக்கும் எனக்கு மிடையே நடக்கும் கடைசிச் சந்திப்பு என்பதை உணர்ந்தேன்.

கவிஞர் கண்ணதாசனுடன் எடுத்துக் கொண்ட புகைப்படப் பிரதி கொழும்பில் எப்படியோ காணாமல் போய்விட்டது என்றார். அதில் மீண்டும் ஒரு பிரதி எடுத்து அனுப்ப முடியுமா எனக் கேட்டார். அனுப்பு வதாகக் கூறி அவருடன் ஒரு புகைப்படம் எடுத்து விட்டு விடை பெற்றேன்.

சுனாமிப் பேரழிவுச் செய்திகளைக் கேட்டதும் சிறிலங்காவில் கடற்கரையோரப் பகுதிகளில் வசித்து வந்த நண்பர்களைப் பற்றி மிகவும் கவலைப்பட்டேன். மௌனகுரு - சித்ரா இணையர், திரிகோண மலையில் கவிஞர் வில்வரத்தினம், கல்முனையில் எம்.ஏ. நுஃமான் முதலியோரின் வீடுகளில் கடல் நீர் புகுந்து அவர்களது அரிய உடை மைகளை வாரிச் சென்றுவிட்டதை அறிந்தேன்.

பத்மனாப மாமாவிற்கோ அவரது வீட்டிற்கோ பாதிப்பு இல்லை என்பதை அறிந்து மகிழ்ச்சியுற்றேன். ஆனால் சில மாதங்களுக்குப் பிறகு இயற்கை அவரைக் கொண்டு சென்று விட்டது. நிறைவான வாழ்க்கை அது. அவரது நினைவைப் போற்றுவதைத் தவிர வேறு என்ன செய்ய?

**– எஸ்.வி. ராஜதுரை**

## இறைபதம் அடைந்த "கலைமாமணி இரா பத்மநாதன் அவர்களின் நினைவாக வரையப்பட்ட கண்ணீர் அஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 19.07.1929 | 16.04.2005 |

# எண்ணிலடங்குமா இரா. பத்மா உங்கள் சேவை



அன்புக்கு இலக்கணமாய் அறிவோடு புகழும் சேர்த்து
எங்களுக்கு வழிகாட்டி இருந்த இராபத்மநாதன்
அன்றொருநாள் எம்மை அவர் ஆதரிக்கா விட்டிருந்தால்
இன்றிருக்கும் நிலைக்கு நாங்கள் வந்திருக்க முடியாதே.

நாடகத்தை நாட்டியத்தை நாலாவித பாத்திரத்தை
மேடையிலே ஏற்றிவைத்து மேன்மையுறச் செய்தவன் நீ
பாடவல்ல நண்பர்களை பல இடத்தில் தெரிந்தெடுத்து உங்கள்
கூட இருந்து முன்னேற கூட்டிவிட்ட செம்மல் நீ

பஞ்சம் எம்மை நாடாது பார்த்துவந்த பத்மா நீ
தஞ்சம் என வந்துவிட்டால் இடம் கொடுத்து காத்தவன் நீ
வஞ்சம் இலா வள்ளல் நீ வாழவைத்த தெய்வம் நீ
கொஞ்சும் தமிழ் எழுத்தாலே குவலயத்தை கவர்ந்தவன் நீ

மட்டுநகர் பெருமையெல்லாம் மறையாமல் காத்து அதை
எட்டுதிக்கும் புகழ் பரப்ப ஏதுவாய் இருந்தவன் நீ
விட்டுக் கொடுக்கும் உங்கள் மேலான குணத்தினாலே
பட்டம் பதவிகளை பல இடத்தில் இழந்தவன் நீ

கண்ணகியாம் காவியத்தை கனிவாக வானொலியில்
பண்ணமைத்து அழகாக பாடியவன் நீயன்றோ
கண்டு கொண்டோம் உன் பெருமை கொழும்பினிலே பல தடவை
பண்டிதரும் உமை நாடிப் பல விடயம் கேட்ட போது

இறைபக்தி என்னவென்று இயம்பிடுவாய் இனிதாக
குறை ஏதும் கண்டதில்லை மற்றவரில் எளிதாக சுவாமி
அறைதனிலே இருந்திடுவாய் அப்படியே சிலையாக
கறைபடியா கரம் கொண்டு வாழ்ந்திட்டாய் நிறைவாக


45295


நண்பர்களோ உங்களுக்கு பாரதத்தில் பல நூறு
பண்போடு பார்த்து வந்த பதவிகளோ ஏராளம் பத்திரிகைத்
தொண்டினிலே புரிந்துவிட்ட பங்களிப்புக் களவில்லை
எண்ணிலடங்குமா இராபத்மா உங்கள் சேவை

வேண்டுகிறோம் எந்நாளும் விநாயகனை வேலவனை
அண்ணலே உன் ஆத்மா சாந்தி பெற வேண்டுமென்று
பண்ணமைத்து இசைபாட முடியவில்லை யென்றாலும்
ஐயாவே இக் கவிதை சமர்ப்பித்தோம் உன் பாதம்.

சாந்தி - சாந்தி - சாந்தி


●

**இரா. நல்லையா**
பிராந்திய முகாமையாளர்
இலங்கை வங்கி



# ஊடகத் துறையில் சிறந்து விளங்கிய

# அமரர் பத்மநாதன்



நமது நாட்டின் மூத்த ஒலிபரப்பாளராகவும், பத்திரிகையாளராகவும் விளங்கியவர் அமரர் பத்மநாதன் அவர்கள். இலங்கையின் வானொலிச் சேவை மற்றும் தேசிய பத்திரிகைகள் என்பவற்றில் பல தசாப்தங்களாகக் கடமைபுரிந்த அவர் பெரும்பாலான ஒலிபரப்பாளர்களையும் பத்திரிகை யாளர்களையும் உருவாக்கிய பெருமைக்குரியவரும் ஆவார்.

பல தசாப்தங்களுக்கு முன்பு இலங்கை வானொலியில் சிறுவர்களுக் கென நடத்தப்பட்ட நிகழ்ச்சியினை சிறப்பாக நடத்திய அமரர் பத்ம நாதன் அவர்கள் சிறுவர்களால் மட்டுமின்றி பெரியவர்களாலும் "வானொலி மாமா" என அன்போடு அழைக்கப்பட்டவராவார். ஒலிபரப் பாளராக அவர் கடமையாற்றிய காலத்தில் சிறந்த பல நிகழ்ச்சிகளை தயாரித்து அளித்து வானொலி நேயர்களைக் கவர்ந்தார்.



ஆலய கும்பாபிஷேகங்கள், அரசாங்கப் பொது நிகழ்ச்சிகள் போன்றவற்றை மிகவும் சிறப்பாக நேர்முக வர்ணனை செய்து தொகுத்தளித்தார். இலங்கையில் பிரபலமான பத்திரிகைகள் அனைத்திலும் சிறந்த பல கட்டுரைகளை மட்டுமின்றி நாவல்கள் சிறுகதைகள், செய்திகள் என்பவற்றையும் எழுதிய பத்திரி கையாள ராகவும் அவர் திகழ்ந்தார். "தினமுரசு" என்ற பத்திரிகையில் அவர் கௌரவ ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் பல தொடர் கதைகளையும், தொடர் கட்டுரைகளையும் எழுதி வாசகர்களைப் பெரிதும் கவர்ந்தார்.

தினமுரசு வார இதழில் இராமாயண காவியம் தொடர்பாக அவர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு எமது திணைக்களத்தால் "கோதண்டம் ஏந்திய கோமகன்" என்னும் பெயரில் நூல் வடிவில் வெளியிடப்பட்டு பலரது பாராட்டுக்களையும் பெற்றது.



அமரர் பத்மநாதன் அவர்கள் பல ஒலிபரப்பாளர்களும், பத்திரிகை யாளர்களும், இலக்கியவாதிகளும், தோன்றுவதற்கு தம்மாலான அனைத்து உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கிய மூத்த அனுபவசாலியாவார்.

தமிழகத்தில் சில காலம் அவர் வாழ்ந்த போது முன்னாள் தமிழக முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் மற்றும், சிரேஷ்ட அமைச் சர்கள் பலரோடும் மிகவும் நெருக்கமாக பழகும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். அன்னாரின் இழப்பு ஊடகத்துறையினரைப் பொறுத்தவரை பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எமது மனமார்ந்த பிரார்த்தனைகள் உரியன.

**சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர்.
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
கொழும்பு - 4



# எல்லோருக்கும் நல்லவனாக வாழ்வது எல்லோராலும் முடிகின்ற காரியமல்ல

நான் அறிந்தவரையில், இரா. பத்மநாதன் அவர்களால் முடிந்திருக்கிறது. இறுதிவரை எல்லோராலும் நேசிக்கப்படும், உயர்வான வாழ்வை, வாழ்ந்து மறைந்திருக்கிறார். அதற்கு அவர் தன் வாழ்வில் கடைப்பிடித்து வந்த பொறுமையும், தன்னைச் சுற்றி வாழ்வோரின் குறைகளை ஆராயாமல், நிறைகளை மட்டுமே அவதானித்து, அதேவேளை அவர்களது திறமை களை மனம் திறந்து பாராட்டி ஊக்குவிக்குவிக்கும் பண்புமே, நம் நேசத்துக்கும் மதிப்புக்கும் உரிய மனிதராய் அவரை விளங்கவைத்தது.

சிறுவர்மலரில் சின்னஞ்சிறுவர்களுடன் குழந்தையுள்ளம் கொண்ட வானொலி மாமாவாகவும், கிராமிய பண்பாட்டுக் கோலங்களை ஆய்ந் தறிந்து அடுத்த தலைமுறைக்கு அறிமுகப்படுத்தும் சிறந்த தயாரிப்பாள ராகவும், பின் பத்திரிகையாளராகவும், என எத்தனை அவதாரங்களை எடுத்தாலும், தளும்பாத நிறைகுடமாகவே வாழ்ந்தார்.



வானொலிநிலைய வாழ்க்கைக்குப் பிறகு, நான் ஒரு நாடோடியாகவும், அவர் பத்திரிகைத் துறையாளராகவும் வெவ்வேறு திசைகளில் இருந்தாலும், என்னைப் பற்றிய சின்னச் சின்னச் செய்திகளைக் கூடக் கரிசனையோடு சேகரித்தறிந்து, நான் தாயகம் வரும்வரை காத்திருந்து, தொலைபேசியில் அழைத்துப் பாராட்டும்போது, என் வளர்ச்சியை தன் வளர்ச்சியாகக் கருதிப் பெருமைப்படும் ஒரு மூத்த சகோதரனைப் போன்ற வாஞ்சையை அவரது குரலில் பிரதிபலிப்பதை உணர்வேன்.

ஒரு அன்புச் சகோதரனை இழந்த துயரம் என்னைப்போல் பலருக்கு ஏற்பட்டுள்ளதை மறுக்க முடியாது.

எல்லோருக்கும் இனியமனிதராக வாழ்ந்தவர் என்பதால், சர்க்கரை நோயும் அவரோடு இணைபிரியாத ஒன்றாக இருந்து வந்தது. ஆனால் இத்தனை விரைவில், அவர் நம்மைவிட்டுப் பிரியப்போகிறார் என்று நாம் எதிர்பார்க்கவில்லை.

அவரது வாரிசுகள் அவர் பேர்சொல்ல வாழவும், அவரது ஆத்மா நற்பேறு பெறவும் எல்லோருக்கும் பொதுவான ஏக இறையை வேண்டுகிறேன்.

அன்புடன்

**பி.எச். அப்துல் ஹமீத்**




# மனிதருள் மாணிக்கம்

நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்து ஏழாயிரம் யோனி பேதங்கள் அரிதினும் அரியது மானிடப் பிறவி.

மனதை உடையவன் மனிதன், மனித உடல் எடுத்த எல்லோரும் மனிதராகிவிட முடியாது. அமரர் இரா. பத்மநாதன் ஆளுமை கொண்டதோர் ஊடகவியலாளர், கண்ணாடியில் முகத்தை பார்க்கலாம். ஆனால் மனத்தை பார்க்க முடியாது. அடக்க முடியாத நெஞ்சுடையான் அஞ்சாத வீரமுடன் தின முரசுதனில் முரசொலித்த கோமகன்.

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர். நல்லாசிரியனாய் இறை நாடும் சமையியாய் அன்பால் அறிவால், ஆற்றலால் சுற்றந் தழுவி வாழ்ந்த வானொலி மாமாவாய் உண்மைத் தமிழனாய் வாழ்ந்தது தான் அதற்குக் காரணம்.

பல வானொலி நிகழ்ச்சிக்குப் புது பொலிவு கொடுத்து புதுமை படைத்த மாமா தொலைக்காட்சியில் தேரோடும் வீதியிலே எனும் விவரணத்தின் மூலம் தொலைக் காட்சியிலும் தனது பெயரை பதித்து கொண்டார்.



"நான் நானாக வாழ வைத்த தெய்வம் அவர்" என்று கூறுகையில் என் வாய் குளறிச் சொற்கள் தடுமாறுகின்றன. கண்ணீர் கண்களை மறைக்கின்றன. எனினும் ஒன்று மட்டும் கூறுவேன். "ஒருவரின் மனம் நோக வாழாதவர்கள், பிறர் துன்பங்களை தன்துன்பமாகச் சொல்பவர்கள், தம்மை நம்பி வாழ்பவர்களைக் காப்பாற்ற தமதுடலைத் தம் சுகத்தைத் துரும்பாக மதித்து உழைப்பவர்கள், அவனன்றி ஓரணுவும் அசையாது என்ற தத்துவத்தில் கடைசிவரை நம்பிக்கை கொண்டவர்கள், நற்புத்திரர்களை பெற்று மக்கள் சேவைக்குத் தந்தவர்கள் மோட்ச சாம்ராச்சியத்தை அடைவாரென" மறைகள் கூறுவது உண்மையாயின் எனது மாமா இரா. பத்மநாதன் அம்மோட்ச இன்பத்தை அடைவார்" என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுடன் ஆறுதலடைகின்றேன். அதையே அவர் மக்களுக்கும் உற்றார் உறவினர்க்கும் கூறி அமைதி கொள்கிறேன்.

**இரா. இரவிந்திரன்**
உதவிப் பணிப்பாளர்
இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

அரு. கோபாலன்

# பத்மநாதன் எனும் பைந்தமிழ்க் கருவூலம்

திருக்குறள் 1330 பாக்களையும் ஒருங்கே ஒப்பிப்பது, ஒரு குறளைச் சொல்லி, அது என்ன பால், என்ன இயல், என்ன அதிகாரம் என்று கேட்டால் சரியாக விடையளிப்பது; இப்படிச் சில திறமைகளைக் காட்டத் தெரிந்தவுடன் பதின்கவனகர், பதினாறு கவனர், அட்டாவ தானி, சதாவதானி என்றெல்லாம் தங்களுக்குத் தாங்களே பட்டம் சூட்டிக் கொள்வோர் மத்தியில் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் வித்தகம் விளைவித்து, பத்திரிகை, வானொலி, மேடை என்று எத்துறையானாலும் அதில் தனக்கெனத் தனிமுத்திரை பதித் தாலும், அப்படி ஒரு பட்டம் போட்டுக் கொள்ளாத பைந்தமிழ்க் கருவூலத்தை நான் இரா. பத்மநாதன் அவர்கள் வடிவிலேதான் பார்த்திருக் கிறேன், வியந்து மகிழ்ந்திருக்கிறேன்.

'மீன்பாடும் தேனாடு' என்று சொல்லக்கூடிய மட்டக்களப்பில் பிறந்த மங்கையர்கூடத் தானாகப் பாட்டுக் கட்டிப் பாடும் திறன் கொண் டவர்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அதை காசி. ஆனந்தன், ஜெகத்து ரத்தினம், இரா. பத்மநாதன் ஆகிய இந்த மூவரின் மூலம் முழு உண்மை என்று நேரில் கண்டுணர்ந்திருக்கிறேன்.



முதலில் சுட்டிய இருவரிடம் இல்லாத நகைச்சுவையுணர்வு திரு. இரா. பத்மநாதனிடம் மேலதிகமாக உண்டு. எத்தனை நெருக்கடியான சூழ்நிலையிலும் பத்மநாதன் உள்ள இடத்தில் சிரிப்பு வெடிகள் வெடித்துக் கொண்டேதான் இருக்கும். அவருடைய புன்சிரிப்போடு கூடிய உரையாடலும், இசைப்பாடலும் எல்லாரையும் வசீகரித்து விடும். பகையையும் நட்பாக்குவது அந்த நகை தானே!

அந்த முறையில்தான் தமிழ்நாட்டின் தலைமக்களாகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., நடிகர் திலகம் சிவாஜி கணேசன் முதலிய தமிழ்நாட்டின் அரசியல், கலை, சமயம், சமுதாயம் மற்றும் இலக்கியத் துறைகளில் இருந்த அத்தனை பேர்களுக்கும் அவர் அறிமுகமானவராக விளங்கினார்.

இலங்கையில் பிறந்து வாழ்ந்தாலும் இந்தியப் பொதுவாழ்க்கை அவருக்கு அத்துபடி என்பதை நான் பல தருணங்களில் பார்த்திருக் கிறேன். என்னைப் பொறுத்தவரை திரு. பத்மநாதனின் நினைவாற்ற லுக்கு ஈடு சொல்ல வேண்டுமானால், முன்னாள் தமிழக முதல மைச்சர் தி.மு.க. தலைவர் கலைஞரைத் தான் சொல்லமுடியும். ஆம், வாழ்க்கையில் ஒரே ஒரு நாள் ஒரே ஒரு முறை ஒரு சில நொடி நேரம் சந்தித்தவரைக் கூடக் கலைஞர் நினைவு வைத்திருப்பார்.

அப்படியே கழகத்திலுள்ள பல்லாயிரக் கணக்கானோரையும் நினைவிலே பதிந்து, ஒவ்வொருவரையும் தனித்தனியே அவருடைய ஊர், பெயரைச் சொல்லி அழைக்கின்ற திறமை அலாதியானது. அது மட்டுமின்றித் தான் முதன்முதலாக எழுதியது உட்பட அன்று எழுதியதுவரை அப்ப டியே நினைவில் பொதிந்து வைத்திருப்பார். அதே திறமையை நான் திரு. பத்மநாதனிடம் கண்டு வியந்திருக்கிறேன். நெகிழ்ந்திருக்கிறேன்.

எடுத்துக்காட்டாக, பழைய கிராமபோன் இசைத்தட்டுகளில் வெளிவந்த செல்லப்பா, கிட்டப்பா, மாரியப்பா, தண்டபாணி தேசிகர், வசந்த கோகிலம் போன்றோர் பாடிய தனிப்பாடல்கள் பற்றிப் பலருக்குத் தெரியாது. ஒரு சமயம் "இந்த உலகினில் இருக்கும் மாந்தரில் எழிலுடையோன் எங்கள் தமிழன்" என்ற பல்லவியைக் கொண்ட, கோவை அய்யாமுத்து என்பவரால் இயற்றப்பட்டு, எம்.எம். மாரியப் பாவால் பாடப்பட்ட ஒரு பழம் பாடல் ஒரு தமிழ் மாநாட்டு மலருக்குத் தேவைப்பட, அது எங்கு தேடியும் கிடைக்காமலிருந்த நிலையில் திரு. பத்மநாதன் பாடிக்காட்ட அனைவரும் வியந்து போனார்கள்.. அவரு டைய நினைவில் இருந்ததுதான் மலரில் மலர்ந்தது. அதுபோலவே அவர் பங்குகொண்ட வானொலி, மேடை நிகழ்ச்சிகள் அனைத்தையும் கேட்ட மாத்திரத்தில் நடத்திக் காட்டிச் சொக்க வைத்து விடுவார்.





"ஊருக்குழைத்திடல் யோகம் - நலம்
ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்
போருக்கு நின்றிடும் போதும் - மனம்
பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞ்ஞானம்"

என்ற மகாகவி பாரதியின் வாக்குக்கேற்ப, பிறருக்காக உழைப்பதை யோகமாகவும், பொதுநலத்திற்காகத் தன்னலத்தைத் துறப்பதை யாகமாகவும், எவ்வளவு சோதனைகள் வந்தாலும், எத்தனை நெருக் கடிகள் நேர்ந்தாலும் கொஞ்சம்கூடக் குழம்பாமல் ஒப்புக்கொண்ட பணிகளைச் செய்து முடிப்பதை ஒழுங்காகவும் கொண்ட அவர், பலருக்கு வழிகாட்டியாக விளங்கினார். அதேநேரத்தில்,

"வையகம் காப்பவரேனும் - சிறு
வாழைப்பழக்கடை வைப்பவரேனும்
பொய்யகலத் தொழில் செய்து - நிலம்
போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்"

என்று மகாகவி கூறியதுபோல திரு. பத்மநாதனும் ஆள் அம்பு சேனை படைத்த ஆளவந்தோராயினும், பாழும் புழுப்போல சமுதாயத்தின் கடைக்கோடியிலுள்ள பாமரனாயினும் உரிய மரியாதை கொடுத்துப் பழகிடும் பண்பு கொண்டவராகத் திகழ்ந்தார். அன்பு கொண்டவராகத் திகழ்ந்தார்.




"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்"

என்பது திருக்குறள். திரு. பத்மநாதனின் எச்சங்களாகப் பாங்குடன் அவர் ஆக்கிய இலக்கியப் படைப்புகளும், அதே பண்புகளோடு அரிய பணிகளைச் செய்து வரம் அவருடைய மக்களும் இன்று நம்முன் எழுந்து நின்று அவருடைய தகைமைகளைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் மிகையாகாது.

ஓங்குக பத்மநாதன் உயர்புகழ்!

●

# என்றும் நெஞ்சைவிட்டு அகலா உத்தமர்



சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஆங்கில ஆசிரியராக அறிமுகமானோம். அவர் களுதாவளை இராமகிருஷ்ண மிசன் பாடசாலையில் கடமையாற்றினார். அப்பொழுது அங்கு பயின்ற மாணவர்களுக்கு நடனம் பழக்கி மட்டக்களப்பு நகரில் நடந்த தைப்பொங்கல் விழாவில் அரங்கேற்றி பாடசாலைக்கும், எங்கள் கிராமத்திற்கும் பெயர் ஈட்டித் தந்தார்.

பாடசாலையில் அவர் ஆங்கில ஆசிரியராக மட்டும் கடமையாற்றவில்லை. அவர் ஒரு பல்கலையும் அறிந்த ஒரு ஆசானாகத் திகழ்ந்தவர். இதனால் கிராமமக்களிடையே மிகுந்த மதிப்பைப் பெற்றார்.

பின்னர் ஆசிரியர் பதவியை இராஜினாமா செய்து விட்டு கொழும்பு சென்று “வீரகேசரி” பத்திரிகையின் உபஆசிரியராக பணிபுரிந்தார். இக்காலப்பகுதியில் பல நாடுகளுக்கு விஜயம் செய்து சிறந்ததோர் பிரயாணக் கட்டுரையை வீரகேசரியில் தொடர்ந்து வெளியிட்டார்.



இவர் "சுதந்திரன்" பத்திரிகையிலும் ஆசிரியராகக் கடமை யாற்றியுள்ளார். மட்டக்களப்பில் இயங்கிய சுயமரியாதைக் கழகம் மற்றும் திராவிடக் கழகங்களின் நடவடிக்கைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இதனால் தமிழ்நாட்டு அரசி யலிலும், சினிமாத் துறையிலும் மிகவும் ஈடுபாடு கொண்டி ருந்தார். இதனால் தமிழ்நாட்டிலும் பெரும் பிரபல்யம் அடைந் திருந்தார். ஒரு சிலகாலம் அமெரிக்க தூதரகத்தில் தகவல் உத்தியோகத்தராகச் செயலாற்றினார். இக்காலப் பகுதியில் எனக்கும் அவருக்கும் கூடிய நெருக்கம் ஏற்பட்டது. இக்காலப் பகுதியில் எனக்கு அமெரிக்க அரசாங்கம் அங்குள்ள விவசாய பண்ணைகள், இளைஞர் கழகங்கள் மற்றும் பல்கலைக் கழகங் களுக்கு சென்று படிக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியது. இதனைச் செயல்படுத்தும் அதிகாரியாக திரு. இரா. பத்மநாதன் செயற்பட்டார். எனக்கு குருவாக, ஆலோசகராக, ஒரு சகோதர னாகச் செயல்பட்டு என்னை அமெரிக்காவுக்கு அனுப்புவதற்கு கடும்சிரமம் எடுத்தார்.

விமான நிலையத்தில் என்னை வழியனுப்ப வந்திருந் தார். நான் ஒரு இளைஞனாகவும், அனுபவமில்லாதவனாகவு மிருந்தேன். இதனால் நானும் எனது பெற்றோரும் மிகுந்த பயத்தோடிருந்தோம்.

அவ்வேளையில் அவர் கூறிய வார்த்தைகளை நான் என்றும் மறந்ததில்லை அவர் கூறியது என்னவென்றால் எந்தக் கஷ்டம் வந்தாலும் "பிள்ளையாரையும் அப்பாவையும் நினைத்துக்கொள்" இதனை நான் இன்றும் மனதில் நிறுத்தி செயற்பட்டு வருகிறேன்.


எம்மை வழியனுப்பி வைத்தபின் பல வழிகளிலும் என்னுடன் தொடர்பை வைத்திருந்தார். நாம் பின்னர் திரும்பி வந்தபொழுது எம்மை வரவேற்பதற்கு விமான நிலையத்தில் அப்பொழுது கொழும்பில் பல்கலைக் கழகத்தில் பயின்று கொண்டிருந்த பல நண்பர்கள் வந்திருந்தார்கள். அத்தோடு மட்டக்களப்பிலும் எனது கிராமத்திலும் வரவேற்பு அளித்தார்கள். இதனை ஒழுங்கு செய்திருந்தவர் வேறு யாருமில்லை. திரு. இரா. பத்மநாதன் அவர்களே தான்.


இலங்கை வானொலியில் கடமையாற்றும் பொழுது சிறந்த சமய நிகழ்ச்சிகளை நடத்தியிருந்தார். கிராமப் புறங்களி லிருந்த கோவில் களுக்கு பிரசித்தி பெற்றுக் கொடுத்தார்.

இவர் சமய சமூக, பொருளாதார கல்வி சம்பந்தமாக ஆற்றிய சேவைகள் என்றும் எம் மனதில் நிலைத்திருக்கும். இவருடைய இழப்பு ஈடு செய்ய முடியாதது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போம்.

**த. கனகசபை**
பாராளுமன்ற உறுப்பினர்





# ஈடிணையற்ற கலைஞன்

# பத்மநாதன்

பாடசாலைப் பருவத்திலிருந்தே "இரா. பத்மநாதன்" என்ற பெயர் எங்களுக்கு மிகவும் பரிச்சயமாகி இருந்தது. அவர் வானொலியில் நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கும் போது பேரை மட்டும் அறிவோம். நேரில் பார்த்ததில்லை.

பிற்காலத்தில் நான் கலாசார உத்தியோகத்தராகி ஆய்வுக் கட்டுரைகள் எழுத ஆரம்பித்த பின்னர், அவரும் என்னைச் சந்திக்க ஆவலாக இருந்தார் என்பதை அறிந்தேன். எப்படியோ கல்லும் தோல்காயும் சந்தித்ததுபோல் ஒரு நாள் நாங்கள் சந்தித்துக் கொண்டோம்.

அவர் தனது "கோதண்டம் ஏந்திய கோமன்" நூலை எனக்கு அனுப்பியிருந்தார். அதைப் படித்துப் பிரமித்துப் போனேன்.



இத்தகைய ஒரு பெரிய எழுத்தாளரை, மட்டக்களப்பு உரிய முறையில் கௌரவிக்க வில்லையே என்ற ஆதங்கம் எனக்கு எப்போதும் உண்டு. மூத்த பத்திரிகையாளர் அமரர் எஸ்.டி. சிவநாயகம் அவர்களை மறந்ததுபோல் இவரையும் மக்கள் மறந்து விட்டனர்.

அமரர் இரா. பத்மநாதனின் சாதனைகளை ஒவ்வொன் றாக எண்ணிப் பார்க்கிறேன்.

ஆரம்ப காலத்தில் தமிழரசுக் கட்சித் தூணாக முன்னாள் அமைச்சர் செ. இராசதுரையுடன் இணைந்து செயற்பட்டவர் தமிழரசுக்கட்சி செயற்பாடுகளில் முனைப்பாக ஈடுபட்டவர். திருமலை யாத்திரை முதலியவற்றில் மும்முரமான பங்களிப் பாளர். இளையதலைமுறையினர் இவற்றை அறியார். "சுதந் திரன்" முதலிய பல பத்திரிகைகளில், ஆசிரியர் குழுவில் இடம்பெற்று சொந்தப் பெயரிலும் புனை பெயர்களிலும் ஏராள மான கட்டுரைகளை எழுதியவர். ஒரு காலகட்டத்தில் "மூன்றாலங் கன்றடியான்" என்ற புனைபெயரில் இவர் எழுதிய பேய்க்கதைத் தொடரை மக்கள் விழுந்து விழுந்து படித்தனர். இக்கட்டுரைகள் மட்டக்களப்பைப் பின்னணியாகக் கொண்டிருந்ததை குறிப்பிடத் தக்கது.

இவர் பிற்காலத்தில் இந்தியா சென்று தமிழ் சினிமா உலகிலும் தனது முத்திரை பதித்தார். உதவி டைரக்டர் என்ற பெயர் பெற்றிருந்தாலும், சினிமாத்துறை சம்பந்தப்பட்ட சகல வேலைகளிலும் இவர் பரிச்சயம் பெற்றிருந்தார் சிறந்த செய்தி யாளராக, சிறந்த புகைப்படப்பிடிப்பாளராகச் செயற்பட்டார்.

பின்னர் இலங்கை வானொலியில் சேர்ந்து நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பல்வேறு நிகழ்ச்சிகளைத் தயாரித்தளித்தார். 1978 நவம்பர் 24ல் வீசிய சூறாவளியை நேரில் ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்பினார். இது பல தடவைகள் வானொலியில் இடம்பெற்றது. இலங்கை வானொலி, ரூபவாஹினி முதலிய நிறுவனங்களில், நம்மவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைப்பது அரிது. இத்தகைய பின்னணியில் அவர் நீண்டகாலம் இலங்கை வானொலியில், பல நெருக்கடிகளுக்கும், பல சவால்களுக்கும் முகம் கொடுத்து நிலைத்திருந்தார் என்பது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது.

இவரது "கோதண்டம் ஏந்திய கோமகன்" என்னும் நூல் இவரது பெயரை என்றும் நிலைத்திருக்கச் செய்யும்.

**க. தங்கேஸ்வரி**
பாராளுமன்ற உறுப்பினர்



# மனிதநேயம் மிக்க பண்பாளர்
# இரா. பத்மநாதன்

மறைந்த அமரர் இரா. பத்மநாதன் அவர்கள் காலமாகி விட்டார் என்ற செய்தி காதில் விழுந்த போது என்னால் நம்ப முடியவில்லை. காரணம் கூடிய கெதியில் காலன் அவரை எடுக்கும் அளவுக்கு அவரது உடல்நிலையும் உளநிலையும் இருக்கவில்லை.

தெளிந்த மனமும், சிந்தனை ஆற்றலும் கொண்டவர். பத்திரிகைத் துறையிலும் வானொலித் துறையிலும் அவர் பணிபுரிந்த காலத்தில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துக் கொண்டவர்.

இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் அன்றைய காலத்தில் இவரது குரல் ஒலிக்காத நாளில்லை. நாடகம், செய்தி வாசிப்பு, கிராமிய சஞ்சிகை, சிறுவர் நிகழ்ச்சி, வானொலி நேர்முக வர்ணனை என்பவைகளில் இரா. பத்மநாதன் அவர்கள் சிறந்த தொரு அறிவிப்பாளராகத் திகழ்ந்தார்.





மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரம் தீர்த்தோற்சவத்திற்கு செல்ல முடியாதவர்கள் அன்றைய நாளில் மாமாங்கேஸ்வரம் தீர்த்த உற்சவ தினத்தன்று அமரர் இரா. பத்மநாதன் அவர்களின் நேர்முக வர்ணனையை இலங்கை வானொலியில் கேட்டு ஆடி அமாவாசை, விரதக் கடன்களை முடித்துக் கொண்டனர் என்றால், எந்தளவு தூரம் அவரது நேர்முக வர்ணனை அமைந்தது என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

தான் பிறந்த மண்ணையும் மக்களையும் நேசித்து வாழ்ந்த பெருந்தகை. எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் ஆழமாகச் சிந்தித்து செயலாற்றியவர். பத்திரிகைகளில் இவர் எழுதிய அரசியல் சார்ந்த பல கட்டுரைகளிலிருந்து மட்டக்களப்பில் இலங்கை தமிழரசுக்கட்சி வேரூன்றியமைக்கு இவரது பங்களிப்பும் காரணமாக இருந்துள்ளது என்பதை உணர்ந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. இதை முனைநாள் அமைச்சரும், மட்டக்களப்பின் முடிசூடா மன்னனுமான சொல்லின் செல்வர் கலாநிதி செ. இராசதுரை அவர்களே மனம் விட்டு சொல்லியுள்ளார்.


சிங்கள மொழித் தாக்கத்தால், இலங்கை வானொலியை விட்டு விலகி பத்திரிகைத் துறையில் நுழைந்த இவர் சில ஆண்டுகள் தமிழகத்திலிருந்து அளப்பரிய சேவைகளை செய்ததுடன் மீண்டும் இலங்கை வந்து, கட்டுரைகளையும், நூல்களையும் எழுதி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

தனது, சுகயீன காலத்திலும் தெளிவு சிந்தனையுடன் செயல்பட்டவர் அமரர் இரா. பத்மநாதன். தான் சார்ந்தவர்களை சாகும் வரை மறக்காத மனித நேயம் மிக்கவர். உள்ளொன்று வைத்து புறம் பேசும் தன்மை அவரிடம் கிடையாது. எதையும் ஒளிவு மறைவின்றி எடுத்துக் கூறும் பண்பாளர். தனது குடும்பத்தவர்களையும், மக்களையும், நண்பர்களையும் என்றும் மறக்காதவர். அதுமட்டுமல்ல சாயி பக்தரும் கூட.

இலைமறை காய் போல் வாழ்ந்து, அமரத்துவம் அடைந்த போது அவரைப் பற்றி, எழுதாத ஊடகங்களும், பெயரை உச்சரிக்காத வானொலிகளும் இல்லையென்றே கூறலாம். அந்தளவுக்கு பத்மாவை அவர்கள் அறிந்து வைத்திருந்தார்கள் என்பதே உண்மை.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அவரது மகாபாரதத் தொடர் கட்டுரைகளை உள்ளடக்கிய "கோதண்டம் ஏந்திய கோமகன்" என்னும் நூலைப் பதிப்பித்து வெளியிட்டதுடன், "கலாபூஷணம்" என்னும் அரச விருதையும் 2001ஆம் ஆண்டு வழங்கி கௌரவித்தது. இது இவரது திறமைக்கும், உயரிய எழுத்தாற்றலுக்கும் கிடைத்த பரிசாகும்.

அமரர் இரா. பத்மநாதன் அவர்களுடன் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக நெருங்கிப் பழகியவன் நான்.



என்னை வானொலிக்கு அறிமுகம் செய்து வைத்த பெருந்தகை. இனிய பண்பாளர். அறிவுரைகள் கூறி ஆற்றுப் படுத்திய சிந்தனை யாளர். எல்லாவற்றையும் விட மனித நேயம் மிக்கவர். பொறு மையுடன் சிந்தித்து செயலாற்றியவர். தான் கஷ்டநிலையில் வாழ்ந்தபோதிலும் மற்றவர்களுக்கு, கஷ்டம் கொடுக்கக் கூடாது என்ற சிந்தனையுடன் வாழ்ந்து, இறைபதம் அடைந்துள்ளார் பத்மா.

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் உளமார்ந்த அனுதாபங்களையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதுடன் அமரர் இரா. பத்மநாதன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இங்ஙனம்,

அவரை மறவாத,

**எஸ். தெய்வநாயகம்**

உதவிப்பணிப்பாளர்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்



# புகுந்த ஊரின் பெருமைக்கு புகழ்சேர்த்து தந்தவரே

ஊருலகம் போற்றும் எங்கள் உத்தமனார்
பேரிலங்கி வாழ்ந்த இரா பத்மநாதன் ஐயா,
மட்டக்களப்பு மாவட்ட மணம் பரப்பி நின்ற மலர்
சட்டெனவே வாடியிங்கு சலனமின்றித் தூங்குதையா,

ஆழமாகச் சிந்திப்பீர் அமைதியாகப் பேசிடுவீர்
தோழமையால் பகைவரையும் சொந்தமாக்கிக் கொள்வீரே,
வானொலியில் பத்திரிகை, தொலைக்காட்சி புத்தகத்தில்
தானொலித்த குரல் இன்று மௌனமொழி பேசுவதேன்.

அண்ணாவின் பாசறையில் கவிஞருடன் கவியரசு
ஒன்னாகத் திரிந்தவனே விண்ணாளம் போயினையோ,
புகுந்த ஊர் களுதாவளைக்கு புகழ்சேர்த்து தந்தவரே
தகுந்த உன் உடல் இன்று எம்மூரில் சங்கமமே,

மட்டுநகர்ப் பெருமைகளை மற்றோரும் அறிவதற்கு
கட்டுரைகள் எழுதிவந்த கைகள் இன்று ஓய்ந்ததம்மா
கோதண்டம் ஏந்தியதோர் கோமகனை எழுதியதால்
ஏதண்டம் சென்றாலும் என்றும் உன் பெயர் நிலைக்கும்

சாகித்திய மண்டலத்தின் விருது பெற்ற கலைஞன் ஐயா
சாநித்தியம் பெற்றவனே சாவென்ன செய்து விடும்.
ஆங்கிலத்தை கற்பிக்க ஆர்.கே.எம். வந்தவரே
நாங்கள் பெற்ற பொக்கிசத்தை இழந்து நாம் தவிக்கின்றோம்.

ஆடிஓய்ந்த பம்பரம்போல் அமைதியாகத் தூங்குகிறீர்
ஈடில்லா உன்புகழை எடுத்துரைக்க வார்த்தையில்லை,
தேன்சொட்டும் தமிழினிலே தெளிவான கட்டுரைகள்
மூன்றாலங் கன்றடியான் இராஜகுமாரன் உன்பெயரே.



வானொலிக்கு நிகழ்ச்சிகளை வடிவமைத்துக் கொடுப்பதற்கு
வான்சிட்டுப் போலநீயும் பறந்தீரே மறப்போமா
பண்பட்ட நடிகன்ஐயா பழம்பெரும் கலைஞன் ஐயா
கண்பட்டுப் போனதினால் மண்விட்டுப் போயினையோ,

இராபத்மநாதன் என்றால் எல்லோர்க்கும் தெரிந்த பெயர்
வராது இருக்கவில்லை வருவதற்கும் முடியவில்லை,
அரசியலில் சாணக்கியன் அண்டினர்க்கு மதியூகி
சிறி எதிர்ப்பில் முன்னின்ற செந்தமிழின் காவலனே

பஞ்சுபோல் நரைத்தமுடி புதுமைபோல் மெல்லநடை
நெஞ்சிலே உரமிருக்கும் நிகர் உனக்கு ஆரிருக்கார்
எல்லோர்க்கும் தெரிந்த மகன் இராபத்ம நாதன் என்பார்
நல்லோர்கள் கூடிவந்தார் சொல்லாமல் உறங்குவதேன்,

க. சுந்தரலிங்கம்
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (சித்திரம்)

ஆ. அரசரெத்தினம்
முன்னாள் ஆசிரியர்



# பல்துறைக் கலைஞர் பத்மநாத ஐயா

மீன்பாடும் தேனாடாம் மட்டு மாநகரில் 1929-7-19ம் நாள் அமரர் பத்மநாதன் ஐயா அவர்கள் இராஜதுரை - அமிர்தம்மா தம்பதிகளுக்கு புத்திரராகப் பிறந்தார். தம் இளமைக் கல்வியை ஆனைப்பந்தி பாடசாலையிலும் உயர்கல்வியை மட்டக்களப்பு மத்திய கல்லூரியிலும் (இந்து கல்லூரி) சிவானந்தா வித்தியால யத்திலும் பெற்றார். தமது இளமைக்காலத்திலே இலக்கியம், கலை, பத்திரிகைத் துறையிலே நாட்டம் கொண்டவராகத் திகழ்ந்தார். தன் 13வது வயதிலே தமிழகத்தில் வெளிவந்த அனுமான் பத்திரிகையிலே பாப்பா முரசுப் பகுதியில் எழுதிய பாடலுக்கு பரிசு கிடைத்தது. இதுவே இவர் வாழ்க்கையில் கலை இலக்கியத்துறையில் நாட்டம் கொள்ள வைத்தது.

1953ம் ஆண்டு களுதாவளை கிராமத்தின் இராம கிருஷ்ண வித்தியால யத்தில் ஆங்கில ஆசிரியராகவும் பின்பு சிறிது காலம் குருக்கள் மடம் கிராமத்தின் மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும் ஆங்கில ஆசிரியராக கடமையாற்றியுள்ளார்.



இவர் ஆங்கில ஆசிரியராக இருந்தபோதும் பல்வேறு கவின் கலைகளான நாடகம், நாட்டியம், இசை, ஓவியம் போன்ற வற்றை பயிற்றுவதிலும் மாணவர் இப்போட்டிகளில் பங்கு கொண்டு பரிசுகள் பெற வழிவகுத்தார். வானொலி, தொலைக் காட்சி இல்லாத அக்காலத்தில் கிராமபோன் பெட்டியில் இசைத் தட்டை சுழல விட்டு நடனம் பயிற்றுவித்ததை அவர் மாணவர் கள் இன்றும் நினைவு கூறுகின்றனர்.


சுதந்திரன், பத்திரிகையில் 1962-1966 காலப் பகுதியில் இணை ஆசிரியராக இருந்து பல கட்டுரைகளை எழுதி தமிழர் போராட்டத்திற்கு வலிமையூட்டினார்.

வீரகேசரி பத்திரிகையில் கடமை புரிந்த காலத்தில் பத்திரிகை முகாமையாளரான P.R.R.S. செட்டியார் அவர்கள் தென்கிழக்கு ஆசிய சுற்றுப் பயணத்தின் போது திரு. பத்ம நாதன் ஐயா அவர்களின் எழுத்தாற்றலையும் ஆங்கில அறிவையும் கண்டு இவரை அந்தரங்க செயலாளராக தன்னுடன் சேர்த்துக் கொண்டு பயணம் செய்தார். அக்காலகட்டத்தில் தான் சென்ற நாடுகளின் அநுபவங்களையும் சம்பவங்களையும் நிகழ்ச்சி களையும் ஆங்கிலம் மற்றும் தமிழ் பத்திரிகையில் எழுதி வாசகர் களையும் கவர்ந்தார்.

1969-1984ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை வானொ லியில் செய்தித் தொகுப்பாளராகவும் சிறுவர் மலர், கலைக் கோலம், கிராம சஞ்சிகை போன்ற நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப காரணமாய் இருந்தார்.

தமிழக திரைக்கலைஞர் தொடர்பினால் சினிமா உலகிலும் பல முத்திரைகளைப் படைத்தார். இலங்கை திரைப்படத் துறை யிலும் தயாரிப்பாளருக்கும் ஆலோசனை வழங்குபவராகவும், கதை, வசன கர்த்தாவாகவும், பாடலாசிரியராகவும், நடிகரா கவும் விளங்கியுள்ளார்.

தமிழக அரசியல் பிரமுகர்களான ராஜாஜி, காமராஜர், அண்ணாதுரை போன்ற தலைவர்களுடன் தொடர்பு கொண்டி ருந்தார். இவரின் பேனா சகலதுறையிலும் விடயங்களை காலத்திற்கேற்ப எழுதும் திறமை பெற்றிருந்தது. நகரத்தில் பிறந்திருந்தாலும் பத்மநாதன் ஐயா அவர்கள் கிராமிய சூழ் நிலையிலுள்ள மந்திரம், சூனியம், பூஜை போன்ற கிராமிய வாசனை உள்ளதாக உயிர்ப்பாக எழுதினார்.






தமிழகத் திரையுலகில் எம்.ஜி.ஆர்., கண்ணதாசன், ஜெமினி போன்றோருக்கு நண்பராகவும் மதிப்புள்ளவராகவும் வாழ்ந்தார்.

தமிழக நடிகர்கள் இலங்கை வந்த போதெல்லாம் பத்ம நாதன் ஐயா அவர்களை குசலம் விசாரித்து சென்றனர். இலங்கை பத்திரிகைத் துறையிலும் D.S.சிவநாயகம் (தினபதி), சிவகுரு நாதன் (தினகரன்) போன்றோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவராக பல கட்டுரைகளையும், விடயங்களையும் எழுதியுள்ளார். கடைசியாக தினமுரசு பத்திரிகையில் புராதன இதிகாசங்களையும் தொடர்ந்து எழுதி வந்தார். ஊடகத் துறையில் நீண்டகால அநுபவத்தைக் கொண்ட இவரின் திறமையைப் பாராட்டி கலாச்சார அமைச்சினால் "கலாபூசணம்" "கலாபாரதி" ஆகிய விருதுகளை வழங்கினர். இவர் இறுதியாக எழுதிய கோதண்டம் ஏந்திய கோமகன் என்னும் நூல் தமிழ் உலகம் என்றும் மறக்காது.

(ஓவியத்துறையிலும் அவரின் அனுபவமும் ஆற்றலும் கொண்டவர். அவர் எழுதிய 'வன்னிக்கு வைத்த வசியம்' தொடர் நவீனத்தின் கதாபாத்திரங்கள் சூழல் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை படம் வரைபவர்க்கு ஆலோசனை வழங்கினார். பத்திரிகையில் படம் வெளிவந்த பின்னர் அவரின் சித்திர நுட்பம் புரியும்படியாக இருக்கும்.)

இராஜகுமாரன், மூன்றாலங்கன்றடியான் என்னும் பெயரிலும் எழுதினார். இவர் எழுத்தும் விடயமும் காலம் உள்ளவரை அவரை நினைவுகூறும்.

**செ. டானியல்**
உதவிக்கல்விப் பணிப்பாளர்
பட்டிருப்பு கல்விவலயம்
களுவாஞ்சிகுடி




# என் நினைவுகளில் இரா. பத்மநாதன் அவர்கள்

நிலையற்றதாகிய இவ்வுலகில் பிறப்பதும் வாழ்வதும் இறப்பதும் ஆகிய நிகழ்வுகள் அனைத்து உயிர்களுக்கும் விதிக்கப்பட்ட நியதியாகும். ஆயினும் மானுட வாழ்வில் இந்த நியதிக்கு அப்பாற்பட்டு தம் வாழ்வுக்கான சில சில ஆதாரங் களை நிலைபெறச் செய்துவிட்டுப் போவோர் மிகச்சிலரே. வெறுமனே, பிறந்தோம், வாழ்ந்தோம் மடிந்தோம் என்றில்லாமல் தம் வாழ்க்கையை அர்த்தமுடையதாக்கும் வாய்ப்புக்களும் அந்த மிகச் சிலருக்கே கைகூடுகின்றன.

அத்தகைய அர்த்தமுடைய வாழ்க்கையைப் பெற்றவர் தான் அமரர் திரு. இரா. பத்மநாதன் அவர்கள். அடக்கமும் அமைதியும் அறிவும் ஆற்றலும் பெற்ற ஒரு பண்பட்ட மனிதராக நான் அவரை அறிந்திருந்தேன்.

நீண்டகாலமாக இலங்கை வானொலியில் பணிபுரிந்து வந்த அவர் வானொலி மாமாவாக சிறுவர் நிகழ்ச்சி நடாத்திக் கொண்டிருந்தார்.





குட்டி நாடகம், கதை, பாட்டு, கட்டுரை என்று பலசுவையான அம்சங்கள் ஞாயிற்றுக்கிழமை அந்த நிகழ்ச்சிக்காகவே வானொலி அருகில் தவமிருப்பேன். சிறுவயதில் என்னிடம் உருவான எழுத்தார்வத்துக்கு வடிகாலாக அமைந்தது அவருடைய சிறுவர்நிகழ்ச்சியாகும். கடிதங்கள், கட்டுரைகள் என நான் எழுதியனுப்பும் ஆக்கங்களை சிறுவர்நிகழ்ச்சியில் சேர்த்துக் கொண்டு எனது எழுத்தார்வத்தை வளர்த்துவிட்டதில் பெரும் பங்கு திரு. இரா. பத்மநாதன் அவர்களையே சாரும்.

கர்வமில்லாமல் பிறருக்கு உதவிசெய்யும் உயரிய பண்பை இலங்கை வானொலி நிலையத்தில் நான் அவரிடம் கண்டு வியந்தேன். 1980ல் ஆசிரியையாக எமது மண்டூர் மகாவித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்களுடன் கல்விச் சுற்றுலா ஒன்றுக்காகப் புறப்பட்டுக் கொழும்புக்கும் சென்றிருந்தோம். இலங்கை வானொலி நிலையத்தைப் பார்வையிடச் சென்றபோது அனுமதி மறுக்கப்பட்டது. அதிபர் எவ்வளவு முயன்றும் முடியாமற் போய்விட்டபோது மனதில் ஒரு சிறுநம்பிக்கையுடன் நான் பஸ்சில் இருந்து இறங்கிச் சென்றேன்.

இலங்கை வானொலியில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் நான் எழுதிக்கொண்டிருந்த காலம் அது.

வரவேற்பிடத்தில் திரு. இரா. பத்மநாதன் அவர்கள் அறிவிப் பாளர் அப்துல் ஹமீத் அவர்களுடன் உரையாடிக் கொண்டு நிற்கிறார். நான் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு எமது பிரச்சினையை அவரிடம் கூறினேன்.

அவ்வளவுதான் திரு. இரா. பத்மநாதன் அவர்கள் தனக்கே ஒரு வில்லங்கம் ஏற்பட்டு விட்டதுபோன்ற தவிப்புடன் விரைந்து செயற்பட்டு எதிர்ப்பட்ட அறிவிப்பாளர்களிடமெல்லாம் என்னை அறிமுகப்படுத்தி வைத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அனுமதிபெற்று தந்து வானொலி நிலையத்தின் சகல செயற் பாடுகளையும் எமது மாணவர்கள் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்து தந்தார்.

அதுமட்டுமல்லாமல் அன்றைய நாளின் பெரும் பகுதியை எமக்காகச் செலவிட்ட அந்தப் பண்பாளரின் பெருந்தன்மையை நான் நன்றியுடன் அடிக்கடி நினைத்துக் கொள்வேன்.





பண்பட்ட ஒரு வானொலிக் கலைஞராகவும் எழுத்தாள ராகவும் விளங்கிய அமரருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பு எனக்கு கிடைக்காமற் போனது எனது துரதிஸ்டமே. ஆயினும் அவரது குரலும் எழுத்தும் எமது வீடுதேடிவந்தன.

இராஜ குமாரன் என்ற புனைபெயரில் அவர் தினமுரசு பத்திரிக்கையில் எழுதிவந்த தொடர் அவரது எழுத்து வல்லமையை எமக்கு இனம்காட்டியது.

இன்னும் பல வருடங்கள் அவர் எம்மிடையே வாழ்ந்து இலக்கியப் பணியாற்றி இருக்கலாம். இறைவனின் அழைப்பு முந்திக் கொண்டது. அவரது ஆத்மா இறைவனின் பாதங்களில் சாந்தி பெற எனது பிரார்த்தனைகள்.

- மண்டூர் அசோகா

# கலைகளையும் கலைஞர்களையும் வளர்த்தவர்

பத்திரிகைத் துறை, ஒலிபரப்புத்துறை, நாடகத்துறை என பல துறைகளிலும் ஆழமாகவும் அகலமாகவும் தடம் பதித்து தனக்கென ஓரிடத்தைத் தேடிக் கொண்டதுடன் பல ரையும் முன்னணியில் புகழேணியில் ஏற்றி வைத்த அமரர் திரு. இரா. பத்மநாதனின் பிரிவு என் போன்றோரை அதிர்ச்சி யிலும் ஆழ்ந்தகவலையிலும் ஆழ்த்தியுள்ளது.

கிழக்கிலங்கையின் பாரம்பரியக் கலைகளில் நிறையவே ஈடுபாடு கொண்ட அமரர் பத்மநாதன் இளமைப்பருவத்தில் பலமேடை நிகழ்வுகளில் பங்கேற்றுப் பாராட்டுப் பெற்றவர். ஆண்டு பல கடந்த பின்பும் அவரும் அமைச்சர் பதவியை வகித்த ஒருவரும் பங்கேற்ற நாடகங்களைப் பலர் சிலாகித்துக் கூறக்கேட்டு மகிழ்ந்திருக்கின்றேன்.

சுதந்திரன், தினகரன், தினமுரசு என பத்திரிகைத்துறைப் பணியையும் பரவலாக்கிக் கொண்டவர் இரா. பத்மநாதன். நாற்பத்தொரு ஆண்டுகளுக்குமுன் மாணவனாக நான் இருந்த காலத்தில் சுதந்திரனில் மந்திரக்கதை மருமகன் என புகைப் படத்துடன் என்னை அதிக எண்ணிக்கையான வாசகர் மத்தியில் அறிமுகம் செய்தவர்.

இன்றைய பல பிரபலங்களுக்கு களம் அமைத்துக் கொடுத்ததோடு கிழக்கிலங்கையின் கலைகளையும் கலைஞர் களையும் பிறர் அறியச் செய்வதில் கணிசமான பங்களிப்பு செய்தவர்.

மாந்தீரிகம் பிரபலமான மட்டக்களப்பில் வாழ்ந்த மந்திர வாதிகள் பற்றியும், பேய்பிசாசுகதைகள் பற்றியும், அவற்றால் மற்றவர்கள் வாழ்வைக் கெடுக்க எண்ணி தாமே அழிந்த மாந்தீரிகர் பற்றியும் 70களில் தினகரன் வாரமலரில் திமுன்ற லாங்கன்றடியான் பெயரில் திகிலூட்டும் சம்பவங்களைத் தொட ராகச் சித்தரித்து பலரது பாராட்டைப் பெற்றவர்.

ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் பல நிகழ்ச்சிகளைத் தயாரித்ததோடு, 1976ல் அணிசேரா நாடுகளின் உச்சிமாநாட்டை யொட்டி ஈழத்தை நோக்கும் உலகத்தின் கண்கள் உரைச் சித்திரத்தை தயாரித்தார். இந்நிகழ்ச்சி பலதடவை ஒலிபரப் பானதும் வானொலி மாமாவாக நூற்றுக்கணக்கான சிறுவர் களை புடம்போட்டு மெருகேற்றி உன்னத கலைஞர்களாக்கியவரும் இவரே.





வானொலியில் தயாரிப்பாளராக கடமையாற்றிய நாட்களில் அதற்கு மேல் பணத்துடன் கூடிய பதவிகள் இவரை நாடியபோதும் நல்ல சட்டத்தரணிகள் நீதிபதியாக விரும்புவதில்லை என கூறியதை அறிவேன். இராமாயணக்கதையை தினமுரசு வாரஇதழில் இவர் சிறுவர்களின் அறிவு வளரும் வகையில் தொடராக எழுதி, அதை கோதண்டம் ஏந்திய கோமகன் என்ற நூலாகவும் வெளியிட்டார். பலதுறைகள் - பலபணிகள் - உண்மையாகவே ஈடுசெய்ய முடியாத இழப்பு.

ஆத்ம சாந்திக்காகவும் அமரரைச் சேர்ந்தோரின் நல் வாழ்வுக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**உடுவைதில்லை நடராஜா**
கல்வி அமைச்சு
இசுருபாய, பத்தரமுல்ல

# மூத்த பத்திரிகையாளர்

மீன்பாடும் தேன்நாட்டுக்குப் பெருமைசேர்த்த மற்று மொரு மூத்த பத்திரிகையாளர் மறைந்துவிட்டார்.

எழுத்தை மட்டுமே விரும்பிய தொழிலாகக் கொண்டு, பத்திரிகையில் அடியெடுத்து வைத்து ஊழியமாகக் கொண்ட அண்ணன், இரா. பத்மநாதன், தினகரன், வீரகேசரி பத்திரிகை களின் செய்திப் பிரிவில் திறம்பட பணியாற்றி, இலங்கை வானொலியின் நிகழ்ச்சிகளையும் சிறப்பாக நடத்திவந்தார்.

கலையார்வம் கொண்ட இவருக்கு, வானொலி, தொலைக் காட்சி, சினிமா ஒன்று கையடாத துறையே இல்லை!

இலங்கை வானொலியின் சிறுவர்நிகழ்ச்சியை, நீண்ட காலம் நடத்தி வானொலி மாமா என்று அன்புடன் அழைக்கப் பட்ட இரா. பத்மநாதன் வானொலியின் கிராமிய நிகழ்ச்சி களிலும் அன்று முத்திரை பதித்திருந்தார்.



1960களில் நான் யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையில் கடமையாற்றியபோது, இலங்கை வானொலியின் நல்லூர்க் கந்தன் தேர் உற்சவ வர்ணனையாளராக வந்து என்னைச் சந்தித்தார். காவிவேட்டி, நல்லூர்க்கந்தன் பெயர் பொறித்த காவித்துண்டு சகிதமாக, அங்கங்கே வெண்மை பளிச்சிட்ட நீள்தாடியுடன் சைவப்பழமாக இவரைப் பார்த்தபோது, இளம் வயதில் சுயமரியாதை (சு.ம) கட்சியில் இணைந்து, இளம் வட்டங்களுடன் இவர் நாத்திகம் பேசியது படக்கென்று ஞாபகம் வந்திருந்தது.

1950ம் ஆண்டு காலப்பகுதி. மட்டக்களப்பு மெத்தை வீடு தெருவில் இருக்கும் எங்கள் வீட்டுக்கு பத்ம அண்ணன் அடிக்கடி வருவார். இவருக்கு மிகவும் நெருக்கமானவர்களில் எனது பாலா அண்ணனும் ஒருவர். இருவரும் கடவுள் இல்லை கொள்கையில் அதிக ஈடுபாடு கொண்டவர்கள். காரசாரமாக விவாதிப்பார்கள். ஆனாலும் அதில் வெறித்தன்மை இருக்காது. நிதானம் நிறைய இருக்கும். அன்றும் சரி, கடைசிக்காலம்வரை சரி, பத்ம அண்ணனிடம் காணப்பட்ட கனிவு, நேர்மை, அன்பு, மரியாதை, உதவும் பண்பு குறையவே இல்லை! 1980ம் ஆண்டு காலப் பகுதி. இவர் சென்னையில், ஈழ அகதிகள் புனர்வாழ்வு நிலையத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார்.





ஒருநாள் சென்னையில் சந்தித்தேன். எனது இக்கட்டான நிலை அறிந்து "மகான் என்ன உதவி வேண்டும்.. சொல்லப்பா.." என்று விடாப்பிடியாகக் கேட்டு, தான் பார்க்கும் அலுவலகம் சென்று எனக்கு ஆயிரம் ரூபா அள்ளிக் கொடுத்ததை இன்றும் நினைத்துப் பார்க்கின்றேன்! இதன்பின்னர் எங்கள் தொடர்பு இவ்வருடம் ஆரம்பம் முதல் வரை தொலைபேசி வழியாக மட்டுமே நீடித்தது!

பல்துறைக் கலைஞராக பரிணமித்த இரா. பத்மநாதன், கலைவாரிதி, கலைமணி, கலாபூஷணம் போன்ற பட்டங்களாலும் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

கடந்த ஆண்டு வெளியான எனது நினைவலைகள் நூலில், என்னையும், அண்ணன் பாலாவையும் புகழ்பாடிய அந்த மை காய்வதற்குள் அவரது பிரிவு பற்றி எழுதும் துயரம் எனக்கு ஏற்பட்டு விட்டது. அந்த மண்வாசனைக்குப் பெருமை சேர்த்த மட்டுநகர் மண்ணுக்கே, அவரது உடல் உரமாகி விட்டது. அவர் பெயர் நிச்சயம் நிலைத்து நிற்கும்.

**கே.ஜி. மகாதேவா**
திருச்சி

# ஒரு பெரிய படைப்பாளி இரா. பத்மநாதன்

மட்டக்களப்பில் முன்னோடிக் கலைஞர்களில் ஒருவ ராகிய இரா பத்மநாதன், இன்றைய இளைய தலைமுறையின ருக்கு ஒரு ஆதர்சமாக விளங்குபவர்.

1960களில் மட்டக்களப்பில் ஒரு பெரும் கலைஞர் கூட்டம் இருந்தது. முன்னாள் அமைச்சர் செ. இராசதுரை, இரா. பத்ம நாதன், மாஸ்ரர் சிவலிங்கம், காசி. ஆனந்தன், செ. குணரத் தினம், அடியேன் உட்படப் பலர் கலை இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர்.

செ. இராசதுரை எழுதித் தயாரித்து, நெறியாள்கை செய்து கதாநாயகனாக நடித்த நாடகம் "சங்கிலியன்". எம்பியாக இருந்தபோதே இவர் நாடக மேடையில் தோன்றியதால், எக்கச் சக்கமான ரசிகர் கூட்டம் மட்டக்களப்பு நகர மண்டபம் நிரம்பி வழிந்தது.

இந்நாடகத்தில், இரா. பத்மநாதனும், மாஸ்ரர் சிவலிங் கமும் சேவகர்களாகத் தோன்றி சக்கைப் போடு போட்டார்கள்.



அந்தக் கோஷ்டியினர் பிற்காலத்தில் ஆளுக்கு ஒரு பக்க மாகப் பிரிந்துவிட்டபோதும், இரா. பத்மநாதன் மட்டும் கலை இலக்கியத் துறையில் தொடர்ந்து ஈடுபட்டார்.

இவருடைய கலைத்துறை வாழ்க்கையைப் பின்வருமாறு வகுத்துக் கூறலாம். (1) எழுத்தாளர் (2) ஊடகவியலாளர் (3) சினிமாக் கலைஞர் (4) வானொலிக் கலைஞர் (5) நூலாசிரியர் (6) பத்திரிகை உதவியாசிரியர்

இந்த ஒவ்வொரு துறையிலும் இவர் ஆற்றிய சேவை விரிவாக ஆராயப்படவேண்டும். ஆனாலும் சுருக்கமாகப் பார்ப் போம். இலங்கையிலிருந்து வெளியேறித் தமிழகம் சென்ற இரா. பத்மநாதன், கோடம்பாக்கம் சினிமா உலகில் நுழைந்து பல படங்களுக்கு உதவி டைரக்டராகப் பணியாற்றினார். நானும் நண்பர்களும் தமிழகம் சென்றிருந்த போது எங்களை பல ஸ்டுடியோக்களுக்கு அழைத்துச் சென்றார். பல நடிகர்களை அறிமுகப்படுத்தினார். ஒரு வாரத்துக்கு மேல் இவ்வாறு எங்க ளுடன் செலவிட்டார்.


பின்னர் இலங்கை வந்து, இலங்கை வானொலியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக அவர் கடமையாற்றிய போது சிறுவர் நிகழ்ச்சி (வானொலி மாமா), உரைச்சித்திரம், நாடகம் எனப் பல்வேறு துறைகளில் முத்திரை பதித்தார்.

அக்கால கட்டத்தில் எனது "சித்திரைப் புதுவருடம்" "புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை" போன்ற உரைச்சித்திர நிகழ்ச்சிகளை அவரே தயாரித்து வழங்கினார்.

பின்னர் அவர் பத்திரிகைத் துறையில் புகுந்து "தினமுரசு" பத்திரிகையில் "கோதண்டம் ஏந்திய கோமகன்" என்ற தொடர் கட்டுரையை எழுதினார். பின்னர் அது நூலாகவும் வெளி வந்தது. ஏற்கனவே ராஜாஜி டி.கே.சி. முதலியோர் ராமாயணக் கதையை "கல்கி"யில் தொடர்கட்டுரையாக எழுதியிருந்தனர். ஆனால் அவற்றிலிருந்து வேறுபட்டு, "கோதண்டம் ஏந்திய கோமகன்" அனைவரையும் கவர்ந்த ஒரு தொடராக அமைந்தது.

சென்ற ஆண்டு ஆரம்பத்தில், அவருடைய மகனின் திருமண நிகழ்வுக்காக, கொழும்பிலிருந்து . களுதாவளைக்கு வந்திருந்தார். அங்கே நாங்களிவரும் நீண்டநேரம் உரை யாடினோம். இன்று அவர் இல்லை. ஒரு பெரிய படைப்பாளி வீழ்ந்தது.

**- அன்புமணி**





## “நெருகல் உள்னொருவன் இன்நில்லை என்னும் பெருமை உடைத்து இவ் உலகு”

அன்பருக்கன்பனாய் ஆற்றல் மிக்க அறிஞருக்கறிஞ் ஞனாய் சொல்லோர் உழவனாய் உலகமெல்லாம் ஒலித்த குரல் ஓய்ந்து விட்டதென்பதை நம்பமுடியவில்லை.

எந்தத்துறையை எடுத்துக் கொண்டாலும் அத்துறை யின் விழுமியங்களை நாடியறிந்து பறைசாற்றும் பெருமக னார் இரா. பத்மநாதன் அவர்களென்றால் மிகையாகாது.

வானொலியில் ஒலிபரப்பாளராக இருந்த காலை கடமையே கண்ணாக ஒழுகிய பெரும்பண்பாளன். மகா சிவராத்திரி என்பதை எண்ணும் பொழுதெல்லாம் திருக் கேதீச்சரம் அன்பர் இரா. பத்மநாதன் அவர்களையே நினைவு கூரும் ஆண்டுதவறினும் அருள்தொண்டினைத் தவறவிடாத அற்புதமனிதர் அவர் பழகப் பேச இனியநண்பரை எண்ணும் பொழுது அவர்தம் பண்புடைமை முன்னிற்கும். கடந்த நாற்பது ஆண்டுகளாக அவருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்புக் கிட்டியது. பலருடனும் பழகியிருப்பேன்.



ஆனால் இவருடன் பழகி உரையாடுவதில் முறைக்கு முறை புதுமைகளை, பழமொழிகளை, நகைச்சுவையினை, நாடகத்தை, என்முன் நினைவுபடுத்தாதிராது.

அத்துணை ஆழமான புதுமையான ஆன்மீகமான தத்துவங்கள் நிறைந்ததான அரும்பொருட்கருவூலங்களை வாரி இறைக்கும் வள்ளண்மை மிகுந்தவராய்க் காண்பேன். நாளேடு வார ஏடுகளில் எண்ணித்துணிந்து மையப் பொருளை எவர்க்கும் அஞ்சாது சமுகத்திற்கு நன்மை பயப்பதையே கருத்தில் வைத்து வரைந்து ஈயும் வள்ளலாய் வாழ்ந்த பெருமகன். தன் பின்னவர்களையும் தன்னைப்போல் பண்புடையவர்களாகச் செயல்வீரர்களாகப் பற்றுள்ளவர்களாக வளர்த்தெடுத்த பெருமனிதர். புகழோடு தோன்றி புகழ் பரப்பி புகழ்நிலைக்க வாழ்ந்த எனது அருமைக்கும் பெருமைக்குரிய இரா. பத்மநாதன் அவர்கள் திருமுகத்தை நினைந்து தில்லைச் சிற்றம்பலத்தில் வழுவாதிருக்கவேண்டித் தாழ் வணங்கியமைகின்றேன்.

“வாழ்க! புகழ்! வளர்க சேவைகள்!” நன்றி!

**புலவர் அ. திருநாவுக்காரசு** J.P.
துணைச் செயலாளர் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிக்குழு,
திருக்கேதீச்சரம்.

(வாரமலர்)

"தினமுரசு" வாரமலரின் ஆரம்பகால ஆசிரியர்களில் ஒருவராகப் பல வருடங்கள் பணிபுரிந்த சிரேஷ்ட ஊடகவிய லாளர் இரா. பத்மநாதனின் மறைவு குறித்து "தினமுரசு" நிறுவன ஊழியர்கள், குறிப்பாக அவரோடு இணைந்து பணியாற்றிய ஆசிரிய பீட உறுப்பினர்கள் ஆகியோர் தமது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகின்றனர். இரா. பத்மநாதன் அச்சு ஊடகத் துறையிலும் இலத்திரனியல் ஊடகத்துறையிலும் பணியாற்றிப் பல வெற்றிச் சிகரங்களை எட்டியவர். பன்முக ஆற்றல் வாய்ந்த ஊடகவியலாளர். எவருக்கும் தாழ்பணியாது தனக்குச் சரியெனப் பட்டவற்றை வெளிப்படுத்திய துணிச்சல் மிக்க ஊடகவியலாளர் அவரென்றால் அது மிகையாகாது.

புராண, இதிகாச வரலாறுகள் முதல் 'டயானாவின் கண் ணீரில் கரைந்த இரவுகள்', 'மொனிக்கா என் மொனிக்கா' என்பது வரையான பல்வேறு ஆக்கங்களை எமது பத்திரிகையில் எழுதிவந்தார். சாதாரண பாமர மகனும் புரியும்படியாக தனது எழுத்துக்களை இலகுவாக்கித் தந்த அந்த அற்புதமான மனி தரின் மரணம் இலங்கைத் தமிழ் எழுத்துத் துறைக்குப் பேரிழப்பாகும்.



மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தனது தொழில்சார் நடவடிக்கைகளுக்காக வாழ்வின் பெரும்பகுதி யைக் கொழும்பிலேயே கழித்த போதிலும் தனது மண்ணோடும் மக்களோடும் ஒன்றித்துச் செயற்பட்டு வந்தார். கொழும்பிலுள்ள அமெரிக்க உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடகப் பிரிவில் பணி யாற்றத் தொடங்கியவர் சுதந்திரன், வீரகேசரி, தினபதி, தினகரன் போன்ற தேசியப் பத்திரிகைகளிலும் அளப்பரிய பங்காற்றினார்.

இலங்கை வானொலியில் நடத்தி வந்த "வானொலி மாமா" என்ற சிறு பிள்ளைகளுக்கான நிகழ்ச்சி, இலங்கையில் தமிழ்ப் பேசும் மக்கள் வாழும் மூலைமுடுக்குகளிலெல்லாம் காற்றலைகளின் மூலம் பரவி, அவரது கனதியான திறமைகளை வெளிக்கொணர்ந்தது. "வானொலி மாமா" சிறுவர்களுக்கான நிகழ்ச்சியானபோதிலும் அது பாரிய பணியாகும். சிறுசுகளின் இதய நெருடல்களைப் புரிந்து, அவர்களின் உளவள நிலையை ஆராய்ந்து, மேலும் மெருகூட்டி அப்பிள்ளைகளுக்கு வழங்கினா ரென்பது இமாலய பணிதான்.





அவர் பணிபுரிந்த சகல ஊடகங்களிலும் அர்ப்பணிப்போடு சாமான்ய மக்களை முன்னிலைப்படுத்தி அவர் செயற்பட்டார். பத்திரிகைகளை வெறும் செய்தி ஊடகங்களாகவோ அல்லது வக்கற்ற கட்டுரைக் கதம்பங்களாகவோ கருதாமல் மக்களை அவற்றோடு நெருங்க வைக்கும் வகையில் அவர் எழுதினார். மக்களையும் எழுத வைத்தார். இளம் பத்திரிகையாளர்கள் அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய அளப்பரிய பாடங்கள் உள்ளன. சுமார் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கைத் தமிழ் ஊடகத்துறையில் தடம்பதித்த அவரின் நாமம் என்றும் நிலைத்து நிற்கும் என்று துணிந்து கூறலாம்.

●

# இரங்கலுரையிலிருந்து...



பல்வேறு துன்பங்களையும் சகிப்புத் தன்மையுடன் சமாளித்து சமூக சமுத்திரத்தில் எதிர்நீச்சல் இட்டு தம் பிள்ளைகளுக்கு கல்விப்பசி தீர்த்தவர் அமரர் இரா. பத்மநாதன் ஐயா அவர்கள். நிலையில்லா இவ்வாழ்வில் நிலைத்திருந்த காலமெல்லாம் கலைத்தொண்டு செய்யத் தன்னையே அர்ப்பணித்தவர். கலைமகளின் திருவடியை அலங்கரிக்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் முதல் பத்திரிகை எழுத்தாளனாய்த் தொண்டு செய்து வந்தார். கலாபூஷணமான அமரர். இரா. பத்மநாதன் அவர்கள் பாரம்பரிய கலைகளை வெளிக்கொணர்தற்கு ஊடகவாயிலாக அரும்பாடுபட்டார். காலமெல்லாம் கலை ஞனாகவே வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டார்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பெருமைக்கும் உரித்தானார்". கோபம், பொறாமை, வஞ்சினம் துளிகூட இல்லாதவராக மக்களோடு பழகினார். பிறரும் இவரோடு அவரின் இறுதிக்காலம் வரை மரியாதை யாகவும், அன்பாகவும் இருந்தனர். அண்டி வருவோரை இன்முகம் காட்டி அன்போடு வரவேற்று உபசரித்து மகிழ்வார். அன்னாரின் மறைவு ஈடுசெய்ய முடியாத தொன்றே.

காலபூஷசணம் க. தருமரெத்தினம்
வன்னியார் தெரு, களுதாவளை - 01.

# ஜீரணிக்கமுடியாத பேரிழப்பு

வானொலி, பத்திரிகை, மேடைப் பேச்சு எனப் பல்கலையிலும் பாண்டித்தியம் பெற்ற பிரபல எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர் பத்திரிகை ஜம்பவான் திரு. இரா. பத்மநாதன் அவர்கள் மறைவு தமிழ் மக்களால் ஜீரணிக்க முடியாத பேரிழப்பு. இவரது தமையனார் திரு. இரா. மயில்வாகனம் அவர்களும் ஒரு சிறந்த புலமை மிக்க நல்லாசன். இவர்கள் தம் குடும்பமே ஒரு பல்கலைக்கழகம் என நான் புகழாரம் இன்றிக் கூறுவேன். கடந்த 35 வருடங்கள் இவர்கள் இருவருடனும் மக்களுடனும் யான் நன்கு பழகி இருக்கிறேன்.

மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்புக்கு புகழ் தேடிக் கொடுத்த சிலருள் இரா. பத்மநாதன் அவர்களும் ஒருவராக இடம் பெறுகிறார் என யான் அடக்கத்தோடு அவரைப் பாராட்டுகிறேன். "நெருதல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு" - தெய்வப்புலவர் வள்ளுவர். இந்த வகையிலே மறைந்தவர் தான் ஐயா திரு. இரா. பத்மநாதன் அவர்கள் அன்னாரின் தூயநல் ஆத்மா எம்பெருமான் திருவடி நிழலில் நிலையான நித்திய ஆத்மா சாந்தி பெறவேண்டும் என இறைவன் தாள்கள் பணிகின்றேன் அவர் விட்டுச் சென்றவற்றை அவரது குழந்தைகள் தொட்டுச் செல்லவேண்டும் அதற்கு எம்பெருமான் அருள்புரிவாராக.

கலாபூஷணம், கலாநிதி வை. கங்கைவேணியன்

அகில இலங்கை சமாதான நீதவான் தலைவர் - அகில இலங்கை கண்ணதாசன் மன்றம்

# பாடலஞ்சலி

ஆடி அடங்கும் வாழ்க்கையடா
ஆறடி நிலமே சொந்தமடா
பாடிக் கொண்டிருந்த பாடலதென்னை
பழங்கால நினைவைபடமாக்கியதே
சூனா மானாக்கொள்கை
குடுசாம்பல் நாடகம்
பேனா முனையால் பெரும்புகழாச்சி
வானொலியோடு வளர்கலையாக்கி
தேனொடு பாலும் செல்வமிகு மாநகரின்
பாழாய்ப் போன கட்சியாட்சி
பழகுறவைக் குறைத்து
படுக்கையிலே அஞ்சலி
பாடக் கிடைத்ததுவே.

[கலாசூரி வெற்றிவேல் விநாயகமூர்த்தி
பன்குடா வெளிமூர்த்தி]





# தினமுரசில் சித்திரம் வரைய அத்திவாரமிட்டவர்

1993, 1994ஆம் ஆண்டுகளில் வெளியான தினமுரசு பத்திரிகையில் வெளிவந்த கதைகளுக்குரிய விளக்கப்படங் களை வரைந்து தருமாறு என்னை ஊக்கப்படுத்தியதன் காரணமாக அக்காலப் பகுதியில் எனது சித்திரமும், பிரபல்யம் பெற்றிருந்தது தினமுரசு பத்திரிகையில் இடம் பெற்றமையால் சித்திரம் வரைவதில் மேலும் ஆர்வம் ஏற்படுவதற்கு அமரர் பத்மநாதன் அவர்கள் உந்து சக்தியாக இருந்தார்.

எனது விருப்பத்திற்குரிய மாணவர்களில் ப. அமிர்தாஜா, ப. சுதேசன் ஆகிய இருவரும் சித்திர பாடத்தை கற்றமையினால் இவர்களது நெருங்கிய தொடர்வு அவருடன் நெருக்கமாக்கியது. இதனூடாக அவரைப் பற்றி நானும், என்னைப் பற்றி அவரும் அறிய வாய்ப் பேற்பட்டது, இவ்வாய்ப்பானது எமக்கிடையே நட்புறவை ஏற்படுத்தியது.



நாளடைவில் பத்திரிகை காரியாலயத்தில் இருந்து அவர் கதையை எழுதி அனுப்ப, நான் பொருத்தமான படங்களை வரைந்து அனுப்ப அது தினமுரசு பத்திரிகையில் பிரசுரமாகியது. இச்செயற்பாடு எனக்கு மகிழ்ச்சியையும் மதிப்பையும் ஏற்படுத்தியது.

இத்தொடர்பினால் அவரோடு நெருங்கிப் பழகியபோது அவரது பல்துறைசார்ந்த திறன்களை என்னால் அறிய முடிந்தது. பத்திரிகை, வானொலி, நாடகத்துறை, திரைப்படம், ஓவியத் துறை, றாமா, ஆகிய துறைகளில் எந்தத் துறையில் அவர் கதைக்க ஆரம்பித்தாலும் அந்தந்தத் துறையின் ஒவ்வொரு காலக்கட்டம், தனிநபர் திறன்கள், குணாதிசயங்கள் இயல்புகள் அவர்களோடு தனிக்கிருந்த தொடர்பு ஆகிய பல்வேறு விடயங்களை சுவாரஸ்யமாக சொல்வதில் அவருக்கு நிகர் அவர்தான்.

"இறைவனை விளங்க வைப்பது இயற்கை மனிதனை விளங்க வைப்பது கலை" என்பதற்கு கலங்கரை விளக்கம் போன்று பரிணமித்தவர் அமரர் பத்மநாதன் அவர்கள் என்றால் "உவப்பத் தலைக்கூடி உள்ளம் பிரிதல் புரவர் தொழில்" என்ற வள்ளுவரின் பொய்யாமொழிக்கு ஒப்ப அவரது நட்பை நான் உரைந்திருக்கிறேன்.

கருணை, அஞ்சாநெஞ்சம், பொறுமை இந்த மூன்றும் தன்னகத்தே மிளிர்ந்து காணப்பட்ட ஒரு தலைவனாக அவரை நான் காண்கிறேன். புகழோடு வாழ்கின்ற வாழ்வும். பின்னர் புகழ்மட்டும் நின்று தூள் அழிகின்ற சாவும் அறிவில் சிறந்தவருக்கு மட்டுமே கிடைக்கும். பிறருக்கு வாய்க்காது. இவ்வாறு தனக்குப் பின் நிலைத்து நிற்கக்கூடிய புகழை பெறுவதில் ஆர்வத்தோடு வாழ்ந்து நிலையான புகழ் ஏற்படக்கூடிய நற்காரியங்களைப் புரிந்து இறவாப் பெருவாழ்வை பெற்ற சிலருள் அமரர் பத்மநாதன் ஐயா அவர்களும் முதன்மை பெறுவதை உணர முடிகின்றது.

எனவே இவ்வாறு பல்வேறு கலைப்பணி புரிந்து கலைக்காகவே தன்னை அர்ப்பணித்து எமது மண்ணுக்குப் பெருமை சேர்த்த அமரர் இரா. பத்மநாதன் அவர்களை இறைவன் தன்னிடம் அழைத்துக் கொண்டான். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற நாம் செய்யத்தக்கது அவர் விட்டுச்சென்ற கலைப் பொக்கிசங்களை யாவரும் அறியும் வகை செய்து அவர் பணியை தொடர்வதேயாகும். கலைஞன் பிறக்கின்றான் அவன் அழிவதில்லை.

**– திரு. க. சுந்தரலிங்கம்**





# தமிழ் ஊடகத்துறையில் எழுதுகோலோச்சிய

# இரா. பத்மநாதன்

இலங்கைத் தமிழ் ஊடகத்துறையில் பூரணத்துவம் பெற்ற ஓர் ஊடகவியலாளராக விளங்கிய இரா. பத்மநாதன் அமரத்துவம் எய்தியுள்ளார்.

ஒலிபரப்பு மற்றும் பத்திரிகைத் துறையில் அரை நூற் றாண்டுக்கும் மேலாக அயராது அமரர் இரா. பத்மநாதன் பணி புரிந்திருந்தார்.

கலைவாருதி, கலைமணி, கலாபூஷணம், கலாபாரதி போன்ற பட்டங்கள் சூடப்பட்டு ஒரு பல்துறைக் கலைஞராக இருந்த போதிலும் ஒலிபரப்புத் துறையிலும், பத்திரிகைத் துறையிலுமே இரா. பத்மநாதன் தனது ஆளுமையை வெளிப் படுத்தியிருந்தார்.

இலங்கைத் தமிழ் ஊடகத்துறையில் முத்திரைபதித்த மூத்த ஊடகவியலாளர்கள் பலரதும் சமகாலத்தவராக இரா. பத்மநாதன் விளங்கியிருந்தார்.



இலங்கைத் தமிழர்களின் அரசியல், சமூக, கலை, கலா சார வரலாற்று விழுமியங்களை நன்கறிந்திருந்த இரா. பத்ம நாதன். என்னை இறைவன் படைத்தனன்தன்னை நன்கு தமிழ் செய்யவே என்ற வாக்கியத்துக்கமைவாகத் தனது வாழ்க்கைப் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

எளிமையான அதே சமயம் இனிமையான பண்பாளராக மூத்த பத்திரிகையாளரோடு மட்டுமல்லாது, இளம் பத்திரிகை யாளருடனும் இரா. பத்மநாதன் உறவு பாராட்டியிருந்தார்.

வீரகேசரிப் பத்திரிகையின் ஸ்தாபகர் பி.பி.ஆர். சுப்பிர மணியம் செட்டியாருடன் இரா. பத்மநாதன் கொண்டிருந்த நெருக்கமான உறவு, இலங்கைத் தமிழ் ஊடகத்துறையில் அவர் எவ்வளவு தூரம் ஆழ வேரூன்றியிருந்தார் என்பதை நன்கு எடுத்தியம்பியிருந்தது.

வீரகேசரிப் பத்திரிகையில் பணிபுரிந்த காலத்தில் அதன் ஸ்தாபகர் பி.பி.ஆர். சுப்பிரமணியம் செட்டியாரின் அந்தரங்கச் செயலாளராக இருந்ததோடு, தென்கிழக்காசிய நாடுகளில் ஒன்பது மாதங்கள் வரை செட்டியாரோடு விரிவான பயணங் களையும் இரா. பத்மநாதன் மேற்கொண்டிருந்தார்.





இதுதவிர தினகரன் பத்திரிகையிலும் பல கட்டுரைகளை எழுதி வாசகர்களை இரா. பத்மநாதன் கவர்ந்திருந்தார்.

ஆன்மீகத்திலும், தமிழறிவிலும் மேம்பட்டிருந்த தவப் புதல்வர் சுவாமி விபுலானந்த அடிகளாரை எப்போதும் நினைவு கூர்ந்ததோடு, கிழக்கிலங்கையில் சிறப்புற்றிருந்த புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை உட்பட, பல்வேறு தமிழறிஞர்களது வாழ்க்கை வரலாறு, மற்றும் அவர்களது தமிழார்வம் என்பவை பற்றி ஒரு கலைக்களஞ்சியத்துக்கு நிகரான அறிவை இரா. பத்ம நாதன் தன்னகத்தே கொண்டிருந்தார்.

அரசியலைப் பொறுத்தவரை தந்தை செல்வாவுடன் மிக நெருக்கமான உறவு அமரர் பத்மநாதனுக்கிருந்தது. இதன் காரணமாக தமிழரசுக்கட்சியின் ஆரம்பகாலப் பிரமுகர்கள் பலரும் இவரது நெருங்கிய நண்பர்களாயிருந்தனர்.

தமிழரசுக் கட்சியுடன் கொண்டிருந்த பலமான ஈடுபாடு இரா. பத்மநாதனை அக்கட்சியின் வார ஏடான சுதந்திரனின் துணை ஆசிரியராகவும் விளங்க வைத்திருந்தது.



ஒலிபரப்புத் துறையிலும் பலமுன்னோடி ஒலிபரப்பாளர் களுடன் பணியாற்றியதோடு சிறுவர் மலர் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகளையும் இரா. பத்மநாதன் தயாரித்து வழங்கியிருந் தார். கூடவே இலங்கையின் பல பாகங்களிலும் முக்கிய சமய நிகழ்ச்சிகள், கலை, கலாசார நிகழ்ச்சிகள் என்பவற்றை நேர்முக வர்ணனையாகவும் பத்மநாதன் அழகு தமிழில் தொகுத்து வழங்கியிருந்தார்.

கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக தினமுரசு வாரப் பத்திரிகையில் இணை ஆசிரியராக இருந்து அப்பத்திரிகையின் வளர்ச்சிக்குப் பக்கபலமாக இரா. பத்மநாதன் பணியாற்றினார்.

தினமுரசுப் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் அமரர் நடராஜா அற்புதராஜாவுடன் ஒன்றிணைந்து ஜனரஞ்சகமான கட்டுரைகள் பலவற்றை வழங்குவதில் இரா. பத்மநாதன் முன்னின்றார்.

இது தவிர தாம் சேகரித்த தகவல்கள், மற்றும் தமது அனுபவங்கள் மூலமாக அறிந்து கொண்டவை, நண்பர்கள் மூலமாக கேட்டுத் தெரிந்தவை போன்றவற்றை அடிப்படையாக வைத்து பல்வேறு கட்டுரைத் தொடர்களை இரா. பத்மநாதன் தினமுரசுப் பத்திரிகையில் எழுதியிருந்தார்.



தினமுரசு வார இதழில் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக இரா. பத்மநாதன் எழுதிய ஆன்மீக, மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தப்பட்ட கட்டுரைகளில் 'கோதண்டம் ஏந்திய கோமகன்' என்ற தலைப்பில் வெளிவந்த இராமாயண காவியம் சிறப்பிடம் பெற்றதாக விளங்கியிருந்தது.

'இராஜகுமாரன்' என்ற புனைபெயரில் 'கோதண்டம் ஏந்திய கோமகன்' - இராம காவியத்தை 125 அங்கங்களாக இரா. பத்மநாதன் தினமுரசு பத்திரிகையில் எழுதியிருந்தார். அழகிய இலகு தமிழில் வெளிவந்த இக்கட்டுரைத் தொடர் ஏராளமான வாசகர்களின் நல்லபிமானத்தைப் பெற்றி ருந்தது.

'கோதண்டம் ஏந்திய கோமகன்' சிறப்புற எழுதப்பட்டி ருந்ததன் காரணமாக இந்து சமய பண்பாட்டு அலவல்கள் திணைக்களம் அக்கட்டுரைத் தொடரை ஓர் அழகிய நூலாகவும் வெளியிட்டிருந்தது. கோதண்டம் ஏந்திய கோமகன் வெளியீட்டு விழா இன்றும் கூட பசுமையாக இருக்கின்றது.


பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தை அடுத்தி ருக்கும் சிறிய மண்டபத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, மறைந்த தினகரன் ஆசிரியர் ஆர். சிவகுருநாதன் உட்பட தமிழறிஞர்கள், பத்திரிகையாளர்கள் பலர் முன்னிலையில் கோதண்டம் ஏந்திய கோமகன் நூல் வெளியீடு 2000ம் ஆண்டில் இடம்பெற்றிருந்தது.

அவ்வைபவத்தில் உரையாற்றிய அனைவருமே இரா. பத்மநாதனின் தமிழறிவு, எழுத்தாற்றல் என்பவற்றை செவ்வனே எடுத்தியம்பியிருந்தனர்.

கோதண்டம் ஏந்திய கோமகன் நூலுக்கு அணிந்துரை வழங்கிய மறைந்த பிரபல தமிழ்ப் பத்திரிகையாளர் எஸ்.டி. சிவநாயகம் இரா. பத்மநாதனைப் பற்றி இப்படி எழுதியிருந் தார்:- "இராமகாதையை வசனத்தில் எழுத வேண்டும் என்று இரா. பத்மநாதனுக்கு ஏற்பட்டது பேராசையல்ல. அவரது தகுதிக்கும், திறமைக்கும் உட்பட்ட நியாயமான ஆசைதான்.

அதற்கு ஏற்ற சகல பெறுபேறுகளும் உடையவர்தான் அவர். அவர் ஒரு கற்பனாவாதி, கலைஞர், பாடகர், நடிகர், எழுத் தாளர், கவிஞர், வானொலி ஒலிபரப்பாளர். எல்லா வற்றுக்கும் மேலாக தெளிந்த தமிழ் நடையில் எழுதக்கூடிய ஒரு பத்திரிகையாளர்"

பேராசிரியர் கா. சிவத்தம்பி எழுதிய அணிந்துரையில் குறிப்பிட்டிருந்ததாவது:- "இரா பத்மநாதன் வளமான பண் பாட்டுப் பின்பலம் கொண்டவர். மட்டக்களப்பில் வாய்மொழி மரபுகளில் ஊறித் திளைத்தவர். திராவிட இயக்கம் முதல் திருநெறி இயக்கங்கள் வரை தமிழ் பண்பாட்டின் எதிரெதிர் துருவங்களிற் பட்டறிவு கொண்டவர்.





கம்பன் முதல், புலவர் குழந்தை வரை ஈடுபாடு கொண்டவர். யாவற்றுக்கும் மேலாக, நல்ல தொழில் முறைப் பத்திரிகையாளர். ராஜாஜியின் 'சக்கரவர்த்தி திருமகன்' கல்கியில் ஏற்படுத்திய வாசக கவர்ச் சியை நினைவூட்டுவதாக இரா. பத்மநாதனின் 'கோதண்டம் ஏந்திய கோமகன்' கட்டுரைத் தொடர் விளங்குகின்றது. நண்பர் பத்மநாதன் தமிழ் வாசகர் களின் நன்றிக்கு உரியவராகிறார்".

இராமாயணத் தொடரைத் தவிர, மகாபாரதத்தையும் சுமார் 100 கட்டுரைத் தொடர்களாக பத்மநாதன் எழுதியிருந் தார். விக்கிரமாதித்தன் கதைகளை உள்ளடக்கிய மன்னாதி மன்னன் என்ற தொடர், இளவரசி டயானா, இளவரசர் சார்லஸ் ஆகியோருக்கிடையே ஏற்பட்ட திருமண முறிவை கண்ணீரில் கரைந்த இரவுகள் என்ற கட்டுரைத் தொடராகவும், பில் கிளிண்டன் அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த போது வெள்ளை மாளிகையில் மொனிக்கா என்ற பெண்ணுடன் கொண்டிருந்த காதல் விவகாரத்தை மொனிக்கா என் மொனிக்கா என்ற கட்டுரைத் தொடராகவும் தினமுரசு வாரப் பத்திரிகையில் இரா. பத்மநாதன் அழகுறத் தமிழில் எழுதியிருந்தார்.

இவைதவிர பிரபல பத்திரிகையாளர் எஸ்.டி. சிவநாயகம் மறைந்ததும், அவர் ஞாபகார்த்தமாக கட்டுரைத் தொடர் ஒன்றை இரா. பத்மநாதன் எழுதியதோடு, பத்திரிகைத்துறை,

அரசியல், மற்றும் தென்னிந்திய சினிமா உலகுடன் தாம் கொண்டிருந்த தொடர்புகளையும் அவர் அத்தொடரில் அரிதான பல புகைப்படங்களுடன் நினைவு கூர்ந்திருந்தார்.

நல்ல தேகாரோக்கியத்தோடு இருந்த காலப்பகுதியில் கொழும்பில் இடம்பெறும் இலக்கியக்கூட்டங்கள், சமய, கலை, கலாசார நிகழ்வுகளில் இரா. பத்மநாதன் பங்குபற்றிச் சிறப்பித் திருந்தார்.

வடக்கு-கிழக்கு பிரச்சினை முறுக்கேறியிருந்த காலத்தில் இந்தியாவில் தங்கியிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளின் நலன் பேணும் பணிகளிலும் இரா. பத்மநாதன் தன்னை அர்ப் பணித்திருந்தார். நல்ல விடயங்களை, ஆரோக்கியமான கருத்துக் களைத் தகவல்களை வாசகர்களுக்கு அள்ளித் தர வேண்டு மென்ற அவா இரா. பத்மநாதனிடம் எப்போதும் காணப்பட்டி ருந்தது.

தமிழ் ஊடகத்துறையைப் பொறுத்தவரை ஒரு பொக்கிஷ மாகவே விளங்கிய இரா. பத்மநாதனின் வாழ்க்கை, ஊடகத் துறையைச் சேர்ந்த எதிர்காலச் சந்ததியினருக்கு ஒரு கலங் கரை விளக்காகவே விளங்குகின்றது.

அனந்த பாலகிட்ணர்

(தினகரன் - ஏப்ரல் 24, 2005, பத்திரிக்கையிலிருந்து)



# பல்கலை விற்பன்னர்

எனது தந்தையும், இலங்கை பத்திரிகை உலகின் ஜாம்பவானுமாகிய அமரர் எஸ்டி. சிவநாயகத்துடன் ஆரம்ப காலம் தொட்டு தொடர்புடையவர். அமரர் இரா. பத்மநாதன் அவர்கள். அன்றைய காலகட்டத்தில் மட்டக்களப்பில் அமரர் எஸ்.டி.எஸ் நாடத்தி வந்த சுயமரியாதை இயக்கத்தில் இவரும் ஒரு அங்கத்தவராக இருந்து நடாத்திய போராட்டங்கள் பற்பல அமரர் எஸ்.டி.எஸ் இன் அன்புக்கு பாத்திரமானவர். இதனால் எஸ்டி.எஸ் மறைவையொட்டி முதன் முதலில் அவரது வரலாற்றை தான் நாடத்திவந்த "தினமுரசு" என்ற வார பத்திரிகையில் வெளியிட்டு பலரது பாராட் டையும் பெற்றார்.

இவரை நான் இளம்வயதில் நன்கு அறிந்திருந்தேன் இவர் எங்களது குடும்ப நண்பரும்கூட. என் தாய், தந்தை, "தமிழரசுக்கட்சி" இயக்கத்தில் ஈடுபட்ட காலகட்டத்தில் இவரும் கூட இருந்தார். அந்த நாட்களில் கொட்டாஞ்சேனையிலுள்ள எனது விட்டுக்கு வந்து போவார். எனக்கும் என் தங்கைக்கும் இவர் மீது அன்பு கடந்த பாசம் எங்கள் இருவருக்கும் கதைகள் மகாபாரதத்திலுள்ள கதாபாத்திரங்கள் இராமாயணத் திலுள்ள சம்பாசனைகளை அழகு சுவையுடன் எடுத்துக் கூறுவார். இவரிடம் இன்னுமொரு அற்புதமான கலையும் இருந்தது அவர் பறவைகள், விலங்குகள் போன்று ஒலிஎழுப்பி வியப்பில் ஆழ்த்துவார். பல்கலைவிற்பன்னர்.

**– எஸ். என். உதயநாயகம்**

# பாசம்



1992 சென்னை மைலாப்பூரில் நான் இருந்த வேளை. கொஞ்சம் கஷ்டஜீவனம். அப்பா அடிக்கடி வருவார். இரா. பத்மநாதன் நான் அவரை அப்பா ஸ்தானத்திலேயே வைத்திருந்தேன். ஒரு தந்தையின் பரிவோடும், பாசத்தோடும், இரக்கத்தோடும் என்னோடும் என் பிள்ளைகளோடும் பழகுவார்.

அவருக்கும் கலைத்தொடர்புண்டு. எனக்கும் அந்தப் பைத்தியம் உண்டு. ஆகையால் சினிமா உலகில் நுழையும் வாய்ப்பும் கிட்டியது.

நடிகை சித்தாராவின் மேக்கப் கலைஞராகும் வாய்ப்பும், இன்னும் பல கலைஞர்களின் தொடர்பும் அப்பாவுக்கு ஏற்பட்டது. எதிர் பாராத வரையில் ஒரு படத்தில் சிலகாட்சியில் தோன்றும் வாய்ப்புக் கூடக் கிடைத்தது!



சினிமா சான்ஸ் என்பது நிரந்தரமன்று எப்போதாவது வரும். அப்போதே போயும் விடும்! அந்த வேளை பார்த்து அப்பாவின் மூக்கு வேர்த்து விடும். ஓடோடி வருவார். பணஉதவி செய்வதிலும் ஒரு நாகரிகம் கடைப்பிடிப்பார். வரும்போது கையில் ஒரு பேப்பரோ, புத்தகமோ இருக்கும்.

பலதும் பத்தும் பேசி சர்க்கரை கம்மி போட்ட காப்பி குடித்து விட்டு விடைபெறுவார். மேசையில் அவர் கொண்டு வந்த பத்திரிகையோ புத்தகமோ அப்படியே இருக்கும். பிரித்துப் பார்த்தால் அதனுள் நூறோ இருநூறோ இருக்கும்! இப்படிப் பலமுறை...

காலத்தால் செய்த இந்த உதவி ஞாலம் பெறும். அப்பாவை எப்படி மறப்பேன்? சாந்தி!

**Mrs. PHILOMINA KRISHNAPILLAI**
105-270, TIMBER BANK BLVD
SCARBOROVGH -ONT
MIW 2MI - CANADA
PH : 001 - 416 - 4941379

# மீண்டும் சந்திக்கும் வரை...

மட்டக்களப்பு மாமாங்க பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் இறுதி நாள் அது. சுவாமி தீர்த்தமாடு வதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறது. எங்கும் பக்தர்கள் மற்றும் அடியார்களின் கூட்டம். ஆலயத்தின் முன் மண்டபத்தில் ஒரு இடத்தில் இருந்த சிறிய வட்டம் ஒன்றில் இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் நேரடி அஞ்சல் குழுவினர், அவர் களுடைய ஒலிபரப்பு உபகரண இத்தியாதிகளுடன் பரபரப் பாக சுழன்று கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுக்கு மத்தியில் இவர்களில் ஒருவராய், ஆனால் மிகவும் அமைதியாக, கையில் ஒலிவாங்கியுடன், நடுத்தர உய ரத்தில், மிகவும் சாதுவாக ஒரு மனிதர் நின்று கொண்டிருக் கிறார். சுற்று வட்டாரத்தில் உள்ள எந்தவித பரபரப்பையும் உள் வாங்கிக் கொள்ளாத அவரது வாய் மாத்திரம் மந்திரத்தை உச்சரிப்பது போல் அசைந்து கொண்டிருந்தது.





ஆம், அது உண்மையில் மந்திரந்தான். கிழக்கிலங்கையின் மிகவும் பிரபலமான அந்த ஆலயத்தின், அந்த தீர்த்த திருவிழாவில் கலந்து கொள்ள முடியாமல் போன, அகில இலங்கை வாழ் அனைத்து இந்துக்களையும், வானொலியை செவிமடுக்க, ஈர்த்து வைத்திருந்த அந்த குரல் அப்போது உரைத்தவை எல்லாம் உண்மையில் மந்திரந்தான். அந்த குரலுக்கு சொந்தக்காரர் திரு. இரா. பத்மநாதன் அவர்கள்.

அந்தக்காலத்தில் மட்டக்களப்பை பொறுத்தவரை வானொலிக் கலைஞராக வரவேண்டும் என்ற ஆர்வத்தில் திளைத்திருந்த அனைத்து இளைஞர்களுக்கும் அவர் ஒரு முன்னோடி. இன்று வரை இந்து விழாக்களை அவரைப் போன்று வானொலியில் நேரடி அஞ்சல் செய்ய யாருமில்லை என்று கூறுமளவுக்கு அந்த துறையில் கோலோச்சியவர் அவர்.

அன்று அவரைப் பார்த்தபோது நான் என்னுள் உணர்ந்த ஒரே விசயம் அவர் நெருங்க முடியாதவர். மிகவும் உயரத்தில் இருப்பவர். அவரை ஒரு தடவை தொட்டுப் பார்த்தால் நன்றாக இருக்கும் என்றுதான்.

அந்த அளவுக்கு அவரது குரலும், திறமையும் அவர் குறித்து ஒரு பிரமாண்டமான அந்தஸ்த்தை என்னுள் ஏற்படுத்தி யிருந்தது. ஆனால் தமிழ்நாட்டில் அவரை நான் சந்தித்தபோது நான் பார்த்தது அவரது இன்னொரு பக்கம்.

அது அவரது எளிமையும், பாசத்தையும் மாத்திரம் கொண்டது. குறிப்பாக எனது தந்தையை இழந்து, அவரது இறுதிச் சடங்குகளுக்குக் கூட ஊருக்குப் போக முடியாமல் இருந்த என்னை தேற்றியவற்றில் மிகவும் முக்கியமான பங்கு அவரது அரவணைப்பையே சேரும்.

அன்று ஒலிபரப்பாளராக மிகவும் உயரத்தில் நின்ற அவருக்கும், என்னை தேற்றியபோது அருகில் நின்றவருக்கும் இடையில் இன்றுவரை என்னால் ஒற்றுமையைக் காணமுடிய வில்லை. அந்த அளவுக்கு அவர் ஒரு ஆச்சரியமிக்கவராகவே இறுதிவரை இருந்து விட்டுப் போய்விட்டார்.

ஊடகத்துறையில் எனது பிரவேசம் ஒரு விபத்தாகக் கூட இருக்கலாம். ஆனால் என்னை குட்டிய கைவிரலில் மோதிரம் இருந்தது என்பதை நான் பெருமையுடன் கூறிக்கொள்ளலாம்.





ஆம், எனக்கு தொடர்பூடகத்தை முதன்முதலில் அறிமுகப் படுத்தியவர் பத்மநாதன் அங்கிள்தான். புகைப்படக் கருவியில் எனக்கிருந்த ஆர்வத்தை, என்னிடம் நேரடியாக கேட்காமலேயே அறிந்து கொண்டு, திருவான்மியூர் அஷ்டலட்சுமி கோயிலில் வைத்து புகைப்படம் பிடிப்பது எப்படி என்பதை எனக்கு சொல்லிக் கொடுத்தார். அதற்கு முன்னர் எப்போதாவது ஒரு புகைப்படக் கருவியை நான் தொட்டிருக்கிறேனா என்பது எனக்கு ஞாபகமில்லை.

அன்று அந்த புகைப்படக் கருவியின் ஊடாக எனக்கு அறிமுகமானதுதான் எனது தொடர்பூடக வாழ்க்கை. இன்று லண்டன் வந்த பின்னரும் அதுதான் என்னுடன் தொடர்கிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால், தொடர்பூடகத் துறையில் எனது ஒவ்வொரு படிநிலை முன்னேற்றமும், அவர் தொடர்பில் எனக்கு ஆச்சரியத்தை அதிகரிக்கவே செய்து வந்திருக்கின்றன.

இலங்கை வானொலி, சுதந்திரன் பத்திரிகை மற்றும் தினமுரசு வாரமலர் போன்றவை உட்பட இலங்கை ஊடகங்களுடனான பத்மநாதன் அங்கிளின் தொடர்பைத்தான் பலருக்கும் தெரியும்.

ஆனால் ஆல் இந்தியா ரேடியோ என்ற இந்திய அரசு வானொலியிலும் சிறிது காலம் அவர் செய்தித் தயாரிப்புத் துறையில் பணியாற்றியிருக்கிறார்.

அப்போதெல்லாம் மேற்கு மாம்பலத்தில் இருந்து அதிகாலையில் 12பி பேருந்தை பிடித்துக் கொண்டு காலை செய்தித் தயாரிப்புக்காக இவர் அவசர அவசரமாக ஓடுவது வழக்கம். ரேடியோ சிலோனில் வேலை பார்த்தவர், இப்போது ஆல் இந்தியா ரேடியோவில் வேலை செய்கிறார் என்ற அளவில் மாத்திரமே அவரது வேலையைப் பற்றி அப்போது நான் அறிந் திருந்தேன்.

ஆனால் நான் செய்தித்துறையில் பணியாற்றத் தொடங்கிய வுடன்தான் அவர் செய்த இரண்டு வேலைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டின் தாற்பரியம் எனக்கு விளங்கத் தொடங் கியது.

பொதுவாக வானொலியில் சமூக, கலை, கலாச்சார மற்றும் ஜனரஞ்சக நிகழ்ச்சிகளை தயாரிப்பது என்பதும், செய்திகளை தேடுவது, தேர்ந்தெடுப்பது முதல் அதனை ஒரு செய்தியறிக்கைக்காக தயார் செய்வது என்பதும் வெவ்வேறு திறமைகள் சம்பந்தப்பட்ட விசயங்கள். பொதுவாக இந்த இரண்டு துறைகளிலும் ஒரே நேரத்தில் திறமை பெற்றவர்களை கண்டுபிடிப்பது குதிரைக் கொம்பான விசயம்.





ஆனால் இவரோ இரண்டு வெவ்வேறான நாடுகளின் அரச வானொலிகளின் தேவைக்கேற்ப, அவை எதிர்பார்க்கும் தரத்துக்கேற்ப, இருவேறு திறமைகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ச்சிகளை தயாரிப்பதில் ஈடுபட்டார். இலங்கை வானொலியில் இவர் பெரும்பாலும் தயாரித்தவை சமூக, கலை, கலாச்சார நிகழ்ச்சிகள். ஆனால் ஆல் இந்தியா ரேடியோவில் செய்த பணி செய்தித்தொகுப்பு சம்பந்தப்பட்டது.

தொலைக்காட்சிக்கான பிரதிகளை எழுதத் தெரியா மலேயே தொலைக்காட்சியில் பணியாற்றிக் கொண்டிருப்பவர் களை எனக்கு நன்கு தெரியும். வானொலி பிரதிக்கும், தொலைக் காட்சிப் பிரதிக்கும் வேறுபாடு தெரியாமல் அந்த பணியில் ஈடுபட்டிருப்பவர்களையும் நான் பார்த்திருக்கிறேன். ஆனால் மேடை நாடகம் முதல், வானொலி, தொலைக்காட்சி மற்றும் சினிமா தயாரிப்பு வரை அனைத்துக்கும் பிரதிகளை ஆக்கக் கூடிய மிகச் சொற்பமான இலங்கையர்களில் இவரும் ஒருவர்.

இவர் சிறந்த ஒரு நாடகக் கலைஞர். மட்டக்களப்பில் ஒரு கால கட்டத்தில் மேடையேறிய கண்ணகி நாடகத்தில், கண்ண கியாக நடித்தவர் முன்னாள் அமைச்சர் செல்லையா இராச துரை, அதே நாடகத்தில் மாதவியாக நடித்தவர் பத்மநாதன் அங்கிள்.

கண்ணகியாக இராசதுரை அவர்கள் பேசிய வசனங் களுக்கு நிகராக மாதவியாக பத்மநாதன் அங்கிள் மேடையில் ஆடிய நடனமும் மட்டக்களப்பையே அப்போது கலக்கியது என்று பலர் கூறக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

தினமுரசு பத்திரிகையைப் பொறுத்தவரை, அது ஆரம்ப மானது முதல் இன்று வரை, அது இலங்கை அரசியலில் மிகவும் சர்ச்சைக்குரிய ஒரு செய்தித்தாளாகவே இருந்து வருகிறது. வன்முறைகள் தலைவிரித்தாடும் இலங்கை அரசியலில் அந்த பத்திரிகை சந்தித்த சவால்களும் மிகவும் அதிகம். ஆனாலும் அந்த பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டே இந்த சர்ச்சைகள் அனைத்துக்கும் அப்பாற்பட்டவராக, அனைவராலும் அவரது எழுத்துப் பணிக்காக மதிக்கப்பட்டவராக இருந்து வந்தவர் இந்த இராஜகுமாரன்.

இன்று ஒரு சிறுவர் இலக்கியமாக பரிமளிக்கும் கோதண்டம் எழுதிய கோமகனையும், பெரியவர்களுக்கான சற்றுக் கிளு கிளுப்பாக மொனிக்கா என் மொனிக்கா என்றும் தொடர் எழுதியவரும் ஒருவரே என்று சத்தியம் செய்தாலும் யாரும் நம்பமாட்டார்கள். அந்த அளவுக்கு இந்த இரண்டு ஆக்கங் களும் எழுத்து நடையில் முற்றிலும் வேறுபட்டவை.





அற்புதனின் அரசியல் தொடர் எந்த அளவுக்கு தினமுரசு வாசகர்களை கட்டிப்போட்டு வைத்திருந்ததோ, அந்த அளவுக்கு இராஜகுமாரன் என்ற பெயரிலும் வேறு புனை பெயர்களிலும் பத்மநாதன் அங்கிள் எழுதிய ஆக்கங்களும் அவர்களை ஈர்த் திருந்தன.

இலங்கை வானொலியில் இவர் நடத்திய சிறுவர் நிகழ்ச் சியை, அம்பாரையில் இருந்த ஒலிபரப்பி மூலம் ஒலிபரப்பப் படும், மத்திய அலையின் கரடுமுரடான ஒலிக்கீற்றுக்ளின் தடைகளின் ஊடாக செவிமடுத்துப் பழகியவர்களில் நானும் ஒருவர். அன்று முதல் அவர் வாழ்ந்தவரை அந்த சிறுவர் நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் (எனது மனைவி உட்பட) மாமா... மாமா... என்று பாசத்துடன் அவரை அழைத்ததை நான் பார்த்திருக்கிறேன். என்னையறியாமல் அவர்களுடன் எழுந்த போட்டியுணர்வே, அவரை அங்கிள் என்று என்னை அழைக்க வைத்தது.

இலங்கைத் திருநாட்டின் ஒரு கலை மேடை மட்டக்களப்பு தாயகம். அங்கு அரங்கேறியவர்களில் அவரும் ஒருவர். அந்த மண் அண்மைக்காலமாக சந்திக்கும் இழப்புகள் மிகவும் மோச மானவை. அது அண்மையில் இழந்தவற்றில் அவரும் அடக்கம்.

என்னைப் பொறுத்தமட்டில் என்னுடைய தந்தையாரின் நண்பர்களில் என்னோடு பழகிய, எனக்கு ஆதரவாக இருந்த வர்கள் மிகச் சிலரே அவர்களில் முக்கியமானவர் பத்மநாதன் அங்கிள்.

நான் எனது தந்தையின் இறுதிச் சடங்குக்கு போக முடியவில்லை. எனது ஒரேயொரு தாய்மாமனாரின் இறுதிச் சடங்குக்கும் போகமுடியவில்லை. பத்மநாதன் அங்கிள்... அந்தப் பட்டியலில் நீங்களும் சேர்ந்துவிட்டீர்கள். பாசத்தையும் துணிச்சலையும் கொடுத்த தந்தை, கண்ணியத்தை சொல்லிக் கொடுத்த எனது மாமனார் ஆகியோர் வரும் அதே பட்டியலில் நீங்களும் அடங்கிவிட்டீர்கள்.

கொழும்பில் இருந்தவரை பிபிசியில் புதிய செய்திகளை நான் முந்திக்கொண்டு சொன்னபோதெல்லாம், தொலை பேசியில் உடனே அழைத்து நீங்கள் பாராட்டத் தவறியதில்லை. ஆனால் நீங்கள் இருந்தவரை உங்களுடன் இடக்கு முடக் காகவும், துடுக்காகவும் பேசுவதே எனக்கு வழக்கமாக இருந்தது. எந்த விமர்சனத்தையும் சிரித்த முகத்தோடு நீங்கள் ஏற்பதால், அது எனக்கு வசதியாகவும் இருந்தது.





நீங்கள் மருத்துவ மனையில் இருந்தபோது உங்களோடு முதல் தடவையாக தணிவாக, பரிவாக பேச வேண்டும் போல் எனக்கு தோன்றியது, ஆனால் அதனைக் கேட்கக்கூடிய நிலையில் நீங்கள் அப்போது இருக்கவில்லை. இறுதிவரை என்னால் உங்களுடன் அப்படி பேசமுடியாமலே போய்விட்டது. இது எனது இறுதிவரை என்னுள் ஒரு ஏக்கமாகவே, தொடரப் போகிறது.

சரி என்ன செய்வது, பரவாயில்லை பல்துறை கலைஞரே, தொடர்பூடக உலகில் இது எல்லாம் சகஜம்தான். ஆகவே வழமைபோல மீண்டும் சந்திக்கும்வரை தற்போதைக்கு விடை பெறுவோம்.

அன்புடன்

**பூ. சீவகன்,** BBC

# The 'Vaanoli Mama' I knew

It was in June 1986 that I began to work with OfERR/ProTEG as a volunteer. If my memory serves me right, the office was situated on the second floor of an apartment building on Montieth Road. I vividly remember the day I reported for work. I was assigned a room in which Mr. R. Pathmanathan or fondly referred to as 'Vaanoli Mama' by all those working in the office, was in charge of documentation.

The other person in the room was Mr. Srinivasan. On that day Mr. Pathmanathan had a newspaper in his hand and was agitatedly going through a list of names in the pater. After the formalities of introduction was over he came to me and showed the list and said "what an atrocity? See the Sri Lankan armed forces have once again gone on the rampage and killed more than 36". pointing to a name on the list he said "I knew this man.





He was such an innocent man and they have killed him too". I asked him if he was a friend or a close acquaintance of his. He replied and said, he was just a humble worker in a school working as peon.

Nevertheless a close friend said pathmanathan. That was the cablibre of the man. No wonder R. Pathmanabhan was a 'mama' (uncle) to one and all. He moved with the high and mighty but never lost the common touch.

He continued to work in OfERR up to 1992 before deciding to go back to his homeland. He was a mentor to all who sought his wise counsel. Always ready to help any one who sought his help. He was a person who was loved by all. He never turned anyone away. He was a father figure and was a great help to the organisation on the advocacy work.

He was the first choice to be sent to the government offices if and when a difficult problem had to be solved. In addition to his persuasive skills he had the capacity to spell out the needs of the organisation with all patience, skill and sagacity.

Diabetes was an irritant to him but he bore the daily punch of insulin into body in a matter of fact way. But he carried on. Rain or sunshine he would be the first to be in office. Not only was he a friend to many but was also a perfect example of a person who followed the rules and regulations. Never faltering in upholding the good principles.

We send his three sons and their families our deepest sympathies and condolences.

**- Rev. Sam Coilpillai.**



# முத்திரை பதித்த பின் முத்தி

மட்டு நகர் மாமனிதர் இரா. பத்மநாதன் மறைந்தாலும் மறக்க வொண்ணாத்தமிழ்த்தாயின் புதல்வன். இளையோரை ஊக்குவித்துச் சாதனைகள் படைத்தார். ஈழத்தாய் மனம் மகிழ அணிகள் பல தந்தார். சிறு மேடை நாடகங்கள் தென்மோடிக் கூத்தில் சிறு வயது முதலே ஆர்வமுடன் இருந்தார். இராமர் கதை காட்சிகளை மெய்மறந்து ரசித்தார்.

கம்பர் விழாக்கான காரைக்குடி சென்றார். அனுமானின் பாத்திரம் பணி செய்யும் எந்திரம் ஆஞ்சனேய பக்தனாய் மாற்றிவிட்ட மந்திரம். இளவயது முறுக்கு ஆன்மீக வெறுப்பு ஈவேரா இனிப்பு இளைஞர் அணிவகுப்பு தமிழகத்துத் தாக்கம் திராவிடத்தில் நாட்டம் மூன்று தமிழோடு கலை வடிவம் கண்டார். மேடைகளில் ஏற்றிய பல சாதனைகள் செய்தார். பத்திரிகையாளன் பத்மநாதன் என்று பார் போற்ற வாழ்ந்தார், பாராட்டும் பெற்றார்.





திரைப்படவிமர்சனம் அரசியல் மற்றும் தமிழ்நாட்டு நிகழ்வுகளை சுதந்திரனில் தந்தார். மூன்றாலங்கண்டடியான், பேய்க்கதைகள் படைத்தார். மட்டு நகர் மாந்திரீக மகிமை பல சொன்னார்.

கலைப்போரின் களமாக வானொலியில் இணைந்தார். கலைத் தாகம் தீரப் பல புதுப் புனல்கள் தந்தார். 'மருமக்காள் வணக்கம்' சிறுவர்மலர் புனைந்தார். மாமாவாய் நின்று மழலைக்கலை வளர்த்தார். நேரடி ஒலிபரப்பாய் கோவில் பல சென்றார். நடப்பதை நிஜமாக நாம் உணரவைத்தார்.

கோதண்டராமனாய் தினமுரசில் வந்தார். இராஜகுமார னாய் வாசகருள் நின்றார். சகலகலா வல்லவனாய்த் தலை நிமிர்ந்து நின்றார். கவிஞராய் பாடகராய் நடிகரென மிளிர்ந்தார். குரல் மாற்றிப் பேசிக் குதூகலிக்க வைத்தார். குட்டிக்கதை யாலே மனுநீதி சொன்னார். ஆற்றோட்டமான தெளிவான நடை யால் அரிய பல செய்திகளை அழகாகத் தந்தார். அடுக்கு மொழிபேசி அனைவரையும் கவர்ந்தார்.



மிடுக்கான மாதவி நாட்டியமும் தந்தார். ஆசியநாடுகள் பலகண்டு தெளிந்தார். அயல்நாட்டுத் தமிழகத்தை உறவென்று கொண்டார்.

ஆங்கில ஆசானாய்ப் பணியாற்றத் தொடங்கி அமெரிக்கத் தமிழ்த் துறையின் தலைவரென உயர்ந்தார். ஈழத்து ஏதிலியர் துயர் துடைத்து வாழ்ந்தார். இந்திய வானொலியில் கடமைகளும் செய்தார். நினைத்ததைச் சாதிக்க நோய்நொடிகள் குறை அல்ல முனைப்புடன் உழைக்க வயதும் ஒரு தடைஅல்ல கருமமென வந்தால் கண்துஞ்சமாட்டாய் மண்ணில் பிறந்ததற்கு அர்த்தங்கள் கண்டார் முத்திரைகள் பதித்தே ஈசனுடன் கலந்தார்.

**– இரா. தெய்வராஜன்**

# தோடக்கத் தோண்டரின் விடுதலை உணர்வு தோய்யாது தோடர்ந்து நடக்க...

மறவன்புலவு க. சச்சிதானந்தன்

கண்ணால் காண முடியாதது, காதால் கேட்க முடியாதது, மூக்கால் முகர முடியாதது, வாயால் முழுமையாக விளக்க முடியாதது, தொட்டுப் பார்த்துத் தெரிந்து கொள்ள முடியாதது, ஆனால் உள்ளத்தால் நன்றாக உணரக்கூடியது; அதுவே விடுதலை.

ஐம்பொறிகளுக்கு அப்பாலுள்ளதால், ஐம்புலன்களுக்கும் எட்டாததாதல், பலருக்கு விடுதலை என்னவென்றே தெரிவதில்லை. புலன் வழி நுகர்ச்சியில் மூழ்கி, அந்த நாட்டத்திலும் மோகத்திலும் ஆழ்ந்து, அடிமையாக வாழ்கிறோம் என்ற உணர்வே இல்லாமல் ஈழத் தமிழர் வாழ்ந்த காலத்தில் விடுதலை உணர்வை ஊட்டி, அடிமை விலங்குகளை அறுக்க வழிகள் சமைத்தவர் தந்தை செல்வநாயகம்.

1949இல் தமிழரசுக் கட்சியைத் தொடங்கிய தந்தை செல்வநாயகத்துக்கு உறுதுணையாக இருந்த பலருள் மட்டக் களப்பு, திரு. இரா. பத்மநாதனும் ஒருவர்.



கொழும்பு அரசாங்க எழுதுவினைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற தொடக்கவிழாவில் கலந்து கொண்டார். தமிழரசுக் கட்சியின் உண்மைத் தொண்டர்களுள் ஒருவராய் இருந்த அவர், கிழக்கிலங்கையில் தமிழரசுக் கொள்கைகளை வளர்த்து வந்தார்.

விடுதலை பெற்ற மக்களாகத் தமிழர் வாழவேண்டும் எனத் தந்தை செல்வநாயகம் கூறிய பொழுது, வருவாயிலும் நுகர்ச்சியிலும் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்தியோர் தந்தை செல்வநாயகத்தை எள்ளி நகையாடினர்.

வரண்ட பூமி, மழை குறைந்த நிலம், பனை மரங்களே வளரும் தரவை வெளிகள், இதுதான் ஈழம். தேயிலைத் தோட்டம், இரப்பர் தோட்டம், தென்னை மரங்கள் இவை நிறைந்த செழிப்பான நிலம் இலங்கையின் ஏனைய பகுதிகள். பொருளாதாரத் தன்நிறைவு காண முடியாதே எனக் கூச்சலிட்ட படித்த ஈழத்தவரிடையே தந்தை செல்வநாயகம் தனி ஒருவராகி நிமிர்ந்து விடுதலை முழக்கமிட்ட தலைவரானார். அவரின் முதனிலைத் தொண்டர்களுள் ஒருவர் திரு. இரா. பத்மநாதன்.

கொள்கைத் தெளிவுடன் தமிழரின் விடுதலையை, அதன் மூலம் மனித விடுதலையை, முன்னெடுத்துச் சென்றவர் திரு. இரா. பத்மநாதன்.

1960ஆம் ஆண்டில் சென்னை தேனாம்பேட்டையில் சாமாசு விடுதியில் முதன்முதலாக அவரைச் சந்தித்தேன். கவிஞர் காசி. ஆனந்தனும் அவரும் அருகருகான அறைகளில் தங்கி இருந்தனர்.

1996இல் மட்டக்களப்புப் பேருந்து நிலையம் அருகே கடைசியாகச் சந்தித்தேன்.

ஒருநாள் அவரது அருமை மகன் திரு. காண்டீபனை என்னிடம் அழைத்து வந்து, வளர்த்து விடுங்கள் என்றார். கணினியிலும் ஒளிப்படக் கலையிலும் செம்மாந்து வளர்ந்துளார் திரு. காண்டீபன். அவருக்கு இணையாக வளர்ந்துள்ளவர் திருமதி பானுமதி காண்டீபன். தமிழர் விடுதலை அடைய வேண்டுமென்பதில் தந்தையை ஒத்த தனயன் திரு. காண்டீபன்.



திரு. இரா. பத்மநாதனுக்கும் எனக்கும் 45 ஆண்டு கால இடையீடற்ற தொடர்பு; எம் இருவரையும் இணைத்த தொப்புள் கொடி விடுதலை; தமிழர் விடுதலை. இறுதிவரை அவர் தெளிவாக இருந்தார், உறுதியாக இருந்தார், விலைபோகாதிருந்தார். பதவிக்காக, பொருளுக்காக, நுகர்வின்பத்துக்காக அவர் விடுதலை வேள்விக்குள் நுழையவில்லை. தியாக உணர்வுடன், ஈகை நினைவுடன் வாழ்ந்தவர். கடைசிவரை அவ்வாறே வாழ்ந்தார்.

மறைந்தார் என்ற செய்தி தெரிந்ததும் அழுவதைத் தவிர வேறென் செய்வேன். மென்மையானவர். மேன்மையானவர், விடுதலைக்கு உண்மையானவர், பழகுவதற்கு இனிமையானவர், பார்வைக்கு எளிமையானவர், கிழக்கிலங்கையின் வலிமையானவர், எம்மை விட்டுப் பிரிந்தார். அவர் உளத்திருத்திப் பணி பெருக்கிய ஈழத் தமிழர் விடுதலையை முன்னெடுத்துச் செல்வதே அவருக்கு நாம் செய்யும் கைமாறும் நினைவுப் போற்றுதலுமாகும்.



# பெரியப்பா பிரிந்ததேனோ

தண்ணளி சேர்ந்த நகையினை மலரும்
தண்ணினோர்ப் பிணிக்கும் நகையுறு முகமும்
சாந்த குணமும் தனித்துவ நடையும்
வேர்தருப் போன்ற விளங்கு நல்வடிவும்
அடக்கமும் பொறுமையும் அமைந்த சீராளன்

அடங்கிக் கிடந்த அந்நிலை கண்டு
சொல்லொணாத்துயரில் சோர்ந்துளங்கலங்க
ஒல்லையிற் பிரிந்தனை யோயெனக் கதறிப்
பொறியெலாங் கலங்கிப்பூமியில் உருண்டு
அறிவுமயங்கி அருகினிற் கிடந்தோம்

சடகோபன் 'சக்கோ' சுமதி 'டுமதி'
காயா 'கோயா' பிரவினா 'லெட்சுமி'
பிரதிபா 'வண்டுருட்டி' என்றும் ரவி என்றும்
அழைத்தீரே பெரியப்பா!



இனி எங்களை யார் அழைப்பாரோ
தலையிலடித்து தவிப்பதைக் கூட்டி
நிலைகுலைந் தழுது நெடுமூச் செறிந்து
கண்ணீர் சிந்தி கவலையில் ஆழ்ந்து
கண்ணினால் என்றுகாண்போம் எனவுமே கதறி
ஐயகோ அப்பாவின் பந்தபாசம்,

அறிவு தெரியாத எங்களுக்குத் தங்களின்
பாசம் நீடிக்கும் எனநினைக்க
காலன் விரைந்து உனை எடுத்தானென்னவோ?

மெய்யுற அணைத்துத் தூக்கி
வேதனை யாவும் போக்கி
செய்யதாய் வருடி உன்னை
சீருடன்காத்த எம்மை
பையவே மறைந்திட்டாயே

பாவி நாம் எனப்புலம்பி
இனமது கூட இன்று
படமானாய் பெரியப்பாவே
மனமது பொறுக்குதில்லையே





பெரியப்பா என்செய்வோம் நாம்
வினையது ஏதுசெய்தோம்
விளம்புவாய் பெரியப்பாவே
தினமது தூக்கிஎம்மை
இறுகவே அணைத்த உன்னை
எண்ணியே ஏங்குகின்றோம்
எங்களின் பெரியப்பாவே


வண்ணமா முகத்தைக்காண
வாடினோம் பெரியப்பாவே
என்னினிச் செய்வதுண்டோ
என் செய்வோம் பெரியப்பா நாம்
அருமையாம் பெரியப்பா உன்
ஆசைகொள் வடிவாய்வந்து
தீர்ந்த நன் நாளை எண்ண
திகைக்கிறோம் பெரியப்பா நாம்
கருணையின் வடிவாய் வந்து
கரங்களால் அணைத்து மோந்து
பெருமையாய் வளர்த்து விட்ட
பெரியப்பா பிரிந்ததேனோ?

**– உன் செல்லக் குழவிகள்**

போட்டி பொறாமைகளும்
பொய், சூழ்ச்சி, சூதுமின்றி
வையத்துள் வாழ்வாங்கு
வாழ்ந்து வானுறையும்
தெய்வத்துடன் கலந்து இன்று

நாட்கள் முப்பத்தொன்றென்ன
ஆண்டுகள் முப்பத்தோராயிரம்
ஆயிடினும் உங்கள் நினைவு
எமை விட்டு நீங்காது உங்கள்
முகத்தில் கோபத்தை நாம்
பார்த்ததில்லை யாரையும்
சினந்து பேசியதையும்
யாமறியோம் பண்பிற்கு
இலக்கணமாய், பாசத்தின்
உறைவிடமாய் வாழ்ந்திட்டீர்








இப்புவியில் உங்கள்
பொய்யுடல் மறந்திடினும்
புகழ் உடம்பு மறைந்திடாது
கோதண்டம் ஏந்திய கோடிகனைப்
படைத்திட்ட கலைஞனே உங்களுக்கு
சாவில்லை எஞ்ஞான்றும்
இப்புவி உள்ளவரை வாழ்ந்திடுவீர்

எம் நெஞ்சில்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இப்படிக்கு
**பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்**

# சுயவிவரக் கோவை

| | | |
|---|---|---|
| முழுப் பெயர் | : | இராசதுரை பத்மநாதன். (இரா. பத்மநாதன்) |
| புனை பெயர்கள் | : | இராஜகுமாரன், ஈழத்தரசன், மூன்றாலங்கன்றடியான், எழிலோன், வசந்தா, வானொலி மாமா. |
| பிறந்த இடம் | : | மட்டக்களப்பு நகர் |
| வாழ்ந்த இடம் | : | கஞதாவளை, களுவாஞ்சிக்குடி |
| பிறந்த திகதி | : | வயது 73; ஆண்டு : 1929; மாதம் : ஜூலை; திகதி : 19 |
| கல்வித் தகமை | : | சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரம் (1949) |
| படித்த பாடசாலை | : | இராமகிருஷ்ண சங்க ஆனைப்பந்தி ஆண்கள் பாட சாலை, மத்திய கல்லூரி, சிவானந்த வித்தியாலயம், அரசினர் கல்லூரி, மட்டுநகர். |
| ஆற்றிய பணிகள் | : | 1. ஆங்கில உதவி ஆசிரியர் (1950-1954)<br>மெ.மி.பாடசாலை - கிரான்குளம்,<br>மெ.மி.பாடசாலை - குருக்கள்மடம்,<br>இராமகிருஷ்ண சங்கப் பாடசாலை - களுதாவளை. |

**1942 :** 13வது வயதில் தமிழ்நாட்டிலிருந்து வெளியான ஹனுமான் வார ஏட்டில் / பாப்பா மலர் பகுதியில் என்னால் உருவாக்கப்பட்ட கவிதை பிரசுரமானது. இதற்காக அப்போது ரூபா. 3.50 (ரூபா மூன்று சதம் ஐம்பது) சன்மானமாகக் கிடைத்தது. இந்த உணர்வு நான் எழுத்துத்துறையில் காலடி பதிக்க வழி கோலியது.

**1955–1956 :** வீரகேசரி (தினசரி) அதிபர் திரு. பி.பி.ஆர்.எஸ். செட்டியாரின் அந்தரங்கக் காரியதரிசியாகவும், (1955-1957) வீரகேசரி உதவி ஆசிரியராகவும் பணியாற்றியமை. தென்கிழக்கு - தூரகிழக்கு நாடுகளுக்கான 9 மாத சுற்றுப்பயணம் மேற்கொண்டமை.

**1958–1961 :**

1. சென்னை மாநகரில் தென் இந்திய சினிமா பத்திரிகை எழுத்தாளர் சங்க செயற்குழு உறுப்பினர்.

2. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதி

3. வீரகேசரி, தினகரன் மற்றும் சுதந்திரன் வார ஏடு ஆகியவற்றுக்கு தமிழ் நாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்படத்துறை தகவல்களை சேகரித்து அனுப்பியமை. திரைப்படக் கலைஞர்களுடனான தொடர்பு.

4. கண்ணதாசன் புரொடக்ஷன்ஸ் - சிவகெங்கைச்சீமை, கவலை இல்லாத மனிதன் ஆகிய திரைப்படங்களில் உதவி ஒளிப்பதிவாளர்.

5. பத்மா ஃபிலிம்ஸ் அன்புக் கோர் அண்ணி படத்தில் உதவி இயக்குநர்.

6. சிவாஜி கணேசன் நடித்த பாசமலர் திரைப்படத்தில் சிறுபாகமேற்று கோஷ்டி நடனம் ஆடியது.

**1962 – 1966 வரை :** சுதந்திரன் வார ஏட்டின் இணை ஆசிரியர்

**1967 – 1969 :** அமெரிக்கத் தூதரகத்தின் ஓர் அங்கமான அமெரிக்கத் தகவல் நிலைய USIS தமிழ் பிரிவுக்குப் பொறுப்பாளர். அமெரிக்கச் செய்தி (தமிழ்) மாத இதழின் ஆசிரியர்.

**1969 – 1984 ஜுலை வரை :** இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ் சேவையில் நிகழ்ச்சித் தயாரிப்பாளர், வானொலி நாடகங்கள், உரைச்சித்திரங்கள் எழுதியமை பங்கேற்று நடித்தமை.

சமய சம்பந்தமான, மற்றும் அரசரீதியான நேரடி ஒலிபரப்புகளில் பங்கேற்றமை.

வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் ஒலிபரப்பான சிறுவர் மலர் நிகழ்ச்சி களைத் தொகுத்துத் தயாரித்து வானொலி மாமா என்ற புனை பெயரில் வழங்கியமை.

**1984 முதல் 1992** : சென்னை வாசகம், கலை உலகம், திரைப்படத் துறைத் தொடர்புகள், தமிழ்நாட்டுப் பத்திரிகைகளுக்கு சிறுகதைகள், கட்டு ரைகள், கவிதைகள் பங்களிப்பு.


ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழக உளவள ஆற்றுப்படுத்தல் பிரிவின் பிரதம ஒருங்கிணைப்பாளர். பத்திரிகைகளுக்கு புகைப்படங்கள் பிடித்து கையளித்தல். ஆல் இந்திய ரேடியோ (சென்னை) செய்திப் பிரிவில் பகுதி நேர செய்தி ஆசிரியர்.


**1993 முதல் 1999 வரை** : தினமுரசு வாரமலரின் கௌரவ ஆசிரியர். தினமுரசு பத்திரிகையில் பணிபுரிந்த காலத்தில், எம்.ரி.வி. தொலைக் காட்சியில் வாரந்தோறும் இந்தியில் ஒளிப்பரப்பான 94 அங்கங்களைக் கொண்ட தொடர் உரையாடல்களை தமிழில் மொழிபெயர்த்து வெளி யிட்டமை.

இராமாயண காப்பியத்தை இலகு தமிழில் வாரா வாரம் எழுதிப் பிரசுரித்தது. இத்தொகுப்பினை இந்து கலாசார அமைச்சு கோதண்டம் ஏந்திய கோமகன் என்ற பெயரில் 640 பக்கங்கள் கொண்ட நூலாக வெளியிட்டமை. வேதாகமம் - பைபிள் பழைய புதிய ஏற்பாடுகளை வாராவாரம் 110 அங்கங்களாக வாரந் தோறும் பிரசுரித்தமை.

இதனை நூலுருவில் அச்சுப்பிரதியாகத் தொகுக்கும் பணியை கனடா - டொரண்டோவில் வாழும் தமிழறிஞர் திரு. க. செல்வராச கோபால் அவர்கள் ஏற்றுள்ளார். ஆரம்பப் பணிகள் முடிவடைந்ததும் இதனை பலவர்ணப் படங்கள் கொண்ட நூலாக வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**கிடைத்த விருதுகள் :** 1992 - கலைவாரிதி - கிழக்கிலங்கை பத்திரிகைச் செய்தியாளர்கள் சங்கத்தின் சார்பில் அமரர் செழியன் பேரின்பநாயகம் அவர்கள் தலைமையில் அமரர் தமிழறிஞர் எஃப்.எக்ஸ்.சி. நடராஜா அவர்கள் வழங்கினார். 1995 - கலைமணி - இந்து கலாசார திணைக்களத்தின் சார்பில் அமைச்சர் லட்சுமன் கதிர்காமர் வழங்கினார். 1998 கலாபூஷணம் - கலாசார அமைச்சர் திரு. லட்சுமன் ராஜபக்ஷ வழங்கினர்.













இராஜ குமாரனின்
கோதண்டம் ஏந்திய கோமகன்
வெளியீடு
14-08-2000 மாலை 4.30







எண்ணத்தில், சொல்லில், செயலில், அன்பினை, பிறர் நலம் பேணும் பண்பினைச் செயல்படுத்துவது முக்திக்கு உரிய எளிய நல்வழி என்று பகவான் சொல்கிறார். உங்களது வாழ்க்கை அப்படிப்பட்ட அன்பு நிறைந்த வாழ்க்கையாகவும் நீங்கள் தன்னலமற்ற சேவை செய்பவர்களாகவும் வாழுங்கள். அப்படிப்பட்ட வாழ்க்கையே என் உபதேசத்தின் செயல் விளக்கம். அதுவே நீங்கள் வாழ்க்கை விளையாட்டின் வெற்றி இலக்கான மோக்ஷத்தை அடையும் ராஜபாட்டை (Royal Road) ஆகும், என்கிறார் பகவான்.

ஒவ்வொரு நாளையும் அன்புடன் துவக்கிடுவோம்!
ஒவ்வொரு நாளையும் அன்பில் செலவிடுவோம்!
ஒவ்வொரு நாளையும் அன்பினால் நிரப்பிடுவோம்!
ஒவ்வொரு நாளையும் அன்புடன் முடித்திடுவோம்!
இவ்வழி நடந்து பொற்பதம் பற்றிடுவோம்!
நல்வழி நடந்து நற்பதம் அடைந்திடுவோம்!

ஜெய் ஸ்ரீசாயிராம்!!!

